


KALKI
28.10.2007
ரூ.8.00
80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...

கலைஞருக்கு நெருக்கடி!





கமல் ஒரு காட்ஃபாதர்!

மனம் திறக்கிறார் கே.எஸ்.ரவிக்குமார்


நேசமிக்க சேவை!
நேர்த்திமிகு கலெக்ஷன்கள்!
என்றும் நேர்மை விலைக் கொள்கையில்
50 வருட
பாரம்பரியத்தின்
அடையாளம்
பரவசமூட்டும் ஆயிரமாயிரம் டிசைன்கள், எண்ணிலடங்கா ரகங்கள்! நீங்கள் நினைத்துக்கூட பார்த்திராத புத்தம் புதிய கலெக்ஷன்களை - தி சென்னை சில்க்ஸ் ன் ஜுவல்லரி மஹாலில் வாங்கி மகிழுங்கள்.
தி சென்னை சில்க்ஸ்
ஜுவல்லரி மஹால்
இந்தியாவின் தன்னிகரற்ற தங்கமாளிகை
தி. நகர், சென்னை 17. Ph: 044 - 24330888
கடையுடன் விசாலமான கார் பார்க்கிங் | ஞாயிறு கடை உண்டு
Shop online at www.ktmjewellery.com



ஸ்பீடு போஸ்ட்

தி.மு.க.வைப் பார்த்து காங்கிரஸ் பயப்படவில்லை எனக் கூறி, பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டியிருக்கிறார் இல.கணேசன்.

- சி.மகேஷ், திருச்சி

முஷாரஃபின் வெற்றி இந்தியாவுக்குப் பிரச்னைகளை

அடிச்சா

'லாலிபாப்' கார்ட்டூன் நச் சிரிப்பை வரவழைத்தது.

- எஸ்.ஜெயசித்ரா, நெல்லை

'சிறுபான்மை அரசின் கொடுங் கோன்மை' தலையங்கம் முதல்வரின் தவறுகளை இடித்துரைக்கிறது.

- கல்யாணி பாலு, திருநெல்வேலி

- எஸ்.சங்கரதாஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்

அன்னதானத்தைவிடச் சிறந்தது, அனாதையாக இறந்தவர்களை அடக்கம் செய்வது. அதைச் செய்யும் அர்த்தநாரி பாராட்டுக்குரியவர்.

- எஸ்.கோபாலன், நங்கநல்லூர்

'மன அடக்கமே நாட்டை உயர்த்த முடியும்' என்கிற தலையங்கம், சரியான நேரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

- பி.ராகவன், சென்னை - 44

'கலைஞர் கோடிக்கணக்கான தமிழர் இதயத்தில் இடம்பெறுவார்' என்று தராக 'முத்திரை'யான பதிலளித்து அசத்திவிட்டார்

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

- அ.சுகுமார், காட்டுக்காளூர்

ஒரு 'குறைகூடக் கூறாமல் மலைக் கோட்டை' விமர்சனத்தை எழுதி படத்தைத் தூக்கிவிட்டீர்கள்! விஷாலுக்கு மச்சம்தான்!

- டி.கே.சுப்பிரமணியன், திருப்பரங்குன்றம்

சினிமா துறைக்குள் நுழைவதற்கு எவ்வளவு கஷ்டங்கள் படவேண்டியுள்ளது?! உதவி இயக்குநராக ஆசைப்பட்டு வந்த பிரசாந்த், சீக்கிரமே இயக்குநராகட்டும்.

- வி.ஆர். ராஜேஷ், சென்னை

கல்கி பெரும் அதிரடி மாற்றங்களுடன் வரப்போகிறது என்பதற்கான அறிவிப்புகள் அதிர வைத்துவிட்டன.

- துரை. ராமகிருஷ்ணன், எருகுடி



வட்டமேஜை

உண்டாக்கும் என்ற கல்கி தலையங்கம் நன்கு சிந்தித்து எழுதப்பட்டிருக்கிறது.

- ரேவதிப்ரியன், ஈரோடு

'கர்நாடகாவில் காமராஜர் ஆட்சி' படித்தேன். குபீர் சிரிப்புதான் வந்தது. சபாஷ் குசும்புராஜ்.

- வே.முருகேசன், சென்னை

நெத்தியடி!

விஸ்வநாதன் ஆனந்தின் ஆதங்கம் நியாயமானது.

- என்.ராகேஷ், திருச்சி

அட்டைப் படக் கட்டுரை மட்டுமல்ல, பொருத்தமான அட்டைப் படமும் அழகு!

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

'இன்டர்நெட் இருக்கும்போது இனி என்ன கவலை' என அசிரத்தையாய் இருக்கும் பெற்றோருக்கு 'ஆன்லைன் மாப்பிள்ளை ஆபத்தா...?' ஓர் எச்சரிக்கை. கல்கி அடிச்சா நெத்தியடி தான்.

- ராஜிராதா, பெங்களூர்

எம்.ஜி.கன்னியப்பனின் 'வைதேகி காத்திருந்தாள்' கதை, ஒரு குறும்படத்தைப் பார்த்த உணர்வை ஏற்படுத்தியது!

- சு.ஸ்ரீகாந்த், சின்ன சேலம்

உபவாசம் இருத்தலை உபதேசிக்கும் காஞ்சிப் பெரியவரின் 'அருள்வாக்கு' வாரம்தோறும் எங்களுக்கு வரப்பிரசாதம்!

- எஸ்.ஏ.கேசவன்,
கு.கழுகாசலபுரம்

தனக்கு சுக்ரதிசை ஆரம்பித்துவிட்டது எனக் கூறும் விஜய டி.ராஜேந்தர், அரசியல்வாதிகளின் சனி திசையிலிருந்து மக்கள் எப்போது விடுதலை ஆவார்கள் என்பதையும் சொல்வாரா?

- ஆர்.பி.ஜெயச்சந்திரன்,
பூவாம்பாளையம்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர்:
மு.மாறன்

ஆசிரியர் குழு:
சா.ஜெயராஜ், ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி:
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல்:
044 - 2225 1021

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு:
kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு:
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு:
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி:
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு:
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-
வெளிநாடு (விமானத்தபால்):
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

தமிழ் சினிமாவின் ஹிட் டைரக்டர்கள் வரிசையில் இடம்பெற்றிருப்பவர் கே.எஸ்.ரவிக்குமார். கமல்ஹாசனின் 'தசாவதார' பட வேலைகளில் பிசியாக இருந்தவர், கல்கிக்கென பிரத்யேகப் பேட்டி அளித்தார். அவருடனான சந்திப்பிலிருந்து...

“**நா**ங்க அடிப்படையிலே ரொம்ப வசதியான குடும்பம். எங்க அப்பா பெரிய பிசினஸ்மேன். அக்கா, அண்ணன், தம்பி, தங்கச்சின்னு எல்லோருக்கும் நடுவுல பொறந்தவன் நான். எல்லாரும் படிச்சு முடிச்சு சொந்தமா பிசினஸ், வேலைன்னு செட்டில் ஆக, நான் மட்டும்தான் சினிமா, அது இதுன்னு சுத்திட்டிருந்தேன். இதுல அப்பாவுக்குப் பெரிய வருத்தம். நான் உருப்பட மாட்டேன்னே நினைச்சுட்டார். அப்பல்லாம் அம்மாதான் எனக்கு ஹெல்ப் பண்ணுவாங்க. காலேஜ்ல படிக்கும்போதே ஃபிலிம் ஓவர்சீஸ் பிசினஸை நண்பர்களோடு சேர்ந்து பண்ணிட்டிருந்தேன். கூடப்படிச்ச நண்பன் நாராயணனோட அப்பா ஒரு சினிமா ப்ரொடியூஸர். அவரோட ஷூட்டிங்குக்கு வேடிக்கையா அப்பப்ப போக, டைரக்டருக்கு ஒட்டுமொத்த டீமே கட்டுப்பட்டு நடக்குற விஷயம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது. ஏன் நாமளும் டைரக்டராகக் கூடாதுன்னு தோண, சினிமா எனக்குள்ள படர ஆரம்பிச்சது'' என்று இளமைக் காலத்தை இனிமையாக நினைவு கூர்கிறார் ரவிக்குமார்.

நீங்க யார்கிட்டயுமே உதவி இயக்குநர் வாய்ப்புக் கேட்டுப் போனதில்லையாமே?!

''ஆமாம். எல்லாமே தானாவே தேடி வந்த வாய்ப்புங்க. கிட்டத்தட்ட பத்து வருஷம் அசிஸ்டெண்ட் டைரக்டரா இருந்தேன். ஆனா, நான் வேலை செஞ்ச பல படங்கள் ஓடல. சில படங்கள் இன்னமும்கூட ரிலீஸாகல. இதனாலயே பல பேர் என்னை ராசியில்லாதவன்னு பேச ஆரம்பிச்சுட்டாங்க. ஒரு கட்டத்துல எனக்குப் பயம் வந்துடுச்சு. நாம இப்படியே வீணாப் போயிடுவோமோன்னு ரொம்ப ஃபீல் பண்ணி, 'இனிமே சினிமாவே வேண்டாம்'னு முடிவு பண்ணிட்டேன். அப்பா உதவியோடு ஒரு பிளாஸ்டிக் கம்பெனி ஆரம்பிச்சு அசிஸ்டென்ட் டைரக்டர் வாழ்க்கைலேர்ந்தே ஒதுங்கிட்டேன். அப்பத்தான் விக்ரமன் அவர்களுக்கு 'புது வசந்தம்' புக் ஆக, அவர் ஒரு நல்ல அஸோஸியேட் தேவைன்னு நண்பர்கிட்ட சொல்ல, அந்த நண்பர் என்னை வந்து சேரச் சொல்லி வற்புறுத்தினார். நான் முடியவே முடியாதுன்னு உறுதியா சொல்லிட்டேன். அவர் விடவே இல்ல. அப்புறம் நிறைய கண்டிஷன் போட்டு, வேண்டா வெறுப்பாத் தான் போனேன். ஆனா, விக்ரமன் அவர்கள் என்கிட்ட சொன்ன கதை என்னை அசைச்சுடுச்சு. அந்த அளவுக்குப் பக்காவான, புதுசான ஒரு ஸ்கிரிப்ட் பண்ணி வெச்சிருந்தார். 'புது வசந்தம்' ரிலீஸ் ஆகறதுக்குள்ள அந்தப்



படத் தயாரிப்பாளர் சௌந்தர் சார், அவராவே என்மேல் நம்பிக்கை வச்சுப் படம் தந்தார். இதெல்லாம் எதுக்குச் சொல்றேன்னா, நாவா போய் யார்கிட்டயும் வாய்ப்புக் கேட்காதது திமிர்னால இல்ல. அப்படியே இயல்பா அமைஞ்சு போச்சு. இப்பவும் என்னை யாராவது படம் இயக்கக் கேட்டாத்தான் செய்றேன். நானா போய் யார்கிட்டயும் வாய்ப்பே கேட்டதில்ல. கடவுள் இப்படித் தான் எனக்கு வாய்ச்சிருக்கார் போல.''

அடுத்தவங்க கதைலயே அதிகம் சவாரி பண்றீங்களே ஏன்?

''அதுலதாங்க சுவாரஸ்யம் அதிகம். என் கதைன்னா பலவீனம் இருந்தாலும் காம்ப்ரமைஸ் பண்ணிக்கத் தோணும். அடுத்தவங்க கதையிலதான் புகுந்து விளையாடலாம். ஏன், எதுக்குன்னு ஆயிரம் சந்தேகம், கேள்வி கேட்கலாம். அதுகூட கதை பக்காவா வந்து படம் வெற்றி பெறணும்ங்கற நோக்கத் தோடுதான்.''

இது ரீமேக் சீஸன். நீங்க அது மாதிரி எதுவும் பண்ற ஐடியா இருக்கா?

''நானும் கமல் சாரும் பல வருஷத்துக்கு முன்னாடியே பாலசந்தர் சாரோட படம் ஒண்ணை ரீமேக் பண்ணலாம்னு முடிவு பண்ணி அவரை அணுகினோம். அப்ப அவர் அந்த ஐடியா தனக்கிருக்கறதா சொல்லி முடியாதுன்னுட்டார். நாங்க அப்ப செஞ்சிருந்தா, அதுதான் முதல் ரீமேக் முயற்சியா இருந்திருக்கும். இப்ப நிறைய பேர், நிறைய படம் பண்றாங்க. சிலது நல்லா போகுது; சிலது போகல. ஆனா, அந்த முயற்சியை நான் நிச்சயமா வரவேற்கிறேன். அதைச் சரிவர செய்ய முடியாதவங்கதான் ரீமேக் படங்கள் பத்தி குறை சொல்லிக்கிட்டே இருப்பாங்க.''

கமல்கூட நிறைய படம் பண்ணிட்டீங்க... உங்களுக்கும் அவருக்கும் எப்படி கெமிஸ்ட்ரி ஒர்க்-அவுட் ஆகுது?

''கமல் சார் மாதிரி சினிமாவ நேசிக்கிற ஒரு மனிதரை நான் பார்த்ததே இல்ல. நாம எழுந்திரிச்சு, சாப்பிட்டுட்டு சினிமா செய்வோம்; தூங்குவோம். ஆனா அவர், சினிமாவாவே எழுந்து, சினிமா சாப்பிட்டு, சினிமா செஞ்சு, சினிமாவாவே தூங்கறவர். சம்பாதிக்



கமல் ஒரு காட்ஃபாதர்!


மனம் திறக்கிறார் கே.எஸ்.ரவிக்குமார்

குற பணத்தை சினிமாவுலயே போடற மகத்தான மனுஷன். டெக்னிக்கலாவும் சரி, கற்பனை யாவும் சரி அவரோட ஆளுமை மிகப் பெரியது. தமிழ் சினிமா வோட காட்ஃபாதர்னு அவரை நிச்சயமா சொல்லலாம். இந்த மாதிரி ஒரு நபர் கமர்ஷியல் டைரக்டரான என்கூட சேர்ந்து, தொடர்ந்து படம் பண்றது பலருக்கும் ஆச்சர்யமாத்தான் இருக்கும். என்னை அவரும் அவரை நானும் புரிஞ்சுக் கிட்டிருக்கோம். அந்த அடிப்படை சரியா இருந்தா போதும். எந்த இரு துருவங்கள் வேணா ஒண்ணா இணையலாம். என்கிட்ட என்ன இருக்கோ அதை அவர் மதிக்கறார்; அவரோட ஞானத்தை நான் மதிக்கறேன். மதிப்போட அர்த்தம் புரியறவங்களுக்கு மரியாதையோட மகத்துவமும் புரிஞ்சே இருக்கும். அதை பரஸ்பரம் அன்பால குழைச்சுத் தர்றோம். நல்ல படங்கள் கிடைக் குது. அவ்வளவுதான்.''

சரி, ரஜினி கூடவும் உங்க நட்பு டபுள் ஸ்ட்ராங்காமே...?

''நிச்சயமா. நேர்மைக்கு மதிப்பு தர்றவர் ரஜினி சார். என்னை எப்பவும் 'பாஸ்'னுதான் கூப்பிடுவார். ஏவி.எம்.ல 'சக்திவேல்' ஷூட்டிங்கப்ப அவரோட படமும் அங்கே போயிட்டிருந்துச்சு. யாரோ சொல்லி என்னை வந்து அவராவே பார்த்தார். ரொம்ப நெகிழ்ந்து போயிட்டேன். அதுதான் முதல் அறிமுகம். அதுக்கப்புறம் என் 'சக்திவேல்' படம் பார்த்துட்டு அவர் கருத்தைச் சொன் னார். நான் அவர் 'பாட்ஷா' படம் பார்த்துட்டு வெளிப்படையா எனக்குப் பிடிக்காத சில விஷயங்களைச் சொன்னேன். பலர் என்னை

நான் ஒளிவு மறைவு இல்லாமப் பேசறது ரஜினி சாருக்கு மிகவும் பிடிக்கும். இந்த விஷயம்தான் எங்க நட்பை ரொம்பவே பலமாக்குச்சு!



ஏன் இப்படிப் பண்ணீங்கன்னு திட்டினாங்க. ஆனா ரஜினி சார், நான் உள்ளதை உண்மையா சொன்னதை ரொம்பவே ரசிச் சார். நான் இப்படி ஒளிவு மறைவில்லாமப் பேசறது அவ ருக்கு ரொம்பவே பிடிக்கும். இந்த ஒரு விஷயம்தான் எங்க நட்பை இன்னும் பலமாக்குச்சு. கமல் சார் என்னை 'தெனாலி' படத்தோட தயாரிப்பாளரா இருங்கன்னு சொன்னதும் உடனே ரஜினி சார், 'பாஸ், பெரிய வாய்ப்பு... உடனே ஒப்புக்கங்க'ன்னு ஊக்கம் கொடுத்து, 'தெனாலி'ன்னு படத்துக் குத் தலைப்பும் வெச்சார். அவரோட எல்லாப் பட டிஸ்கஷன்லயும் நான் இருப்பேன். ரெண்டு வாரத்துக்கு ஒரு தடவையாவது மீட் பண்ணிடுவோம். சினிமா, அரசியல், சமூகம்னு நாங்க பேசாத டாப்பிக்கே இருக்காது. மனசுவிட்டுப் பேசுவார். ரொம்ப யதார்த்தமா இருப்பார். தன்னோட நல்ல மனசுக்கு அவர் இன்னும் தொடப்போற உயரங்கள் ஏராளம்.''

தசாவதாரத்துல உங்களால மறக்க முடி யாத அனுபவம்?

''ஒவ்வொரு நாளையுமே என்னால மறக்க முடியாது. இது சாதாரணப் படமில்ல. வழக்கத்துக்கும் மாறானது. ஆனா சராசரி ரசிகனுக்குமானது. 'நவராத்திரி' படத்துலகூட சிவாஜி சார் க்ளைமேக்ஸ்லதான் ஒன்பது கெட்டப்ல வருவார். ஆனா, தசாவதாரத்துல ஒவ்வொரு சீன்லயும் கமல் சார் பல கெட் டப்ல வர்றார். ஆடியன்சுக்குக் குழப்பம் வராம படம் பிடிக்க முடிஞ்ச எங்களால, குழம்பாம இருக்க முடியல. அவரா, இவரான்னு குழம்பித் திணறித்தான் படம் பிடிச்சோம். போட்ட பட்ஜெட்டைவிட மூணு மடங்கு செலவாகியிருக்கு. ஆனா அதைவிட அதிக விலைக்குப் படத்தைக் கேக்கறாங்க. இதுவரை நான் எந்தத் தயா ரிப்பாளருக்கும் சொன்ன பட்ஜெட்லருந்து மிச்சம் பண்ணித்தான் கொடுத்திருக்கேன். முதல் முறையா இவ்ளோ எகிறிடுச்சேன்னு ஃபீல் பண்ணேன். ஆனா தயாரிப்பாளர் ஆஸ்கார் ரவி சார், அதிகமான விலைக்குப் படத்தைப் பலர் கேட்டும் சொந்தமா ரிலீஸ்

பண்ணத் தயாரா இருக்கும்போது, என் ஃபீலிங்கெல்லாம் போன இடம் தெரியல. தமிழ் சினிமா வரலாறுல, தரத்துக்காக கொஞ்சமும் பணம் செலவு பண்ணத் தயங்காத இவரை மாதிரி ஒரு தயாரிப்பாளரை இதுவரை நான் பார்த்ததில்லை; இனியும் பார்ப்பேனான்னு தெரியல.''


நீங்க எடுத்த 'வரலாறு'க்கு ஒரு விருதுகூட கிடைக்காதது உங்களுக்கு வருத்தம் தரலியா?

''அஜீத்தை வச்சு நான் எடுத்த 'வில்லன்' படத்தைத் தயாரிப்பாளர் தமிழக அரசு விருது கமிட்டிக்கு அனுப்பல. அதனால அப்ப எந்த விருதும் கிடைக்கல. அந்தத் தப்பு இந்த முறை நடக்கக்கூடாதுன்னு நானே என் சொந்தச் செலவுல 'வரலாறு' படத்தை கமிட்டிக்கு அனுப்பி வச்சேன். அஜீத் திறமையா நடிச்சிருந்தார், சிவசங்கர் மாஸ்டர் அற்புதமா நடனம் அமைச்சிருந்தார்... ஆனா யாருக்குமே விருது கிடைக்கல. தமிழக அரசின் சிறந்த படங்கள் விருது வாங்கின வெயில், மொழி, பருத்தி வீரன் பத்தியெல்லாம் நான் எதுவும் சொல்லல, வரவேற்கறேன். ஆனா ஒரு சில படங்களுக்கு விருது கொடுத்திருக்காங்க. அது தகுதியானதுதானாங்கறது அவங்களுக்கே வெளிச்சம். கமிட்டியில இருக்குற பலர்கிட்டேயே நானும் 'வரலாறு' இருட்டடிப்பு பத்திக் கேட்டேன். யாருமே 'அப்படியா'ன்னு கேட்டாங்களே தவிர, எந்தப் பதிலுமே சரியா சொல்லலை. எனக்கென்னன்னா, 'வரலாறு' படத்தை கமிட்டி பார்த்துச்சான்னே சந்தேகமா இருக்கு. எல்லாத்துக்கும் மேல, மக்கள் மனசுல 'வரலாறு' சம்மணம் போட்டு உட்கார்ந்ததைவிட வேற என்ன விருது வேண்டிக்கிடக்கு? 'வரலாறு' புறக்கணிக்கப்பட்ட வேதனையில நான் பேசறதா நினைக்கக்கூடாது. நல்ல படங்கள் சிலரால தேங்கிடக் கூடாதுங்கற ஆதங்கத்துலதான் இதைச் சொல்றேன்.''



– **மு.மாறன்**

படங்கள் :
பொள்ளாச்சி சுந்தரம்



சேது சமுத்திரத் திட்டத்தால் வந்த

‘சேது சமுத்திரத் திட்டம்’ அறிவித்த நாள் தொட்டு, புதிய புதிய சிக்கல்கள் வெளியாகிக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த வழியே கப்பல்கள் போக்குவரத்து தொடங்கி விட்டால், மீனவர்கள் தங்கள் மீன்பிடித் தொழிலுக்கு நிச்சயம் பாதிப்பு ஏற்படும் என்கிறார்கள்.

மத்திய அரசு, இப்போதைய திட்டப் பாதையை மாற்றி அமைக்க விரும்புகிறது. அதற்குள் திட்டச் செலவு மதிப்பீடு இன்னும் முப்பது சதவிகிதம் அதிகரித்து விடும் என்கிறார்கள், கப்பல் போக்குவரத்துத் துறையினர்.

ஏராளமான கடல்துறை இன்ஜினியர்களும், நிபுணர்களும் தவிர, கப்பல் போக்குவரத்துத் துறையிலுள்ளவர்களும் பாதுகாப்பு, எல்லை கண்காணிப்பு, பொருளாதாரம் ஆகிய மூன்று விஷயங்களிலுமே இந்தத் திட்டம் தோல்வியைச் சந்திக்கும் என்கிறார்கள்.

மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களுக்குப் போகவும் - திரும்பவும் கப்பல்கள் இனி இலங்கையைச் சுற்றிக் கொண்டு போக வேண்டியதில்லை. அதனால் செலவும் நேரமும் மிச்சம் என்கிறார்கள் இத்திட்டத்தின் ஆதரவாளர்கள்.


மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் டி.ஆர். பாலுவோ, சூயஸ் கால்வாயுடனும், பனாமா கால்வாயுடனும் இதை ஒப்பிட்டுப் பேசுகிறார். இது முற்றிலும் தவறு. 64 கி.மீ. பனாமா கால்வாய், தென் அமெரிக்காவைச் சுற்றிக் கொண்டு கப்பல்கள் கடக்க 22,500 கி.மீ. தூரத்தைக் குறைத்திருக்கிறது. ஆனால், சேது கால்வாய் திட்டமோ, ஒரே ஒரு நாள் பயணத்தையும், சுமார் 500 நாட்டிகல் (கடல்) மைல்களையும் மட்டுமே குறைக்க உதவும். செலவைக் கணக்கிட்டால், இது மிக மிகக் குறைச்சல்.

இருபது வருடங்களுக்கு மேலாக மெர்ச்சன்ட் நேவியில் பணியாற்றிவரும் ஒரு கேப்டன் சொன்னார்: ''இந்தத் திட்டத்தை ஒரு மாலுமியாகத் தீவிரமாக ஆராய்ந்திருக்கிறேன். இது யாருக்கும் பயன்தரப் போவதில்லை. 30,000 டன்னுக்கு மேல் எடையுள்ள கப்பல்கள், இந்தக் கால்வாயைப் பயன்படுத்த முடியாது. காரணம், இங்கு பன்னிரண்டு மீட்டர் ஆழம் மட்டுமே உள்ளது. கப்பலின் அடித்தளத்துக்கும், கடலின் தரைப் பகுதிக்கும் இரண்டு மீட்டர் இடைவெளியாவது இருக்க வேண்டும். பத்து மீட்டர் ஆழம் அளவு நீரில் மூழ்கும் கப்பல்கள் மட்டுமே இதில் செல்ல முடியும். அப்போதும், சாதாரண வேகத்தைப் பாதியாகக் குறைத்துக் கொண்டுதான் 167 கி.மீ. தூரத்தைக் கடந்தாக வேண்டும்.''

சரி, சுற்றுச்சூழலாவது பாதிக்கப்படாமல் இருக்கிறதா?

இந்திய வானிலை ஆராய்ச்சி மையம், பாக் ஜலசந்தியைப் புயல்காலத்தில் மிக அபாயகரமான பகுதி என்று அடையாளம் கண்டிருக்கிறது. 1990-ல் எண்ணெய்க் கிணறு தோண்டும் கப்பல் ஒன்று இங்கே புயலில் சிக்கிச் சீரழிந்தது. அதனால் இலங்கையைச் சுற்றிக்கொண்டு தூத்துக்குடி போவதையே கப்பல்கள் விரும்புகின்றன.

எல்லா கப்பல் நிறுவனங்களுக்குமே இத்திட்டம் பொருளாதார ரீதியாக நன்மை தரும் என்பதை யாரும் ஏற்கவில்லை. 32,000 டெட் வெய்ட் டன்னேஜ் உள்ள கப்பல்கள் மட்டுமே இந்த வழியே போக முடியும். வெளிநாட்டுக் கப்பல்கள் அனைத்துமே



லாபமும் இல்லை!

60,000 டெட் டன்னேஜ் கொண்டதாக இருக்கும். எனவே, அயல்நாட்டுக் கப்பல்கள் இதைப் பயன்படுத்த முன்வராது.

இது திறந்தவழிக் கால்வாய் (ஓபன் வீ வே) அல்ல. அதனால் ஒரு 'பைலட்' தேவைப்படுவார். அவர்தான் பத்திரமாகக் கப்பலை வழிகாட்டிச் செல்ல முடியும். அனுபவம் உள்ள 'பைலட்' கிடைப்பது கஷ்டம். அத்தகையோர் எண்ணிக்கை மிகக் குறைவு. பெரிய பெரிய கன்டெய்னர் உள்ள கப்பல்கள் சிங்கப்பூருக்கும் துபாய்க்கும் இடையில், இலங்கைத் துறைமுக வழியையே விரும்புகின்றன.

ட்ரெட்ஜிங்கில் பராமரிப்பு இன்னொரு பிரச்னை. இதில் இரண்டு வகைச் செலவுகள் இருக்கின்றன. ஒரு தடவை செய்தால் மட்டும் போதாது. தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும். ட்ரெட்ஜிங் நிறுவனத்துக்குத்தான் யோகம்!

தமிழ்நாடு மின்வாரியத்துக்கு நிலக்கரி கொண்டு செல்லும் கப்பல்கள் மட்டுமே பயன்பெற முடியும். ஹால்டியா, பாரதீப், விசாகப்பட்டினம் ஆகிய இடங்களிலிருந்து புறப்பட்டு தூத்துக்குடியில் சரக்கை இறக்கும் கப்பல்களுக்கும், கொழும்பு துறைமுகத்திலிருந்து ஃபீடர் சர்வீஸ் செய்யும் கப்பல்களுக்கும்தான் இது வசதிப்படும். சென்னை துறைமுகத்தின் சமீபத்திய 'பைலட்டேஜ்' சார்ஜைக் கணக்கிட்டால், ஒரு கி.மீ.க்கு 1.11 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். சேது சமுத்திரக் கால்வாய் நீளத் தைக் கணக்கிட்டால், 'பைலட்டேஜ்' 56 கி.மீ. தூரத்துக்கு, குறைந்தபட்சமாக வைத்தாலும் கூட ஒவ்வொரு கப்பலும், இலங்கையைச் சுற்றிச் செல்வதைக் காட்டிலும், எட்டு மடங்கு கூடுதலாகச் செலுத்த வேண்டியிருக்கும்.

தொகுப்பு: **சித்தார்த்**

(தகவல் - நன்றி: 'பிஸினஸ் இந்தியா')



நிலநடுக்கம் தாங்குமா பாராளுமன்றம்?

"இந்தியாவில் 58.6 சதவிகிதப் பகுதி நில நடுக்கத்தால் பாதிக்க வாய்ப்பு கொண்டது.

நிலநடுக்கத்துக்கான வாய்ப்பு எனும் அடிப்படையில் நிலப் பகுதிகளை ஐந்து பிரிவுகளில் அடக்குவோம். ஐந்து என்ற எண்ணில் வரும் பகுதிகளுக்கு நிலநடுக்கம் ஏற்படக்கூடிய வாய்ப்பு மிக அதிகம். இந்தியாவைப் பொருத்தவரை வடகிழக்கில் உள்ள எட்டு மாநிலங்கள், இமாசலப் பிரதேசம், உத்தரகண்ட், கட்ச் ஆகிய பகுதிகள் இந்த ஐந்தாவது பிரிவில் அடங்கும். வாய்ப்புக் குறைவு என்கிற நான்காவது பிரிவில் குஜராத் மட்டுமல்ல டெல்லியும் கூட இடம் பெறுகிறது."

-இப்படி நடுங்க வைக்கும் புள்ளி விவரங்களை அடுக்கினார் வினோத் சந்திர மேனன். தேசியப் பேரழிவு மேலாண்மை அமைப்பின் உறுப்பினர். சென்னைப் பல்கலைக்கழகம் நடத்திய 'பேரழிவு மேலாண்மை' கருத்தரங்கத்தில் கலந்து கொள்ள சென்னை வந்திருந்தவரிடம் பேசினோம்.

"சுனாமியைப் பொருத்தவரை வழக்கத்தைவிட உள்வாங்கும் அலை மிக மிக உயரமாக ஒரு சுவர்போல எழும்பி, மீண்டும் கரைக்கு வந்து, கரையையும் தாண்டிச் சென்று, அங்குள்ள மக்களை அப்படியே உள்ளிழுத்துச் சென்றுவிடும் அபாயம் உண்டு. இதை முன்னோர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

அந்தமான் தீவுகளின் கடற்கரைவாசிகள், திடீரென்று கடற்கரை மணலிலிருந்து பலவித பூச்சிகள் வெளியே வருவதைக் கண்டதும், ஏதோ பெரும் ஆபத்து என்பதை உணர்ந்துகொண்டு, உயரமான பகுதிகளுக்குச் சென்று சுனாமியிலிருந்து தப்பித்துவிட்டார்கள்.

இன்று இந்தியாவில் உள்ள சுமார் 25,000 கட்டடக் கலைஞர்களில் பலருக்கும் நில நடுக்கத்தைத் தாக்குப்பிடிக்கும் நுட்பங்கள்

தெரிவதில்லை.

குறைந்தபட்சம் புதிதாகக் கட்டும் கட்டடங்களிலாவது, நிலநடுக்கத்துக்கு எளிதில் இடிந்துவிடாத தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். இதைச் சட்டமாக்கினாலும் குறுக்குவழியில் அனுமதிபெறும் பொறியாளர்களுக்கு இங்கு குறைவில்லையே!

சரியாகக் கட்டப்படாத கட்டடங்கள் நிலநடுக்கம் உண்டான நேரடிப் பகுதியிலிருந்து தள்ளியிருந்தாலும் இடிந்து விழ வாய்ப்புகள் உண்டு. கட்ச் பகுதியில் ஒருமுறை நிலநடுக்கம் ஏற்பட்டபோது அகமதாபத்தில் வீடுகள் இடிந்து விழுந்ததை நினைவில் கொள்வது நல்லது.

ஆங்கிலேயர் காலத்தில், ஒரு குறிப்பிட்ட அளவில் எடையைத் தாங்கும்படி இரயில்கள் செல்லும் பாலங்களை அமைத்தனர். ஆனால், கடந்த வருடங்களில் இதைப்போல பலப்பல மடங்கு போக்குவரத்து அதிகரித்து அந்தப் பாலங்களின் உறுதி கேள்விக்குறியாகி விட்டது.

'உயிர்நாடிக் கட்டடங்கள்' என்று சிலவற்றுக்கு முன்னுரிமை கொடுத்திருக்கிறோம். ரயில்வே பாலங்கள், குடியரசுத் தலைவரின் மாளிகை, உச்சநீதிமன்றம், பாராளுமன்றம் போன்றவை இதில் அடங்கும். இந்த கட்டட அமைப்புகளைப் பரிசோதித்து, நிலநடுக்கம் உண்டானால் அதை முடிந்தவரை தாக்குப் பிடிக்கும்படி மாற்றியமைக்க நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இவை மட்டுமல்ல, இந்தியாவில் சுமார் முப்பதுகோடி கட்டடங்கள் உள்ளன. இவற்றை மறு ஆய்வு செய்ய வேண்டிய நேரம் இது. இல்லையெனில் விளைவுகள் மோசமானதாகவும் அபாயகரமானதாகவும் இருக்கும்'' என்கிறார் வினோத்.

– ஜி.எஸ்.எஸ்.



கற்றது தமிழ்

பரட்டைத் தலையும் உடைந்த கண்ணாடியுமா ஜீவாவைப் பார்க்கறப்பவே தெரிஞ்சிடுது இது வழக்கமான படம் இல்லைன்னு. தமிழை ரொம்ப ஆர்வமா, விருப்பப்பட்டுப் படிச்சு, அதையே வாழ்க்கையாக்கிக்கிட்ட ஒருத்தனை இந்தச் சமூகம் எப்படிப் புரட்டிப் போட்டு அடிக்குதுன்னு கலாபூர்வமா சொல்லியிருக்காங்க.

மிரட்டியிருக்கார் ஜீவா. பத்தாவது படியிலேர்ந்து சடார்னு பதினெட்டாவது படிக்குத் தாவினா எப்படியிருக்கும்? அப்படியொரு அசுரப் பாய்ச்சல் அவரோட நடிப்புல. பைக் வித்ததுக்காக ரகசியமா கண் கலங்கறது அன்புக்கு உதாரணம்னா, நடுராத்திரி கார்ல வர்ற கால் சென்டர் நபரைக் கலாய்க்கறது ஆக்ரோஷச் சாடல். அழகான அறிமுகம் அஞ்சலி. எதிர்த்த வீட்டுப் பொண்ணு மாதிரி ரொம்பவே யதார்த்தம். 'நெஜமாத்தான் சொல்றியா'ன்னு அவர் ஒவ்வொரு முறை கேட்கும்போதும் 'ஆமா, ஆமா, ஆமா'ன்னு ஜீவாவோட சேர்ந்து நம்ம தலையும் பலமா ஆடுது. தமிழ் வாத்தியாரா வர்ற அழகம்பெருமாளைப் பார்க்கும்போதே மண் வாசம் மணக்குது. நெல்லைத் தமிழில் மனத்தைக் கொள்ளை கொள்றார். கதையிலேர்ந்து கொஞ்சமும் விலகாத கருணாஸோட காமெடி, இயல்பின் இன்னொரு பக்கம்.

யுவன் சங்கர்ராஜா நாளுக்கு நாள் புதுப் புது உயரங்களைத் தொட்டுட்டே போறார். நா.முத்துக்குமாரோட நல்ல பாடல் வரிகள் நாள் கடந்தும் வாழும். அறிமுக ஒளிப்பதிவாளர் கதிர், இயக்குநருக்கு இமயமா கைகொடுத்திருக்கார். காடு, மலை, மேடுன்னு கவிதையாவும் கனலாவும் நகரும் காட்சிகள், நமக்குள்ள ஏற்படுத்துற பாதிப்பு அசாத்தியமானவை. இயக்கம் ராம். எது மாதிரியும் இல்லாம ஒரு புது மாதிரியான சினிமா தந்திருக்கார். பல நல்ல உத்திகளைக் கையாண்டிருக்கறது சுவாரஸ்யமா இருக்கு. அதே நேரத்துல தமிழ் படிச்ச ஓர் இளைஞனோட சமூகக் கோபத்தைப் பதிவு செஞ்ச விதத்துலதான் சில தெளிவின்மை தென்படுது.

தமிழ் படிச்சவனை மனநோயாளி மாதிரி சித்திரிச்சிருக்கறது ஏன்னு புரியல. சின்னச்சின்ன ஃப்ளாஷ்பேக், அப்புறம் பெரிய ஃப்ளாஷ்பேக்னு சொல்றது சராசரி ரசிகனைச் சுத்தல்லவிட்டுக் குழம்ப வைக்குது. 'கால் சென்டர் பெண் தமிழ்ல எழுதிட்டுத் தைரியமா நடக்க முடியுமா'ன்னு கேக்கறதெல்லாம் ஓ.கே. ஆனா, அந்தப் பெண் மேலயே, பாயறது ரசனைக் குறைவு.

சின்னச் சின்ன குறைகள் இருந்தாலும் அழகான காதலை ஆழமா பதிவு செஞ்சிருக்கறது, வறுமையோட கோரத்தாண்டவத்தை வலியோடு சொல்லியிருக்கறதுன்னு படம் பதிவு பண்ணியிருக்கற விஷயங்கள் ரொம்பவே வலிமையானது.

– **மனஸ்வினி**



கல்கி



2007 அக்டோபர் 28
சர்வஜித் ஐப்பசி 11
மலர் : 66
இதழ் : 13

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

காவு கொடுக்கப்பட்ட கௌரவம்!

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் கேரி ஆக்கர்மேன், இந்திய அரசுக்கும் தலைவர்களுக்கும் அறிவுரை கூறியிருக்கிறார்.


''பின்வாங்காதீர்கள்! பிறர் அழுத்தம் கொடுப்பதற்கு அஞ்சி உறுதியை இழக்காதீர்கள். இது போன்ற பிரச்னைகள் ஜனநாயகத்தில் எழுவது சகஜமே. ஆனால், நீதி நல்லவர்களின் பக்கம் இருக்கிறபோது, நெஞ்சுரமும் நற்பண்பும் படைத்தவர்கள் எழுந்து நின்று, தைரியமாக, 'இதுதான் சரி!' என்று அடித்துச் சொல்கிறபோது, அப்பிரச்னைகளுக்குத் தாமாகவே தீர்வு பிறக்கும்.''


அமெரிக்காவுடனான இந்திய அணுசக்தி ஒப்பந்தம் பிசுபிசுத்துப் போனதையொட்டியே ஆக்கர்மேன் இவ்வாறு பேசியிருக்கிறார்.

ஆனால், இந்திய அரசின் தலைமை ஏற்கெனவே பின்வாங்கிவிட்டது! ''என்ன நடந்தாலும் இந்த ஒப்பந்தம் நிறைவேறியே தீரும்'' என்று முன்பு சூளுரைத்த பிரதமர், ''ஒப்பந்தம் நிறைவேறாவிட்டால் குடி முழுகிவிடாது'' என்கிறார் இப்போது! ''இந்த ஒப்பந்தத்தைத் தடுக்க முயற்சி செய்வோர் தேச முன்னேற்றத்தின் எதிரிகள்'' என்று சாடிய சோனியா காந்தி, இன்று கூட்டணி தர்மம் பற்றிக் குழைந்து பேசுகிறார்.

கம்யூனிஸ்டுகள் இந்தப் பின்னடைவைத் தங்கள் வெற்றியாகக் கொண்டாட, கருணாநிதியோ தம்மால்தான் அது விளைந்தது என்று பெருமையடித்துக் கொள்கிறார்!

ஒரு வல்லரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஏதோ ரயில்





டிக்கெட்டை கேன்ஸல் செய்வது மாதிரி ரத்துச் செய்ய முற்பட்டுள்ள அபத்தத்தை ஆக்கர்மேன் சுட்டிக்காட்டித்தான் இந்தியா தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது என்பது மிகப்பெரிய அவமானம். இதனை எதிர்க்கட்சியினர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. பிரதமரும் காங்கிரஸ் தலைமையும் உணர்ந்தாலும் காட்டிக்கொள்ள முடியவில்லை!

இது போன்ற ஓர் ஒப்பந்தம் ரஷ்யாவுடன் போடப்பட்டிருப்பின், கம்யூனிஸ்டுகள் நிச்சயமாக எதிர்த்திருக்க மாட்டார்கள். அவர்களுக்கு ஒப்பந்தத்தின் அனுகூலங்கள் - பிரதிகூலங்களைக் காட்டிலும், அமெரிக்காவுடனான உறவே ஆட்சேபகரமானதாக இருக்கிறது. இந்தக் குறுகிய பார்வையை எதிர்பார்த்தே பிரதமரும் காங்கிரசும் செயல் பட்டிருக்க வேண்டும். அவர்களைப் புறக்கணித்துவிட்டு இவ்விஷயத்தில் முன்னேற முயன்றிருக்கக் கூடாது. அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துபேசி, இந்த ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை உணர்த்திய பிறகு, அதன் ஷரத்துகளை வரைவதில் அனைத்துத் தரப்பினரையும் ஈடுபடுத்தியிருக்க வேண்டும். இதில் தவறியதோடு அல்லாமல், அயலுறவுத் துறை தொடர்பான இந்த விவகாரத்துக்காக, நாடாளுமன்ற கூட்டாலோசனை அவசியமில்லை என்று சட்டம் வேறு பேசியது மன்மோகன் சிங் அரசு!

ஒப்பந்தத்தின் சாதக - பாதகங்களை ஆராய்வதற்குப் பதிலாக, அதை கௌரவப் பிரச்னை ஆக்கியதால், எதிர்க்கட்சியினரும் வறட்டு கௌரவத்தோடு சண்டைபோட்டு எதிர்ப்புத் தெரிவித்து, முட்டுக்கட்டையும் போட்டுவிட்டார்கள். 'ஆதரவு வாபஸ்' என்ற அவர்களது அச்சுறுத்தல், பிளாக் மெயில் அன்றி வேறொன்றுமில்லை.

காங்கிரஸ் தலைமையின் பதவி ஆசை, நாட்டின் கௌரவத்தைக் காவு கொடுத்து விட்டதுடன், ஓர் அவசர இக்கட்டில் அமெரிக்காவை உதவிக்கு நாடும் வாய்ப்பினை பலவீனப்படுத்திவிட்டது.

ஒப்பந்தம் நிறைவேறாததால் எதிர்காலத்தில் எழப்போகும் மின்சார பற்றாக்குறையைச் சமாளிக்க கம்யூனிஸ்டுகள் என்ன வழி வைத்திருக்கிறார்கள்?

நாளைக்கு பாகிஸ்தானோ, சீனாவோ இந்தியாவைத் தாக்கினால் கைகொடுத்து நாட்டைக் காக்க கம்யூனிஸ்ட் கட்சியா முன்வரப்போகிறது? அப்போது அமெரிக்க உதவியை நாம் நாடுகிறபோது, எந்த நம்பிக்கையில் அவ்வல்லரசு நமக்கு உதவ முன்வரும்? ●



சித்தி

வெ. தமிழழகன்

வீட்டுப் பாடம் சொல்லித்தர ஸ்கூல் பேக்கை எடுத்த வித்யாவுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. அவள் நினைத்த மாதிரியே கணக்கு நோட்டைக் காணவில்லை.

''ஏய்! உமா, இன்னிக்குத்தானே உனக்குக் கணக்கு நோட்டு வாங்கித் தந்தேன். எங்கே அது? உன் ஃப்ரெண்ட் கமலாவுக்கு ஒரு நோட்டுக் கொடுத்தியே அதுதானா?'' என்று கோபம் கொப்பளிக்கக் கேட்டாள்.

''ஆமாம்மா, நீங்க காலையில வாங்கிக் கொடுத்த நோட்டுதான் அது. கமலாவுக்கு நோட்டு இல்லை. அதனாலதான் கொடுத்தேன்'' என்று பதில் சொல்ல, சட்டென அவள் முதுகில் ஓர் அறை வைத்தாள் வித்யா. குழந்தை உமா, வலி தாளாமல் அலறினாள். அழுகைக்குரல் கேட்டு ஓடி வந்தான் அர்ஜுன் - உமாவின் அப்பா.

''வித்யா, உமா என்ன செஞ்சா, ஏன் அவளை இப்படி அடிக்கிறே? உன் மனகல நீ என்ன நினைச்சிட்டு இருக்கே? உன்கிட்ட என்ன சொல்லியிருக்கேன்... உனக்கு ஞாபகமிருக்கா?'' என்று கோபம் கலந்த குரலில் கேட்டான்.

''உமாவுக்குக் கணக்கு நோட்டு வாங்கிக் கொடுத்தாகணும்னு சொன்னது நீங்கதானே?''

''ஆமாம்; அதுக்கு என்ன இப்போ?''

''முப்பது ரூபா கொடுத்து உசத்தியான நோட்டு வாங்கிக் கொடுத்தா, அதை இவ என்ன செஞ்சான்னு கேளுங்க?''

''அப்படி என்ன செஞ்சா?''

''நானே சொல்றேன்பா. என்கூட படிக்கிற கமலாவுக்கு அம்மா கிடையாது; சித்திதான். எனக்கு கணக்கு நோட்டு வேணும்னு நான் அம்மாகிட்ட கேட்கறேன். ஆனா, அவ யாருகிட்ட கேட்பா? சித்திகிட்ட கேட்டா அடிதான் விழும். அனாதையா நிக்கிற அவளைப் பார்க்கப் பாவமா இருந்தது. அதனாலதான் என்னோட நோட்டை அவளுக்குக் கொடுத்தேன். இது தப்பா, நீங்களே சொல்லுங்கப்பா?'' என்று கேட்க, தாயை இழந்த உமாவுக்கு அந்தக் குறை தெரியாமல் இருக்க வித்யாவை இரண்டாம் தாரமாக மணந்து கொண்ட அர்ஜுன், அதிர்ந்து நின்றான். ஊமையான உறவின் அர்த்தத்தை விளக்க முடியாத மௌனத்தோடு மகளை அள்ளி அணைத்துக் கொண்டான். ○

பிரபஞ்சன்	எஸ்.சந்திரமௌலி
வாஸந்தி	த.கி.நீலகண்டன்
ஜி.ஆர்.சுரேந்தர்நாத்	ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு
சிவசங்கரி	வையவன்
ஆர்னிகா நாசர்	சுபா
ஏ.ஏ.ஹெச்.கே.கோரி	சுகி.சிவம்
தேவிபாலா	தேவமணி ரஃபேல்
இந்திரா சௌந்தர்ராஜன்	என்.விஜய் சிவா
ஆரணி யுவராஜ்	யுகபாரதி
திருப்பூர் கிருஷ்ணன்	சீதா ரவி
பாரதி பாஸ்கர்	நா.முத்துக்குமார்
ரமணிசந்திரன்	நா.வே.அருள்
ரேவதி	மு.ஸ்ரீநிவாஸன்
மு.மாறன்	தஞ்சை சகா
ஜே.எஸ்.ராகவன்	கோபுலு
சாருகேசி	கிரேஸி மோகன்
சுப்ரபாலன்	மேலாண்மை பொன்னுச்சாமி
ஜி.எஸ்.எஸ்	வே.இராமசாமி
எஸ்.எஸ்.நாகராஜன்	ஈரோடு தமிழன்பன்
தென்கச்சி சுவாமிநாதன்	கதிர்பாரதி
ப்ரியன்	மா.கண்ணன்



இத்தனை பேரும் சேர்ந்து
என்ன பண்றாங்க..?

பார்க்க பக்கம்–71

தஞ்சை பரத்வாஜ்



மேஷம்: தன வருவாய் பெருகும். தந்தை வழியில் ஆதாயம் கிட்டும். மறைமுக எதிர்ப்பு விலகும். பூர்வீகச் சொத்துகள் பாகப்பிரிவினை ஆகும். கல்வியில் மேன்மை ஏற்படும். தாயாரின் ஆசிகளைப் பெறுவீர்கள். வியாழக்கிழமைதோறும் குரு பகவானுக்கு விளக்கு ஏற்றி, பூ வைத்து வழிபட்டு வர, சங்கடங்கள் தீரும்.


ரிஷபம்: ஆடை ஆபரண அலங்காரப் பொருட்கள் சேரும். வராத நிலுவைகள் வசூல் ஆகும். உடலில் இருக்கும் பிணிகள் விலகும். சிலருக்கு வீடு/ மனை வாங்கும் யோகம் சித்திக்கும். தாயின் உடல்நிலை சற்று பாதிக்கும். திருமணக் காரியம் நிறைவேறும். மனைவி வழியில் சுப நிகழ்ச்சி நடக்கும். கல்வியில் ஊக்கம் அதிகரிக்கும். சனிக்கிழமைதோறும் சனீஸ்வர பகவானுக்குத் தீபம் ஏற்றி, பூ வைத்து வழிபாடு செய்து வந்தால் சங்கடங்கள் தீரும்.

மிதுனம்: மன சந்தோஷம் உண்டாகும். மன தைரியம் அதிகரிக்கும். சாதுக்கள் தரிசனம் கிட்டும். உல்லாச பிரயாணம் வந்து சேரும். தெய்வ பிரார்த்தனைகள் நிறைவேறும். ராசியில் குரு பகவான் சஞ்சாரம் செய்வதால், தொழிலில் மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். தெய்வ சங்கல்பத்தால் அது விலகும். வழக்கு வெற்றி பெறும். திருமணக் காரியம் கைகூடும். வியாழக்கிழமைதோறும் குருபகவானுக்குத் தீபம் ஏற்றி, பூஜை செய்துவர நன்மை கிட்டும்.

கடகம்: உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வாக்கு வன்மையால் வெற்றிகளை அடையக்கூடிய பாக்கியம் கிட்டும். பிறருக்கு ஜாமீன் போடுவதைத் தவிர்க்கவும். திருமணக் காரியம் கைகூடும். சனிக்கிழமைதோறும் ராகு/கேது வழிபட்டு வருதல் நலம் பயக்கும்.

சிம்மம்: எதிலும் கவனத்துடன் செயல்படவும். உடல்நிலையில் போதிய கவனம் தேவை. வியாபாரத்தில் வருமானம் பெருகும். நீண்ட காலக் கடன் தொல்லை தீரும். வாகனங்களில் செல்லும்போது உஷார். வியாழக்கிழமை நெய்யில் தீபம் ஏற்றி, பூ வைத்து வழிபட்டு ஏழைக்கு

அப்பாவோட ராசிக்குக் குழந்தைகளால சுபச் செலவுன்னு போட்டிருக்கு. இதான் சான்ஸ். பீச், ஹோட்டல்னு பர்ஸைக் கரைச்சுட வேண்டியது தான்!



அன்னதானம் செய்ய, வரும் சங்கடங்கள் தீரும்.

கன்னி: தடை விலகித் திருமணம் கைகூடும். மனக்குறை விலகும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். வெளியூர்ப் பிரயாணம் வந்து சேரும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் உண்டாகும். செலவுகள் சுபமானதாக இருக்கும். நீண்ட காலக் கடன்கள் வசூலாகும்.

துலாம்: சமூகத்தில் மதிப்பு, மரியாதை மிகுதி ஆகும். சுற்றத்தாரால் பாராட்டப்படுவீர்கள். குடும்ப உறவு நன்றாக இருக்கும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் கிட்டும். திருமணத் தடை விலகும். வாக்கு நாணயம் காப்பாற்றப்படும். புதிய தொழில் அபிவிருத்தி ஏற்படும். ராகு/கேதுவுக்குத் தீபம் ஏற்றி ஒன்பதுமுறை வலம் வர நற்பலன் கிட்டும்.

விருச்சிகம்: உடல்நிலையில் சற்று நலிவு ஏற்படும். தாயுடன் கருத்து வேற்றுமை உண்டாகும். உடன்பிறந்தவர்களால் தொல்லை அதிகமாகும். சத்ரு தொல்லை இருக்கும். பணக் கஷ்டம் தீரும். வேலையில் நற்பெயர் உண்டாகும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். வியாழன், சனிக்கிழமைகளில் நெய்யில் தீபம் ஏற்றி, பூ வைத்து வழிபாடு செய்தால், கஷ்டங்கள் விலகி நற்பலன் கிட்டும்.

தனுசு: நல்ல தகவல்கள் வந்து சேரும். நீண்ட தூரப் பிரயாணம் செய்ய வேண்டிய சூழ்நிலை உண்டாகும். கல்வியில் நல்ல ஏற்றம் ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். பணப் பற்றாக்குறை தீரும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். வேலையில் நற்பெயர் உண்டாகும்.

மகரம்: உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். உணவுக் கட்டுப்பாடு அவசியம். குடும்ப உறவில் கணவன் - மனைவி விட்டுக்கொடுத்து அனுசரணையுடன் நடந்துகொள்வது சாலச் சிறந்தது. வாகனங்களில் செல்லும்போது அதிக வேகமாகச் செல்வதைத் தவிர்க்கவும். யாருடனும் பணம் கொடுக்கல், வாங்கல் வைத்துக் கொள்ளக் கூடாது.

நடக்குமென்பார்; நடக்கும்!

கும்பம்: தடை விலகித் திருமணம் கைகூடும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். கணவன்- மனைவிக்குள் கருத்து வேற்றுமை உண்டாகும். விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. கல்வி வளம் மேலோங்கும். உடல்நலம் பாதிக்காது. பணச் சிரமம் இருக்காது. வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ராகு/கேது/சனி/குரு வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

மீனம்: அந்நிய நாட்டு மனிதர்களால் அனுகூலம் ஏற்படும். புதிய வீடு, மனை வாங்க ஏற்ற காலம். சத்ரு தொல்லை நீங்கும். குழந்தைகள் வழியில் சுபநிகழ்ச்சி ஏற்படும். வாக்கு நாணயம் காப்பாற்றப்படும். உத்தியோகத்தில் மேன்மை உண்டாகும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. ○

அம்மன் இட்ட கனவுக் கட்டளை!

"அது எம்புட்டுப் பெரிய்ய குளம்! அதைப் போய்ச் சுத்தப்படுத்துறதுங்கறது இலேசுபட்ட காரியமா? உன் பையன் பொன்னுசாமி மட்டும் தனியாளா எறங்கி குளத்தைச் சுத்தப்படுத்துறானாமே, உண்மையா தெய்வானை?'' கோவை அருகே குறிச்சி பகுதி மக்கள் அந்த வயதான பெண்மணியிடம் வியப்போடு கேட்கிறார்கள்.

நாற்பது ஆண்டுகளாகப் பூ வியாபாரம் செய்து வரும் தெய்வானையின் ஆறாவது பிள்ளைதான் பொன்னுசாமி. நான்காம் வகுப்பு வரை மட்டுமே படித்திருக்கும் இவர், தற்போது ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருகிறார். கோவை பொள்ளாச்சி சாலையில் அமைந்துள்ளது குறிச்சிக் குளம்.

திடீரென ஒரு நாள் இந்தக் குளத்தைச் சுத்தப்படுத்தத் துவங்கிவிட்டார் பொன்னுசாமி. குளத்துக்குள் நீந்திச் சென்று, ஆகாயத்தாமரைச் செடிகளை வேரோடு பிடுங்கிக் கரையோரமாகக் கொண்டு வருகிறார். கரையில் இருக்கும் பொக்லைன் எந்திரம், அந்தச் செடிகளைக் கொத்தாக அள்ளி சாலையோரமாகக் கொட்டுகிறது.

"பவானி சாகர் அணைக் கோட்டம், பொதுப் பணித் துறையின்



தனி ஒருவராகக் குளத்தினை தூய்மை செய்யும் பொன்னுசாமிக்கு, இதுவரை செலவு மட்டும் ஒரு லட்சம் பிடித்திருக்கிறது!

கீழ் உள்ள இந்தக் குறிச்சிக் குளம், சுமார் இருநூறு ஏக்கர் உள் பரப்பளவு கொண்டது. இந்தக் குளத்தில் தேங்கி நிற்கும் தண்ணீரால்தான் குளத்தினைச் சுற்றி 20 கி.மீ. அளவுக்கு நிலத்தடி நீர் குறையாமல் இருக்கிறது. இந்தக் குளத்தை ஆக்கிரமித்துக் கிடக்கும் ஆகாயத்தாமரைச் செடிகளை அகற்றித் தர வேண்டுமென, குறிச்சிப் பகுதி விவசாயிகளும் பொதுமக்களும் பல முறை சொல்லியும், பொதுப்பணித் துறையினர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இந்த இளைஞராவது தன் சொந்தச் செல



* பொன்னுசாமி



வில் குளத்தைச் சுத்தப்படுத்துவது பெருமைப் படவேண்டிய விஷயம்'' என்கிறார் இந்தப் பகுதி விவசாயி ஒருவர்.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பொதுப்பணித்துறை செயற்பொறியாளரிடம் முறைப்படி அனுமதி பெற்று, குளத்தினைச் சுத்தப்படுத்தி வரும் பொன்னுசாமிக்கு, இதுவரை பொக்லைன் எந்திரச் செலவு, டீசல் செலவு மட்டும் ஒரு லட்ச ரூபாய் ஆகியுள்ளது. இதனைக் கேள்விப்பட்டு கோவை மாநகரின் 'சிறு துளி' அமைப்பின் தலைவர் வனிதா மோகன் தங்களது அமைப்பின் சார்பாக, பொக்லைன் அனுப்பி உதவியிருக்கிறார்.

தனியொருவராகக் களத்தில் இறங்கிச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பொன்னுசாமியிடம் பேசினால், ''சிறுவயது முதலே பொங்காளி அம்மன் மீது எனக்குப் பக்தி அதிகம். சில வருடங்களாகக் கோயில் குளக்கரை அசுத்தமாக இருந்தது மனதுக்கு வேதனை தந்தது. ஒரு நாள் இரவில் பொங்காளியம்மன் என் கனவில், 'குளம் மிகவும் மோசமாக இருக்கிறது; அதனைச் சுத்தப்படுத்து!' என்று உத்தரவிட்டது போல அசரீரி குரலொன்று கேட்டது. மறுநாளே செயல்படத் துவங்கிவிட்டேன்'' என்கிறார்.

''குளத்தின் மையப் பகுதிகளில் இருந்து கரைக்கு இழுத்து வரப்படும் செடிகளை, அதிக அளவில் அள்ளும் வகையில் உப கருவியை வடிவமைத்து பொக்லைன் எந்திரத்தில் இணைத்தேன். அதனால் அதிகப்படியான செடிகளைக் கொத்தாக அள்ளி அப்புறப்படுத்த முடிகிறது. இன்னும் ஒரு மாதத்துக்குள் குளத்தினை முழுவதுமாகச் சுத்தம் செய்து விடுவேன். என்னுடைய ரியல் எஸ்டேட் தொழிலில் நான் சம்பாதிக்கும் ஒரு பகுதியை, இதற்கென செலவுசெய்து வருகிறேன். அம்மன் என் கனவில் வந்து இட்ட கட்டளையை நிறைவேற்றியே தீருவேன்'' என்று கூறும் பொன்னுசாமியின் கண்களில் பிரகாசமாய் ஒளிர்கிறது குளத்தின் தூய்மை!

செய்திச் சித்திரம் :
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



✱ புகழேந்தி, வீரசந்தானம்



கடலில் கலைஞர்கள்..!





சென்னை துறைமுகத் தமிழ்ச் சங்கம், அண்மையில் சென்னையில் வசிக்கும் நூற்று இருபத்தைந்து எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்களை சென்னை துறைமுகத்துக்கு அழைத்து, ஒரு லாஞ்சில் ஏற்றி, துறைமுகத்தைச் சுற்றிக் காட்டிக் கௌரவித்து, விருந்து கொடுத்து அனுப்பியிருக்கிறது. ''ஒவ்வொரு ஆண்டும் சென்னை துறைமுகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக, சிறந்த எழுத்தாளர்களையும் சிறந்த திரைப்படங்களைத் தந்த கலைஞர்களையும் பாராட்டுகிறோம். அந்த வகையில், இந்த ஆண்டு எழுத்தாளர்கள் தொ.பரமசிவம், மாஜினி, பெரியார் திரைப்பட இயக்குனர் ஞானராஜசேகரன், எடிட்டர் பி.லெனின், கலை இயக்குனர் ஜே.கே. ஆகியோரைப் பாராட்ட முடிவு செய்தோம். சென்னை துறைமுகம் உருவாகி 125 ஆண்டுகள் ஆகிவிட்டன. '125 கலைஞர்களின் இலக்கிய சங்கமம்' என்ற பெயரில் எழுத்தாளர்களை அழைத்துக் கௌரவித்தோம்'' என்கிறார் சென்னை துறைமுகத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் பா.ராமச்சந்திரன்.

இந்தச் சங்கத்துக்குச் சமூக அக்கறை நிறையவே இருக்கிறது. ''ஐம்பது பள்ளி மாணவர்களைத் தேர்ந்தெடுத்துத் தமிழின் பாரம்பரியக் கலைகளான தப்பாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆகியவற்றைக் கற்றுத்தந்து கலைஞர்களாக்கியிருக்கிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட நான்கு குழந்தைகளைத் தத்தெடுத்து, வாழ்நாள் முழுக்க அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கல்வி கொடுக்கவும் முன் வந்திருக்கிறது'' என்கிறார் அதன் அமைப்பாளர்களில் ஒருவர். எழுத்தையும் தாண்டி சமூகத்துக்கு எழுத்தாளர்கள் செய்ய வேண்டியது இதுதானே...!

– கே.பாலசுப்ரமணியன்



✱ மாயாவதி



✱ குமாரசாமி

"இது எங்களுக்குக் கிடைத்த வெற்றி!"

ஒப்பந்த அரசியலால் ஏற்கெனவே உ.பி.யில் மாயாவதியிடம் ஏமாந்து பாடம் கற்ற பி.ஜே.பி., இப்போது கர்நாடகாவில் குமாரசாமியிடமும் ஏமாந்துள்ளது. மீண்டும் மீண்டும் ஏன் இந்த சறுக்கல் என்று தமிழக பா.ஜ.க. மாநில துணைத் தலைவர் லலிதா சுபாஷிடம் கேட்டோம்.

''இது எங்களுக்குக் கிடைத்த அடிதான். ஆனால், மக்கள் சேவை என்று வந்துவிட்ட பிறகு, அன்று மதுரையில் மகேசனே அடி வாங்கவில்லையா? அப்புறம் நாங்கள் எம்மாத்திரம்?'' என்றவர், தொடர்ந்து தம் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.



✱ லலிதா சுபாஷ்

''பாரதிய ஜனதா கட்சியின் ஆதரவு வேண்டும் என்றால், எங்களுடன் சேர்ந்து கொண்டு பதவியை அனுபவிப்பதும், அவர்களுக்கு வேண்டாதபோது எங்கள்மீது மதவாதக் கட்சி என்று சாயம் பூசுவதும் நம் ஊர் தி.மு.க., அ.தி.மு.க. முதல் வடக்கே மாயாவதி வரை எல்லோரும் செய்ததுதான். இதொன்றும் எங்களுக்குப் புதிதில்லை.

அன்று சந்திரசேகரிடம், 'ஆட்சி அமையுங்கள்; ஆதரவு தருகிறோம்' என்று சொல்லிவிட்டு இரண்டே மாதத்தில் அற்ப காரணம் காட்டி, ஆட்சியைக் கவிழ்த்தவர்கள் காங்கிரஸ்காரர்கள். ஒப்பந்தம் செய்து கொண்டபடி அன்று மாயாவதிக்கும் இன்று குமாரசாமிக்கும் அவர்களின் பதவிக் காலம் முழுமைக்குமாக ஆதரவை வழங்கி, அரசியலில் நேர்மையாக நடந்து கொண்டது பா.ஜ.க. ஆனால் குமாரசாமி பதவியை முழுமையாக அனுபவித்துவிட்டு, ஜனநாயகத்துக்கே துரோகம் செய்துவிட்டார். தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத இக்கட்டான சூழ்நிலையில், இப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் மக்களுக்குச் சேவை செய்ய முடியுமா என்று நாங்கள் பரீட்சித்துப் பார்த்தோம்; முடியும் என்பது புரிந்தது. ஆனால், அதற்குத் தேவையான அரசியல் நேர்மை மற்றவர்களிடம் இல்லை என்றும் புரிகிறது. இது எங்களுக்கு ஒரு விதத்தில் வெற்றிதான். குமாரசாமியின் செயலால், இன்று சுயநல அரசியல் நடத்துபவர்கள் யார் என்பது மக்களுக்கு வெட்ட வெளிச்சமாகிவிட்டது. வரும் சட்டசபைத் தேர்தலில் மக்கள் பா.ஜ.க.வுக்குப் பெரும்பான்மையான இடங்களை அளித்து, ஆட்சியில் அமர்த்துவார்கள் என்பது இப்போதே உறுதியாகிவிட்டது.''

– எஸ்.சந்திரமௌலி

சுதா சேஷய்யன்

அம்பாளின்

ஸ்ரீ லலிதா – இரண்டாம் பாகம் 7

'ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் ஒரு தெய்வீகத் தன்மை இருக்கிறது. அதை வெளியே கொண்டு வருவதுதான் கல்வி' - விவேகானந்தர் கல்விக்கு அளித்த விளக்கம் இதுதான். உள்ளுக்குள்ளே இருக்கக் கூடிய தெய்வீகத் தன்மையை, எது முழுமையாக மலர்த்துகிறதோ, அதுதான் கல்வி. அப்படியானால், அந்தப் பரமாத்மாவை முழுமையாக உணர்ந்துகொள்வதுதானே கல்வி.

வள்ளுவரிடம் போய் இந்தச் சிந்தனையில் நிற்போம்: 'பரமாத்மாவுடைய கால்களில் போய் விழவில்லையென்றால், அந்தக் கல்வியினால் பயனில்லை' என்றாரே... (வாலறிவன் நற்றாள் தொழார் எனின்)!

பரம்பொருள் ஜீவனை சிருஷ்டிக்கிறார் அல்லவா, அப்படி சிருஷ்டிக்கிறபோது தனக்குள்ளேயிருந்து சிருஷ்டிக்கிறவள் அந்தப் பரமேசுவரி. அந்த ஜீவன் ஆடுகிறது; பாடுகிறது; என்னென்னவோ செய்கிறது.

'நந்தவனத்தில் ஓர் ஆண்டி, அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை
வேண்டி,
கொண்டு வந்தான் ஒரு தோண்டி
அதைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு
டைத்தாண்டி'

என்பதுபோல், இந்த ஜீவன் அங்கே ஓடுகிறது, இங்கே ஓடுகிறது, ஆடுகிறது, பாடுகிறது - எல்லாம் செய்கிறது.

அழித்தல் அல்ல; நீக்கல்!

எல்லாம் செய்து முடித்து, கடைசியில் இந்த ஜீவன் எங்கே போய் ஒடுங்குகிறது என்றால், மறுபடியும் சர்வேசுவரனிடத்தில் போய் ஒடுங்குகிறது. அதனால்தான் அதைக் கொண்டுபோய் அவர் ஒடுக்கும் போது, அச் செயலை அழித்தல் என்று சொல்லுவதில்லை. 'தாம் உளவாக்கலும், நிலைபெறுத்தலும் **நீக்கலும்**' என்றுதான் சொல்லியிருக்கிறது.

நீக்கல் என்றால் என்ன அர்த்தம்? ஒரு பொருளை நீக்குவதற்கும் அழிப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

அழித்துவிடுதல் என்று சொன்னால், எந்த அடையாளமும் மிச்சம் இல்லாமல் செய்துவிடுவது. நீக்குவது என்றால், இன்னொரு இடத்தில் மாற்றி வைப்பது. அல்லது, அதே பொருளுக்கு வேறு வடிவம் கொடுப்பது. அதுதான் நீக்கல்.

இங்கேயிருந்து ஆத்மாவை எடுத்து, அதனை வேறு ஓர் இடத்தில், வேறு வடிவம் கொடுத்து இடம்பெறச் செய்பவர் பரமேசுவரன்.

ஊழி முதல்வனின் மகிழ்ச்சி!

இந்தச் சுழற்சி, 'புனரபி ஜனனம்; புனரபி மரணம்' என்று நடந்துகொண்டே இருக்கிறது. இப்படித் தொடர்ச்சியாக நடக்கிறபோது, ரொம்ப நாட்கள் கழித்து என்ன நிலைமை வரும் என்றால், அந்த


ஸ்ரீ செண்பகவல்லி
அம்மன்,
கோவில்பட்டி
திருநடனம்!

ஜீவன்களை, பரம்பொருள் தன்னுள்ளே ஒடுக்கிக்கொள்கிற நிலைமை வரும். அந்த நிலைமைதான் ஊழிப் பிரளயக் காலம். அந்த ஊழிப் பிரளயக் காலத்தில், சிருஷ்டியில் எதுவும் மிச்சம் இருக்காது. எல்லாமே போய் சர்வேசுவரனிடத்திலே ஒடுங்கி விடும்.

அதனால்தான் 'ஊழி முதல்வன்' என்று ஆண்டாள் பாடுகிறாள் - 'ஊழி முதல்வன் போல் மெய் கருத்து' என்று ஆண்டாள் பாடுகிறாளே, அந்த முதல்வன் ஒரே ஒருவன்தான் - சர்வேசுவரன்.

அப்போது அவனுக்கு ஒரு சந்தோஷம் உண்டாகிறது. அந்தப் பரமேசுவரன் எல்லாவற்றையும் தன்னுள் லயப்படுத்திக் கொண்ட சந்தோஷத்தில் நடனமாட ஆரம்பிக்கிறான். அப்படித் தாண்டவமாட ஆரம்பிக்கிறபோது, அதைப் பக்கத்தில் நின்று அம்பாள் பார்க்கிறாள். அதுதான் மஹா தாண்டவ சாக்ஷிணி.

அம்பாள் எதற்காக அவ்வாறு பார்க்கிறாள் என்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அம்பாளும் பரமேசுவரனும் ஒன்றுதானே. சிவசக்தி ஸ்வரூபமான அம்பாள், அவன் தாண்டவத்தை அவள் தனியே நின்று எதற்காகப் பார்க்க வேண்டும்...?

லாஸ்யப்ரியா

அம்பாள் பார்த்துக்கொண்டே இருந்துவிட்டு, தானும் லாஸ்யம் ஆட ஆரம்பிக்கிறாள். அவள் தாண்டவ சாக்ஷினி மட்டும் அல்ல; லாஸ்யப்ரியாவும்கூட!

சர்வேசுவரன் தாண்டவமாடுகிறான்; அம்பாள் லாஸ்யம் ஆடுகிறாள்; இரண்டு பேரும் சேர்ந்து நடனம் ஆடுகிறார்கள். இதைத்தான் அபிராமி பட்டர் சொன்னார் - 'நீயும் நின் கணவரும் என் புந்தியில் வந்து பொருந்த வேண்டும்' என்பதாக. எப்படிப் பொருந்தவேண்டும்...? நடனமாடிக் கொண்டே! உன் கணவருடன் நடனமாடிக்கொண்டே வந்து என் புந்தியில் பொருந்துக என்கிறார்.

அம்பாள் நடனமாடுவதைப் பார்த்துக் கொண்டே இருக்கிற பரமேசுவரனுக்குச் சந்தோஷம் வருகிறது. அந்தச் சந்தோஷத்தில் அம்பாள் என்ன செய்கிறாள், மீண்டும் சிருஷ்டியைத் தொடங்க வேண்டும் என்று சொல்கிறாள்.

லயத்திலே போய் எல்லாமே ஒடுங்கிய சமயத்தில், வேறு ஒன்றுமே கிடையாது. முழுக்க, முழுக்க, முழுக்க ஊழிப் பிரளயம்! எந்தவொரு ஜீவனும் இல்லை. மறுபடியும் சிருஷ்டியை ஆரம்பித்தால்தான் இந்த லோக வியாபாரம் நடக்கும் என்பதற்காக, சிருஷ்டியைத் திரும்பவும் கொண்டுவர வேண்டும் என்பதற்காக பரமேசுவரனுடன் கூடவே ஆடுகிறாள் அம்பாள். ஆட, ஆட, ஆட, அவருக்குச் சந்தோஷம் வருகிறது. வந்தவுடனே, மறுபடியும் சிருஷ்டியைத் தொடங்கிவிடுகிறார்:

'ஜகத்ராதும் கருணா; க சித் அருணா!' என்று சிருஷ்டியை ஆரம்பித்து வைப்பவளாக இருக்கிறாள் அம்பாள்.

இப்போது நாம் பார்த்துக்கொண்டிருக்கும் நாமம் மஹா தாண்டவ சாக்ஷினி. லாஸ்யப்ரியா என்பது பின்னால் வரும் திருநாமம். தாண்டவத்துக்கு வெறும் சாக்ஷியாக இல்லாமல் அதில் தானும் பங்கு கொண்டு, மீண்டும் சிருஷ்டியைத் தொடங்குபவளாக இருக்கிறாள் அம்பாள். இதைத்தான் **மஹேசுவர மஹாகல்ப மஹாதாண்டவ சாக்ஷினி** - ஆகியவை குறிக்கின்றன.

திருவதிகை

மஹாகாமேச மஹிஷி - காமேசுவரனுக்குப் பட்டமஹிஷியாக இருக்கக் கூடியவள்.

"ஜீவனுக்குள் இருக்கும் தெய்வீகத் தன்மையை வெளியே கொண்டு வருவதுதான் கல்வி" என்றார் விவேகானந்தர்.

மஹாதிரிபுர சுந்தரி - திரிபுர சுந்தரியாக இருக்கக்கூடியவள். பின்னால் ஒரு திருநாமம் வரும் திரிபுரை என்று.

'திரிபுரசுந்தரி ஆவது அறிந்தனமே' என்று பாடும் அபிராமி பட்டர், இன்னொன்றும் சொல்லுவார்: 'முப்புரை' என்பார். திரிபுரையைத்தான் தமிழ்ப்படுத்தினார் முப்புரை என்று. திரிபுரசுந்தரி என்றால் என்ன அர்த்தம்...?

சிவபெருமானுக்குத் திரிபுர சுந்தரர் என்று ஒரு திருநாமம் உண்டு. திரிபுராந்தகர், முப்புராரி, புராரி - இவையெல்லாம் சிவபெருமானுக்கு இருக்கக்கூடிய திருநாமங்கள். இதற்கு ஒரு புராணக் கதை உண்டு.

மூன்று அசுரர்கள். இந்த மூன்று அசுரர்களும் மூன்று விதமான கோட்டைகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தார்கள். தங்கக் கோட்டை, வெள்ளிக் கோட்டை, இரும்புக் கோட்டை. இந்த மூன்று கோட்டைகளிலே வாழ்ந்த அவர்களுடைய கொட்டத்தை அடக்குவதற்காகப் புராரியாக, திரிபுராந்தகராகச் செயல்பட்டார் பரமேசுவரன். இந்த மூன்று அரக்கர்களுடனும் சண்டைக்குப் போனார். அப்படிச் சண்டைக்குப் போனது பற்றி விதவிதமான வர்ணனைகளெல்லாம் உண்டு.



ஆனால், இதில் உட்கருத்து முக்கியமாக என்னவென்றால், கோட்டைக்குள்ளே இருப்பவர்களை அழிக்க இவர் ஆயுதங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு போனாரே, ஆனால், அந்த ஆயுதங்களையெல்லாம் அவர் ஒன்றுமே பண்ணவில்லை. என்ன செய்தார் என்றால், இலேசாக அவர்களிருந்த திக்கு நோக்கி, ஒரு பார்வை பார்த்துச் சிரித்தார். அப்படிச் சிரித்த உடனேயே மூன்று கோட்டைகளும் எரிந்துபோய் விட்டன. இதைத்தான் திரிபுர தகனம் செய்தார் என்று சொல்கிறோம்.

இந்தத் தகனம்கூட இங்கேதான், திருவதிகை என்ற இடத்திலே நடந்ததாக கணக்கு. பண்ருட்டிக்குப் பக்கத்தில் ஒரு திருத்தலம் இருக்கிறது, திருவதிகை என்று. கிட்டத்தட்ட பண்ருட்டியின் எல்லையில் இருக்கிறது.

திருநாவுக்கரசர் திருவதிகையிலேதான் முதன்முதலில் தேவாரம் பாட ஆரம்பித்தார். தேவாரம் பாடியவர்களில் திருநாவுக்கரசர்தான் மூத்தவர். அவருடைய தமக்கையார் திலகவதியார் பற்றி சேக்கிழார் சொல்வார்: 'தூண்டு தவ விளக்கு' என்று. அந்தத் தூண்டு தவ விளக்காக இருக்கக்கூடிய திலகவதியார் வாழ்ந்த தலம், அவர் திருத்தொண்டு செய்த தலம்தான் திருவதிகை. இங்கேதான் திரிபுர தகனம் நடந்தது என்பதால் இது அட்ட வீரட்ட தலங்களுள் ஒன்று.

சிவபெருமானுடைய எட்டு வீரமான செயல்களை அவர் நிகழ்த்திய தலங்கள் அட்டவீரட்டான தலங்கள். திருவதிகை ஒன்று, திருக்கடவூர் இன்னொன்று - யமனைக் காலால் உதைத்த இடம்.

இந்தத் திருவதிகை நோக்கி பரமேசுவரன் தேரில் புறப்பட்டுப் போவதை ஆதி சங்கரர் பாடுகிறார். அம்பாளை நோக்கிச் சொல்கிறார் அவர். அந்த அழகான வர்ணனையை அடுத்த வாரம் பார்ப்போம்.

(வளரும்)

கிசுகிசு

பேசினால் குரல்வளை பாதிக்கும்!

அவர் ஒரு டாக்டர். எலும்பு அறுவை சிகிச்சை நிபுணரும்கூட. தனது அனுபவத்தை வலைத்தளம் ஒன்றில் விவரித்திருந்தார்.

ஒரு நாள் காலையில் எழுந்திருந்தபோது அவருக்கு அதிர்ச்சி. அன்று பேசுவதற்கு குரலே எழும்பவில்லை. ''ஐயோ என்னால் குரல் கொடுக்க முடியவில்லையே'' என்று கத்த நினைத்தார். பிறகுதான் அந்த அபத்தம் அவருக்கு உரைத்தது.

உடனே, குரல் ஸ்பெஷலிஸ்ட் ஒருவரைத் தொடர்புகொண்டார் (மும்பை போன்ற மாநகரங்களில் ஈ.என்.டி. மருத்துவர்களிடையே, இப்படித் தனித்துவ சிகிச்சை அளிப்பவர்களும் உண்டு).

முதலில், பாதிக்கப்பட்ட டாக்டரின் தொண்டைக்குள் ஒரு மருந்து செலுத்தப்பட்டது. பிறகு அந்தப் பகுதிக்குள் லாரின்ஜிடஸ்கோப் என்ற கருவி செலுத்தப்பட்டது. இதன் மூலம் குரல்வளையைத் தெளிவாகச் சோதிக்க முடிந்தது. அவரின் வலது குரல்வளையில் இரத்தம் கசிந்துகொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

''உங்கள் தொண்டைக்கு ஒரு வாரத்துக்காவது முழு ஓய்வு தேவை'' என்றார் குரல் மருத்துவர். எதிர்த்துப் பேச முடியுமா?

பொதுவாக, தொண்டையைப் பாதுகாக்கச் சில ஆலோசனைகளைக் கடைப்பிடிப்பது நல்லது.

1) தினமும் பலமுறை தண்ணீர் குடியுங்கள். அப்போதுதான் குரல்

“ஆண்களைவிட பெண்களுக்குத்தான் குரல் பிரச்னைகள் அதிகம் உண்டாகின்றன!”








வளையை அதிகம் பயன்படுத்தியிருந்தால் கூட அதற்குப் புத்துணர்ச்சி கிடைக்கும்.

2) ஆண்களைவிட பெண்களுக்குக் குரல் பிரச்னைகள் அதிகம் உண்டாகின்றன என்கிறது ஓர் ஆராய்ச்சி. இதற்குக் காரணம், 'கிசுகிசு'வென்று வித்தியாசமான குரலில் அவர்கள் தங்களுக்குள் செய்தி பரிமாறிக் கொள்வதுதானாம். செயற்கைக் குரலில் பேசுவதைத் தவிருங்கள்.

3) புகைப் பழக்கம் கூடவே கூடாது.

4) மதுப் பழக்கமும் வேண்டாம். ஒரு வேளை மது அருந்தியே ஆக வேண்டும் என்றால், நீங்கள் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். மது நம் உடலில் உள்ள நீர்ச்சத்தைக் குறைத்து விடுகிறது. எனவே, ஒரு டம்ளர் பீர் அருந்தினால் இரு டம்ளர் தண்ணீர் குடித்து விடுங்கள்.



5) சிலருக்குப் பேச்சு என்றாலே கத்தலும் கூக்குரலும் தான். குரலைக் குறைத்துப் பேசப் பழகிக்கொள்ளுங்கள்.

6) வண்டி ஓட்டும்போதும், பஸ் நிறுத்தம், இரயில்வே ஸ்டேஷன் போன்ற இரைச் சல்மிக்க இடங்களில் பேசு வதைத் தவிர்க்கப் பாருங்கள்.

7) உடற்பயிற்சி செய்யும் போது பற்களை அழுத்தமாகக் கடித்துக்கொள்ள வேண்டாம். தொண்டைப் பகுதியில் காற்றின் போக்குவரத்து இருக்கட்டும்.

8) நாம் இப்படி நினைத்துப் பார்ப்பதில்லை என்றாலும், பதற்றம் ஏற்படும்போது நம் குரல்வளைப் பகுதியில் இறுக்கம் தானாகவே அதிகமாகிவிடும். எனவே, அந்தப் பகுதிக்கு அவ் வப்போது தளர்வுப் பயிற்சிகளை (ரிலாக்ஸேஷன் எக்ஸ்சைஸைஸ்).

9) கொட்டாவி வரும்போது அதை அடக்கிக்கொள்ள வேண்டாம். நன்றாக வாயைத் திறந்து வெளியிடுங்கள். அதுவே குரல் வளைப் பகுதிக்கு நல்ல பயிற்சிதான்.

10) தொண்டையில் வலியோ, கர கரப்போ ஏற்படத் தொடங்கியவுடனே குரலைப் பயன்படுத்துவதைத் தாற்காலிக மாக நிறுத்திவிடுங்கள்.

11) எஸ்.எம்.எஸ். செய்தாலே போதும் எனும் தகவல்களைத் தொலை பேசியில் பேச வேண்டும் என்பதில்லை.

12) காஃபி, தேனீர் போன்ற வற்றைக் குறையுங்கள்.

முக்கியமாக இளம் தலை முறையினர் இவற்றைக் கடைப் பிடிக்க வேண்டியது அவசியம்; அதேநேரத்தில் அவசரமும் கூட.

- ஜி.எஸ்.எஸ்.

திருவாரூர் பாபு

''முகுந்த்'' என்றாள் விந்தியா கோபமாக.

முகுந்த், அலட்சியமாக அவளைப் பார்த்தான். கிளாஸ் டீச்சர் என்கிற மரியாதை அந்தப் பார்வையில் இல்லை.

வகுப்பறையில் அனைத்து மாணவர்களும் இருவரையும் கவனிக்க... விந்தியா இப்போது நிலைமையைச் சாதுர்யமாகச் சமாளிக்கவேண்டிய சூழ்நிலைக்கு வந்தாள்.

''இந்த வாரம் முழுக்கவே நீ ஹோம் ஒர்க் பண்ணல. வீட்ல ஏதாவது பிரச்னையா முகுந்த்'' மிருதுவாகக் கேட்டாள்.

முகுந்த், இப்போதும் அவளை முறைத்தான்.

''சிட் டவுன் முகுந்த். ப்ரிலியண்ட் ஸ்டூடண்ட் நீ. உன்கிட்டயிருந்து நிறைய எதிர்பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டு விட்ட இடத்திலிருந்து பாடத்தைத் தொடர்ந்தாள். ஐந்தாவது வகுப்பு மாணவர்கள் அடக்கமாக இருப்பார்கள். இதில் முகுந்த் மட்டும் வித்யாசமாய்?

காரணம் என்ன? இதுபோல பலமுறை நடந்திருக்கிறது. முறைப்பான்; ஆங்கிலத்தில் ஏதோ முணுமுணுப்பான். ஹெட் மாஸ்டரிடம் கொண்டு செல்லவும் விரும்பவில்லை. அதே நேரத்தில் முகுந்த் இப்படி வளர்வதையும் அவள் விரும்பவில்லை.

மதியம் லஞ்ச் பிரேக்கின்போது, அலுவலக அறைக்குச் சென்று முகுந்த் வீட்டு அட்ரஸ் வாங்கிக் கொண்டாள்.

அப்பா பெயர்... வினோத்குமார்

வினோத்...? ஒரு வேளை...! ஒரிரு விநாடிகள் மனசு அலைபாய்ந்தது.

அவள் வீட்டுக்குப் போகும்



காதல் பொன்மொழிக் கதை-13

வழியில், அமைந்த கரையில்தான் முகுந்த் வீடு. மொபட்டைத் திருப்பினாள். அந்தப் பகுதி பரிச்சயம் என்பதால் வீட்டைக் கண்டு பிடிப்பதில் சிரமம் இல்லை.

வாசலில் மொபட்டை நிறுத்தி விட்டு, ரிசப்ஷனில் நுழைந்து காலிங் பெல்லை அழுத்தினாள்.

நெற்றியில் கேசம் புரள.. நெற்றி வகிட்டில் பெரிதாகக் குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டு சிரித்தபடி ரேவதி வந்தாள். முகுந்தின் அம்மா.

''நான் விந்தியா.. முகுந்த் கிளாஸ் டீச்சர்.''

''ஸ்கூல்ல பாத்திருக்கேன். நான் ரேவதி, முகுந்த்தோட அம்மா. வாங்க, உள்ள வாங்க...'' உற்சாகமாக வரவேற்றாள்.

ஹாலுக்குள் நுழைந்த விந்தியாவின் கண்களில் அந்தப் புகைப்படம் பட்டது. கழுத்தில் திருமண மாலையுடன் அதே வினோத்குமார். அவளை விரட்டிவிரட்டிக் காதலித்து, அவளாலும் காதலிக்கப்பட்டு பிற்பாடு அவளாலேயே புறக்கணிக்கப்பட்ட அதே வினோத்குமார்.

கால்கள் வெடவெடவென நடுங்கின; குப்பென்று வியர்த்தது. விந்தியா சமாளித்துக் கொண்டாள்.

''நானே உங்களை வந்து பார்க்கணும்னு நெனச்சுக்கிட்டு இருந்தேன். நீங்களே வீடு தேடி வந்திருக்கீங்க. முகுந்த் ப்ளே கிரவுண்ட் போயிருக்கான்.''

''பரவாயில்லை'' என்ற விந்தியா எதிரே இருந்த வாட்டர் ஜக்கிலிருந்து தண்ணீரை எடுத்துக் கடகடவெனக் குடித்தாள்.

கண்களை மூடி நிதானத்துக்கு வந்தவள், ரேவதியைப் பார்த்தபடி சன்னமானக் குரலில் பேசினாள்.

''முகுந்த் நல்லா படிக்கிறான். ஆனா, பிடிவாத குணம் அதிகம். முரட்டுத்தனமா பிஹேவ் பண்றான். இதை எங்களால சரி பண்ண முடியாது. நீங்கதான் அவனை மாத்தணும். இல்லேன்னா எதிர்காலத்துல ரொம்பக் கஷ்டமாயிடும்'' என்றாள்.


''தெரியும்ங்க, அவங்க அப்பா ரொம்ப சாஃப்ட்; அதிர்ந்துகூட பேச மாட்டாரு. சின்ன வயசுலேர்ந்து இவனைச் சரியா கண்டிக்காம விட்டாச்சு. இனி நான் கொஞ்சம் கண்டிப்பா இருக்கிறேன். அவன் நல்லா படிக்கணும்; மார்க் எடுக்கணும்'' என்றாள் கெஞ்சும் குரலில்.

காஃபி வந்தது. அந்த நேரத்தில் விந்தியாவுக்கு காஃபி குடித்தால் தேவலாம் போலிருந்ததால் எடுத்துக் குடித்தாள்.

எழுந்து கொண்டாள்.

''உங்க செல் நம்பர் கொடுத்துட்டுப் போங்க. அவரை ஸ்கூலுக்கு வந்து உங்களைப் பார்க்கச் சொல்றேன்?''

பேச வேண்டாம்; பார்க்க வேண்டாம்



வித் லவ் விந்தியா!

என்றுதான் நினைத்தாள். ஆனால், ஏனோ வினோத்தைப் பார்க்க வேண்டுமென்று மனசு துடித்தது. செல் நம்பரைக் கொடுத்தாள்.

அடுத்த நாள் மாலை ஸ்கூலிலிருந்து விந்தியா புறப்பட்டபோது, செல் ஒலித்தது. அறிமுகமில்லாத நம்பர்.

''நான் வினோத்குமார்... விந்தியா?'' என்றது மறுமுனை.

சில வினாடிகள் அவளுக்கு உடம்பு சிலிர்த்தது. அந்தக் குரலை உடம்பு முழுவதும் வாங்கிக்கொண்டாள். நான்கு வருடங்கள் மிகமிக பரிச்சயமாய் இருந்து, இப்போது விலகிப்போன குரல். ம்ஹூம்... அவளால் விலக்கப்பட்ட குரல்.

''முகுந்த்... நான் விந்தியா...''

மறுமுனையில் வினோத்துக்கும் அந்தக் குரல் புரிந்திருக்க வேண்டும். சில விநாடிகள் மௌனம்.

''முகுந்த் டீச்சர்?''

''ம். உங்க விந்தியா!'' அவளையறியாமல் வார்த்தைகள் வெளிப்பட்டன.

மறுமுனையில் வினோத் அமைதியாக இருந்தான்.

''நான் உங்களைப் பார்க்கணும் வினோத்.''

மாலை ஐந்து மணி. டிரைவ் இன் உட்லண்ட்ஸ்.

வினோத், எதிரே நின்றிருந்த விந்தியாவின் முகத்தைப் பார்த்தான். அவள் தலை குனிந்துகொண்டாள். கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது. நான்கு வருடங்கள் காதலித்துவிட்டு, குடும்பச் சூழ்நிலை கருதி பெற்றோர் பார்த்த மாப்பிள்ளையைத் திருமணம் செய்துகொண்டவள்.

விந்தியா நெற்றியில் இருந்த செந்தூரம், முகத்தில் இருந்த வெறுமை வினோத்தை என்னவோ செய்தது.

தொண்டையைக் கனைத்துச் சூழ்நிலையை இயல்பாக்க முயன்றான்.

''என்ன சாப்பிடற?'' வினோத்தான் கேட்டான்.

அமைதியாக இருந்தாள்.

அருகில் வந்த பேரரிடம் ''ரெண்டு கட்லட்'' என்றான். விந்தியா சட்டென அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

கட்லெட் அவள் விரும்பி சாப்பிடுவாள்.

''ரேவதி எல்லாம் சொன்னா'' என்றான்.

''எப்படி இருக்கீங்க?'' உடைந்துபோன குரலில் கேட்டான்.

> ### படிப்பது எதற்காக?
>
> நண்பர் ஒருவர் ஆப்ரஹாம் லிங்கனிடம், "படிப்பதால் பணம் கொட்டப்போவதில்லை. பின் ஏன் நீங்கள் எப்போதும் படித்துக்கொண்டே இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.
>
> அதற்கு லிங்கன், "நான் பணம் சேர்ப்பதற்காகப் படிக்கவில்லை. பணம் வரும்போது எப்படிப் பண்போடு வாழ வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகப் படித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.
>
> பல ஆண்டுகள் கழித்து, அமெரிக்க ஜனாதிபதியான போதுகூட இதே பணிவோடுதான் இருந்தார்.
>
> **- அ.ருக்மணி, தேனி**

''நல்லாருக்கேன். நீ?''

''ம்.''

''முகுந்த் தப்புப் பண்றான்னு மொபட்ல வீட்டுக்கு வந்து கம்ப்ளெயிண்ட் பண்ணுன நீ, அன்னைக்கு இதே மாதிரி ஓடி வந்திருந்தா இவ்வளவு நடந்திருக்காது'' - பட்டெனப் பேசினான்.

''இந்தத் துணிச்சல் அன்னைக்கு இல்லை'' - கேள்வி கேட்ட அதே வேகத்தில் அவளிடமிருந்து பதில் வந்தது.

சிறிது நேரம் மௌனமாக நகர்ந்தது.


''எனக்கும்தான்; நாலு வருஷம் காதலிச்சப் பொண்ணு சரியான காரணம் சொல்லாம இன்னொருத்தனுக்கு மனைவியாகப் போறா. இதை எப்படிடா விடறது? வா... அந்த மாப்பிள்ளைகிட்டயே நியாயம் கேட்கலாம்ன்னு ப்ரெண்ட்ஸ்

லாம் சொன்னப்ப... எனக்குத் தைரியம் வரல. உங்க வீட்டுக்கு வந்து உன் கையைப் புடிச்சு இழுத்துக்கிட்டு வந்து, கோயில்லயோ, ரிஜிஸ்டர் ஆபீஸ்லயோ வெச்சுத் தாலி கட்ட என்னால முடியல. நான் உள்ளத்தளவுல கோழை. காதல்ல துணிச்சல் ரொம்ப முக்கியம் விந்தியா. எனக்கு அது இல்லேங்கிறதாலதான் உன்னை மிஸ் பண்ணிட்டேன்'' என்றான்.

விந்தியா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

கட்லெட் வந்தது.

விரல்களால் அளைந்தாள். முகத்தைத் திருப்பிக் கொண்டு பேசினாள்.



''காதல்ல சூழ்நிலைகள் பல விஷயங்களைத் தீர்மானிச்சுடுது வினோத். 'பதினெட்டு வருஷம் வளர்த்தவங்க; படிக்க வெச்சவங்க' ன்னு யோசிக்கிறப்ப அந்த நிமிஷம் காதல் ரெண்டாவது இடத்துக்கு வந்துடுது. அப்புறம் ஏன் காதலிக்கிறீங்கன்னு ஒரு கேள்வி கேட்கலாம். அதுக்கு என்கிட்ட பதில் இல்லை.

அவரு செத்துப்போயி ரெண்டு வருஷம் ஆயிருச்சு. ஆனா, ஏதோ இன்னமும் என்னோட திருமண வாழ்க்கை ஆரம்பிக்கவே இல்லேங்கிற ஃபீலிங்தான் இருக்கு. என்னைக்காச்சும் ஒரு நாள், தவறவிட்ட அந்த வாழ்க்கை திரும்பவும் கிடைக்கும்ங்கிற நினைப்பு உள்ளுக்குள்ள ஓடிக்கிட்ட இருக்கு.

வினோத் அவளையே பார்த்தபடி இருந்தான்.

''இந்தச் சந்திப்பு அவசியமானதுன்னு மனசுக்குப் புரியுது வினோத்! பட், இது தொடரக்கூடாது. உன் ஒய்ஃப் ரொம்ப லக்கி'' என்றபடி எழுந்துகொண்டாள்.

''நான் புறப்படறேன்'' என்றவள், வினோத்தைச் சில நிமிடங்கள் உற்றுப் பார்த்தாள்.

உள்ளுக்குள் ஏதோ ஒன்று முறிந்தது. இன்னொருத்தியின் கணவன். காதால் கேட்பதைவிட நேரில் ரேவதியைப் பார்த்தது விந்தியாவை அழுத்தமாகப் பாதித்திருந்தது.

''நான் வர்றேன் வினோத்'' என்றவள் வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

வினோத் பில்லுக்குப் பணம் வைத்துவிட்டு சிகரெட் கொளுத்திக் கொண்டான்.

செல்போனை எடுத்தான். கால் ரிஜிஸ்டரில் இருந்த விந்தியாவின் நம்பரை அழித்தான்.

எப்போதாவது முகுந்த் பள்ளிக்கூடத்துக்குச் செல்ல நேரிடும். இதுவரை அவன் கண்களில் விந்தியா பட்டதில்லை. அப்படி பட்டால்... அவள் குரலைக் கேட்ட சில நிமிடங்களே ஏதோ சொர்க்கத்துக்குள் பிரவேசிப்பதுபோல இருந்தது.

இரவு....

''ரேவதி, எனக்கென்னவோ முகுந்தை வேற பள்ளிக்கூடத்துக்கு மாத்தினா தேவலாம் போலிருக்கு. நீ என்ன நினைக்கிற? இங்க கண்டிப்புப் போதாது!''

''நான்கூட நெனச்சேங்க. நாளைக்கு ஸ்கூலுக்குப் போய் விந்தியா டீச்சர்கிட்ட பேசிப் பார்க்கறேன். ஃப்ரெண்ட்லியா பழகுறாங்க. அவங்க என்ன சொல்றாங்கன்னு கேட்போம்'' என்றாள்.

''கேட்டுத்தான் பாரேன்.''

அடுத்த நாள்...

''ஏங்க... விந்தியா டீச்சர் ரிஸைன் பண்ணிட்டுப் போயிட்டாங்களாம். இப்ப என்னங்க செய்யலாம்.''

''சரி விட்டுடு. அடுத்த வருஷமும் முகுந்த் இங்கேயே படிக்கட்டும். பிறகு பார்க்கலாம்'' என்றான்.

மனசுக்குள் ஓர் ஏமாற்றம் படருவதை வினோத் உணர்ந்தான். அதேநேரம் ஒரு நிம்மதியும் ஏற்பட்டது.

"மன்னா... எங்கள் நாட்டுக்கு இந்த முறை நீங்கள் கப்பம் கட்டியே தீர வேண்டும்..."

"இல்லாவிட்டால் என்ன செய்வீர்கள்?"

"கையோடு புலவரை அழைத்து வந்துள்ளேன். கூப்பிட்டுப் பாடச் சொல்லவா...?"

- கே.ஆனந்தன்



புலவரைப்



"எப்பவும் சிரிச்சிக்கிட்டே இருக்கணும்!"

"நான் ஃபீஸ் நாளைக்குத்தான்னு சொல்லிட்டுப் போகும்போது இதை ஞாபகம் வைச்சுக்குங்க டாக்டர்!"

- கு.அருணாசலம்

"நீ ஒரு பொண்ணை லவ் பண்ணியே அவளையே கல்யாணம் பண்ணிக்கிட்டாயா? இல்ல, அவளையே நெனைச்சுக்கிட்டுக் கவலையோட இருக்கியா?"

"ரெண்டும்தான்."

- எம். சரவணன்





"நீங்க தினமும் பேப்பர் படிச்சு என்ன பிரயோஜனம். 'ஒரு சேலை வாங்கினால் இன்னொண்ணு இலவசம்'னு விளம்பரம் நேத்து வந்ததாமே, ஏன் என்கிட்டே சொல்லலை?"

"...?!...!?"

-லெ.நா.சிவகுமார்


பாடச் சொல்லவா?

"என்னை நீ விவாகரத்துப் பண்ணப் போறியா?"

"நாளைக்கு நடக்கப் போறதை நினைச்சு இன்னைக்குக் குழம்பறவங்களைக் கண்டாலே எனக்குச் சுத்தமா பிடிக்காது!"

– சீர்காழி வி.ரேவதி





"மன்னர் கிராமத்தில் உள்ள வயல் களத்தில் போர்ப் பயிற்சி செய்கிறாரே ஏன்?"

"ஸ்டெப் பை ஸ்டெப்பா இம்ப்ரூவ் பண்றாராம். முதலில் வயல்களம்; அடுத்துப் போர்க்களம்!"

- சென்னிமலை சி.பி.செந்தில்குமார்

சரித்திரக் கதைகளை எழுதுகையில் மிகவும் கவனமும், சரியான விஷய ஞானமும் தேவை. சுவையான கற்பனை சேர்ப்பு அவசியம். அதே சமயம் கண்டபடி கற்பனையைச் சேர்த்து, இது எழுத்தாளனின் உரிமை என்று சொல்ல முடியாது; சொல்லவும் கூடாது! ஏனெனில், சரித்திரம் குறித்து எதுவும் தெரியாத பொதுவான வாசகர்கள் மட்டும் கதைகளைப் படிப்பதில்லை. சரித்திரத்தை நன்கு அறிந்த ஆராய்ச்சியாளரும், வாசகரும்கூட படிப்பார்கள். 'எங்கேடா இவன் தவறு செய்வான்?' என்று கவனித்துக் கொண்டிருப்பார்கள். அந்தத் தவற்றை எல்லோருக்கும் தெரிவிப்பார்கள். பிறகு பொதுவான வாசகர்களுக்கும் அந்தக் கதையின் மீது நம்பிக்கை போய்விடும்.

எழுத்தாளனுக்கு வார்த்தைகள் எவ்வளவு முக்கியமோ, அதுபோல் ஓவியனுக்குக் காட்சியில் விஷய ஞானம் முக்கியம். ஓர் ஓவியக் காட்சியைப் பொதுவான வாசகர்கள் பார்ப்பதுபோல, தினம்தினம் அக்காட்சியைச் சந்திப்பவர்களும் பார்ப்பார்கள். அவர்களுக்கு நமது கவனக் குறைவு தெரிந்துவிடும்.

அமரர் கல்கியின் 'சிவகாமியின் சபதம்' தொடருக்கு நான் ஓவியம் வரைந்தேன். சிவகாமியின் நாட்டிய காட்சி ஒன்றை வரைந்து அனுப்பிவிட்டேன். உடனே, அமரர் கல்கியின் மகள் ஆனந்தியிடமிருந்து தொலைபேசி வந்தது.

"சிவகாமியின் நாட்டிய முத்திரையில் கட்டை விரலும் ஆட்காட்டி விரலும் ஒன்றுடன் ஒன்று தொட்டு அபிநயம் பிடிப்பதுபோல் உள்ளது. அது தவறு! கட்டை விரலும் நடுவிரலும் தொட்டுக் கொண்டிருப்பதுதான் சரியான முத்திரை" என்றார்.

விரல்தானே என்று அலட்சியப்படுத்தக் கூடாது. பரதத்தில் இது மிக முக்கியமானது. சாதாரண வாசகர் இதைக் கவனிக்காமல் போகலாம். ஆனால், பரதம் தெரிந்த ஆயிரக்கணக்கான வாசகர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு இந்தத் தவறு தெரியும். இப்படி சிறுசிறு தவறுகளை வாசகர்கள் சுட்டிக் காட்டியதும் நான் மிகவும் கவனமானேன். ஒரு கோடு போடுவதென்றாலும் கவனித்துச் செய்தேன்.



அப்போதுதான் எனது தந்தை மணியம் ஒவ்வொரு ஓவியத்துக்கும் எந்தளவுக்கு உழைத்திருப்பார் என்பதை உணர முடிந்தது. அமரர் கல்கியும் அவருக்குப் பக்கபலமாக இருந்து, பல விஷயங்களுக்கு ஆவணங்களை அளித்தார். அவரது எழுத்தின் வரிகளிலேயே ஓவியனுக்கான தொண்ணூறு சதவிகித ஆவணங்கள் இருக்கும்.

'சிவகாமியின் சபதம்' கதையில் ஆயனர் சிற்பியின் சிற்பக் கலைக்கூடம் பற்றிய வர்ணனையைப் படித்தவர்கள், அந்த வரிகளை அவ்வளவு சுலபத்தில் மறந்திருக்க மாட்டார்கள். அங்குள்ள

க ன வி ன் நு ழை வா யி ல் . . .

சிவகாமியின் விரல்கள்!



மணியம் செல்வன்



மான், மயில்களையும் அவ்வளவு அழகாக வர்ணித்திருப்பார். அவற்றை நான் பலமுறை ரசித்துப் படித்துள்ளேன்.

ஆயனர் சிற்பி ஒரு சிற்பத்தைச் செதுக்குவதுபோல ஓவியம் வரைந்தேன். உளி, சுத்தியை மட்டுமின்றி, சிற்பம் செதுக்குவதற்கான வேறு சில உபகரணங்களையும் அவர் காலருகே இருப்பதைப் போல் வரைந்தேன். இவ்வளவு செய்தவன், அங்கிருந்த ஒரு தூணில் அழகுக்காக மாற்றம் செய்துவிட்டேன். ஓவியம் வெளியானதும் ஒரு சரித்திர ஆசிரியரிடமிருந்து கடிதம் வந்தது.

"நீங்கள் வரைந்திருப்பது சாளுக்கிய காலத்துத் தூண். அம்பி மற்றும் பாதாமில் காணப்படுவது. பல்லவ காலத்தில் இத்தகைய தூண்கள் கிடையாது" என்றார்.

தவறுகளைப் பற்றித் திரும்பத் திரும்பச் சொல்வதன் காரணம், சரித்திரம் குறித்துச் சொல்கையில் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளத்தான்! வாசகர்களைக் குறைவாக மதிப்பிடவே கூடாது. அமரர் கல்கியின் படைப்புகள் இன்றளவுக்கும் பேசப்படுவதன் காரணம் அவரது உழைப்பும், கவனமுமே.

கல்கியின் கதைகளைத் திரைப்படமாக எடுப்பதென்றாலும் இத்தகைய கவனம் முக்கியம். 'பார்த்திபன் கனவு' திரைப்படமாக உருவாகும்போது, எனது தந்தை அதில் பணியாற்றினார். அப்போது அவர் காட்டிய ஆர்வம், கவனம், சிரத்தை இருக்கிறதே..!

(அடுத்த வாரம்)

அமரர் கல்கி

பார்த்திபன்

16.செண்பகத் தீவு

விக்கிரமன் கரையை நெருங்க நெருங்க, கடல் அலைகளின் ஓசையையும் அடக்கிக்கொண்டு பலவித வாத்தியங்களின் ஒலி முழங்குவதைக் கேட்டான். சங்கு, தாரை, எக்காளம், மத்தளம், பேரிகை ஆகியவை ஏக காலத்தில் முழங்கி, வான முகடு வரையில் பரவி எதிரொலி செய்தன. இவ்வளவு சப்தங்களுக்கிடையில், மாந்தர்களின் குரலில் கிளம்பிய கோஷம் ஒன்று விக்கிரமனுக்கு மயிர்க்கூச்சல் உண்டாக்கிற்று. ''வீரவேல்! வெற்றிவேல்!'' என்னும் கோஷம்தான் அது.

அந்தத் தீவில் வாழும் மனிதர்கள் என்ன ஜாதி, யாரோ, எப்படிப்பட்டவர்களோ, என்ன பாஷை பேசுபவர்களோ, ஒருவேளை நரமாமிச பட்சணிகளாய்க்கூட இருக்கலாமல்லவா? - என்று இவ்விதமெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்த விக்கிரமனுக்கு, அங்கு எழுந்த ''வீரவேல், வெற்றிவேல்!'' என்னும் சோழ நாட்டின் வீரத் தமிழ் முழக்கமானது அளவிலாத வியப்பையும் மகிழ்ச்சியையும் ஊட்டிற்று.

''இது என்ன அதிசயத் தீவு? இங்கே சோழ நாட்டுத் தமிழரின் முழக்கம் கேட்கும் காரணம் என்ன? எதற்காக இவ்வளவு ஜனக்கூட்டம் இங்கே கூடியிருக்கிறது?'' - இம்மாதிரி எண்ணங்கள் முன்னைக் காட்டிலும் அதிவிரைவாக விக்கிரமனுடைய உள்ளத்தை அலைக்கழித்தன. அவனுடைய நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. திடீரென்று உடம்பில் வெலவெலப்பு உண்டாயிற்று. மரக்கட்டை பிடியினின்று நழுவிற்று. தலை சுழலத் தொடங்கியது. கண்பார்வை குன்றியது. அதே சமயத்தில் ஒரு பிரம்மாண்டமான அலை வந்து விக்கிரமன் மீது பலமாக மோதியது. விக்கிரமனுக்கு அந்த நிமிஷத்தில் கடலிலுள்ள நீர் அவ்வளவும் புரண்டு வந்து தன் மீது மோதுவதாகத் தோன்றிற்று. ஒரு கணம் மூச்சுத் திணறிற்று. 'நமது வாழ்நாள் முடிந்து விட்டது' என்று நினைத்தான் விக்கிரமன். பார்த்திப மகாராஜாவுக்கு அவன் அளித்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது. அன்னை அருள்மொழிதேவியின் கருணை முகமும், சிவனடியாரின் கம்பீரத் தோற்றமும், கடைசியாக விரிந்து படர்ந்த கண்களுடன்கூடிய அந்தப் பெண்ணின் மதிவதனமும் ஒன்றன்பின் ஒன்றாகவும், மின்னலைக் காட்டிலும் விரைவாகவும் தோன்றி மறைந்தன. பிறகு, அவனுடைய அறிவை ஒரு மகா அந்தகாரம் வந்து மூடி விட்டது.

விக்கிரமனுக்கு மறுபடியும் பிரக்ஞை வந்தபோது, தான் மணல் தரையில் கிடப்பதாக அவனுக்கு உணர்ச்சி உண்டாயிற்று. கண்கள் மூடியபடி இருந்தன. கடல் அலைகளின் 'ஓ' என்ற ஓசை காதில் கேட்டுக் கொண்டிருந்தது. நெற்றியில் யாரோ திருநீறு இடுவதுபோல் தோன்றியது. மெதுவாகக் கண்ணை விழித்துப் பார்த்தான். சுற்றிலும் ஜனக் கூட்டம் நெருங்கி நிற்பது தெரிந்தது. ஒரு நொடிப்பொழுதில் எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. அவன் கரையை நெருங்கியபோது அந்த ஜனக் கூட்டத்திலிருந்து கிளம்பிய வாத்திய முழக்கங்களும் வாழ்த்தொலிகளும் இப்போது கேட்கவில்லை. அதற்கு மாறாக அசாதாரணமான நிசப்தம் குடிகொண்டிருப்பதை அவன் உணர்ந்தான். கொஞ்ச தூரத்தில் எங்கேயோ மாஞ்சோலையில் குயில் ஒன்று 'குக்கூ' 'குக்கூ' என்று கூவிற்று. அந்தக்

குயிலின் இனிய குரல் அங்கே குடி கொண்டிருந்த நிசப்தத்தை அதிகமாய் எடுத்துக் காட்டிற்று. கரையை நெருங்கியபோது தனக்கு நேர்ந்த விபத்தின் காரணமாகவே அங்கே கூடியிருந்த ஜனங்கள் அவ்வளவு கவலையுடன் நிசப்தமாயிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டான். ஒரு பெரும் பிரயத்தனம் செய்து உடம்பை உதறிக்கொண்டு ஒரு குதிகுதித்து எழுந்து நின்றான். அவ்வளவுதான், அந்த ஜனக் கூட்டத்திலிருந்து ஒரு மகத்தான ஆனந்தக் கோஷம் கிளம்பிற்று. வாத்திய முழக்கங்களுடன் கூட. மனிதர்களின் கண்டங்களிலிருந்து எழுந்த வாழ்த் தொலிகள் போட்டியிட்டு ஆகாயத்தை அளாவின.

இவ்வளவு சப்தங்களுக்கும் மத்தியில் விக்கிரமனுக்கு அருகில் கவலை தோய்ந்த முகத்துடன் நின்ற ஒரு பெரிய மனிதர், "விலகுங்கள்! விலகுங்கள்! கஜராஜனுக்கு வழி விடுங்கள்!" என்று கூவினார். கொஞ்சம் கூர்ந்து கவனித்தோமானால் இந்த மனிதரை நாம் முன்னமே பார்த்திருக்கிறோம் என்பது நினைவு வரும். ஆமாம்; மாமல்லபுரத்தில் நடந்த கலைத் திருநாளின் போது நரசிம்மச் சக்கரவர்த்தியின் சமூகத்தில் செண்பகத் தீவு வாசிகளின் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த தூதர்தான் இவர்!

"விலகுங்கள்" என்ற அவருடைய குரலைக் கேட்டுச் சுற்றிலும் நின்ற ஜனங்கள் விரைவாக விலகிக் கொண்டார்கள். சற்று தூரத்தில் பட்டத்து யானையைப்போல் அலங்கரித்த ஒரு யானை நின்றது. அதை யானைப் பாகன் நடத்திக்கொண்டு விக்கிரமன் நின்ற இடத்தை நோக்கி வந்தான். பட்டணப் பிரவேசத்துக்காக அலங்கரிக்கப்பட்டது போலக் காணப்பட்ட அந்த கஜராஜனுடைய தூக்கிய துதிக்கையில் ஓர் அழகான புஷ்பஹாரம் இருந்தது. விக்கிரமன் மந்திர சக்தியினால் கட்டுண்டவனைப்போல் யானையைப் பார்த்தபடி கையைக் கட்டிக்கொண்டு அசையாமல் நின்றான். யானை மிகவும் சமீபத்தில் நெருங்கி வந்தபோது விக்கிரமனுடைய சிரம் அவனை அறியாமலே சிறிது வணங்கிற்று. யானை தன் துதிக்கையில் ஏந்தி வந்த மாலையை அவனுடைய கழுத்தில் சூட்டிற்று.

அப்போது அந்த ஜனக் கூட்டத்தில் ஏற்பட்ட ஆரவாரத்தையும் முழக்கங்களையும் வர்ணித்தல் அசாத்தியமான காரியம். "வீரவேல்!" "வெற்றிவேல்!" என்னும் கோஷங்களுடன், "விக்கிரம சோழ மகாராஜா வாழ்க!" "செண்பக நாட்டு மன்னர்பிரான் வாழ்க!" என்னும் கோஷங்களையும் கேட்டு, விக்கிரமனுடைய உள்ளம் பெருங்கிளர்ச்சியடைந்தது. மகா ஆச்சரியம் விளைவித்த இந்தச் சம்பவங்களைப் பற்றி யாரிடமாவது கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவனுக்குத் துடிப்பாயிருந்தது. ஆனால், அருகில் நின்றவர்களிடம் பேசுவதற்குக்கூட அச்சமயம் அவனுக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

கனவு





ஏக ஆரவாரங்களுக்கிடையில், விக்கிரமனை அந்த யானையின் மீது அமைந்திருந்த அம்பாரியில் ஏற்றினார்கள். யானை கடற்கரையிலிருந்து உன் நாட்டை நோக்கிக் கம்பீரமாக நடந்து



செல்ல, ஜனக் கூட்டமும் ஆரவாரத்துடன் அதைப் பின்தொடர்ந்து சென்றது. அம்பாரியின் மீது வீற்றிருந்த விக்கிரமனோ, "இல்லை; இதெல்லாம் நிச்சயமாக உண்மை இல்லை, கனவுதான் காண்கிறோம்; அல்லது இந்திரஜாலம், மகேந்திரஜாலம் என்று சொல்கிறார்களே... அப்படி ஏதாவது இருக்க வேண்டும்'' என்று அடிக்கடி எண்ணிக் கொண்டான்.

சுற்றுமுற்றும் அவன் கண்ணில் பட்ட தென்னந்தோப்புகள், மாஞ்சோலைகள், கழனிகள், கால்வாய்கள் எல்லாம் அவனுக்குச் சோழநாட்டுக் காட்சிகளாவே புலப்பட்டன.

சிறிது தூரம் போன பிறகு ஒரு கிராமம் தென்பட்டது. அதுவும் தமிழ்நாட்டு கிராமமாகவே தோன்றியது. ஊருக்குப் புறத்திலிருந்த கிராம தேவதையின் கோயிலும் அப்படியே தமிழர் கோயிலாகக் காட்சி தந்தது.

இன்னும் சிறிது தூரம் போனதும் ஒரு

பட்டணம் காணப்பட்டது. அதன் வீடுகள், வீதிகள், சதுக்கங்கள் எல்லாம் உறையூரின் மாதிரியிலேயே அமைந்திருந்தன. ஆனால், அவ்வளவு பெரிய பட்டணமில்லை. அவ்வளவு ஜன நெருக்கமும் கிடையாது. அத்தனை மாட மாளிகைகள், கூட கோபுரங்களும் இல்லை. அப்பட்டணத்தின் வீதிகளில் அவரவர் வீட்டு வாசல்களில் நின்ற ஸ்திரீகள், புருஷர்கள், குழந்தைகள் எல்லாரும் சிறந்த ஆடை ஆபரணங்களை அணிந்து, மலர்ந்த முகத்துடன் நின்றார்கள். அவர்கள் எல்லோரும் தமிழ்நாட்டு மக்களாகவே காணப்பட்டார்கள். அளவிலாத ஆர்வம் பொங்கிய கண்களுடன் அவர்கள் விக்கிரமனைப் பார்த்துப் பலவித வாழ்த்துக்களினால் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

> **விக்கிரமனுக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் உதித்தது. இதெல்லாம் பல்லவச் சக்கரவர்த்தியின் கபடமாயிருக்குமோ!**

விக்கிரமனுக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் உதித்தது. ஒருவேளை இதெல்லாம் அந்தப் பல்லவச் சக்கரவர்த்தியின் கபட நாடகமாயிருக்குமோ? தன்னை ஏற்றி வந்த கப்பல் பல நாள் கடலில் பிரயாணம் செய்வதாகப் பாசாங்கு செய்துவிட்டுக் கடைசியில் சோழ நாட்டின் கடற்கரையிலேயே தன்னை இறக்கி விட்டிருக்குமோ? இந்த ஆரவார ஊர்வலமெல்லாம் தன்னை ஏமாற்றிப் பல்லவச் சக்கரவர்த்தியின் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்வதற்கு ஒரு சூழ்ச்சியோ! இவ்விதமாக எண்ணியபோது விக்கிரமனுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது.

இதற்குள் யானையானது அந்தப் பட்டணத்துக்குள்ளேயே பெரிய மாளிகையாகத் தோன்றிய ஒரு கட்டடத்துக்கு வெளியே வந்து நின்றது. விக்கிரமனை யானை மீதிருந்து கீழே இறக்கினார்கள். ஜனக் கூட்டமெல்லாம் வெளியில் நிற்க, முன்னமே நமது கவனத்துக்கு ஆளான பெரியவர் மட்டும் விக்கிரமனை அழைத்துக்கொண்டு மாளிகைக்குள் சென்றார்.

''மகாராஜா! இது தான் இந்தச் செண்பக நாட்டின் மன்னர்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்த அரண்மனை. தாங்களும் இந்த அரண்மனையில் வசிக்க வேண்டுமென்பது இந் நாட்டுப் பிரஜைகளின் விண்ணப்பம்'' என்றார் அப் பெரியவர்.

''இந் நாட்டின் பெயர் என்னவென்று நீங்கள் சொன்னீர்?''

''செண்பக நாடு மகாராஜா!''

''இந்தப் பட்டணத்தின் பெயர் என்னவோ?''

''செண்பக நாட்டின் தலைநகரம் இது. இதன் பெயர் குமாரபுரி.''

''குமாரபுரிதானே? மாயாபுரி அல்லவே?''

''இல்லை, அரசே! குமாரபுரிதான்.''

''நீர் யார் என்று கொஞ்சம் சொன்னால் நன்றாயிருக்கும்.''

''அடியேன் பெயர் சித்தார்த்தன். காலஞ்சென்ற விஷ்ணுவர்த்தன மகாராஜாவுக்கு நான் முதல் மந்திரி. தங்களுக்கு விருப்பம் இருந்தால்...''

''என்ன சொன்னீர், மந்திரி என்றீரா? மந்திரவாதி என்றீரா?''

''ஒருவேளை மந்திரவாதியோ என்று நினைத்தேன். ஆமாம். நீர் மந்திரவாதியில்லாவிட்டால் நான் யார் என்பதும், என்னை இன்று காலை இந்தத் தீவுக்கருகில் கொண்டு வந்து இறக்கி விடுவார்களென்பதும் எப்படித் தெரிந்தது?''

''அது பெரிய கதை, மகாராஜா! சாவகாசமாக எல்லாம் சொல்கிறேன். இப்போதைக்கு...''

''இப்போதைக்கு இது உண்மையாகவே அரண்மனைதானா அல்லது சிறைச்சாலையா என்று மட்டும் சொன்னால் போதும்.''

''என்ன வார்த்தை சொன்னீர்கள்? சிறைச்சாலையா? இந்த நாட்டில் சிறைச்சாலையென்பதே கிடையாது! சிறைச்சாலை, இராஜ துரோகம், தண்டனை என்பதெல்லாம் பரதக் கண்டத்திலேதான், மகாராஜா!''

''அப்படியா? பரதக் கண்டத்துக்கும் இந்த நாட்டுக்கும் எவ்வளவு தூரமோ?''

''சாதாரணமாய்ப் பன்னிரண்டு நாள் கடல் பிரயாணம். புயல், மழை, முதலியவை குறுக்கிட்டால் இன்னும் அதிக நாளாகும்.''

''உண்மைதானே சொல்கிறீர்?''

''அடியேன் உண்மையைத் தவிர வேறு பேசுவதில்லை.''

''அப்படியானால், தமிழகத்திலிருந்து பன்னிரண்டு நாள் பிரயாணத்திலுள்ள நீங்கள், தமிழ் மொழி பேசுகிறீர்களே, எப்படி?''

''மகாராஜா! இந்த செண்பகத் தீவிலே மட்டுமல்ல - இன்னும் கிழக்கே தூரத்திலுள்ள தீவுகளிலும் தமிழ் மக்கள் வசிக்கிறார்கள்; தமிழ் மொழி பேசுகிறார்கள். தங்களுடைய மூதாதை கரிகாலச் சோழரின் காலத்தில் சோழ நாட்டுத் தமிழர்கள் வளம் மிக்க இந்தத் தீவுகளில் வந்து குடியேறினார்கள். கரிகாலச் சோழரின் குமாரர்தான் இந்தப் பட்டணத்தை ஸ்தாபித்தார். அதனாலேயே குமாரபுரி என்று இதற்குப் பெயர் ஏற்பட்டது. அந்த நாளில் சோழ சேனாதிபதி ஒருவர், சக்கரவர்த்தியின் ஆக்ஞையின் பேரில் இந்நாட்டை ஆட்சி புரியலானார். அவருடைய சந்ததியார் பத்து வருஷத்துக்கு முன்பு வரையில் இந்நாட்டின் அரசர்களாயிருந்து செங்கோல் செலுத்தி வந்தார்கள். அந்த வம்சத்தின் கடைசி அரசரான விஷ்ணுவர்த்தனர் சந்ததியில்லாமல் காலமானார். பிறகு, இந்த நாடு இன்று வரையில் அரசர் இல்லாத நாடாயிருந்து வந்தது. அடிக்கடி பக்கத்துத் தீவுகளில் உள்ளவர்கள் வந்து இந்நாட்டின் பட்டணங்களையும் கிராமங்களையும் சூறையாட ஆரம்பித்தார்கள். வெவ்வேறு பாஷை பேசுவோரும், அநாகரிகர்களும், தட்டை மூஞ்சிக்காரருமான பற்பல சாதியார் இந்தத் தீவைச் சுற்றியுள்ள தேசங்களில் வசிக்கிறார்கள். அவர்களை எதிர்த்து நின்று வெற்றி பெறுவதற்கு அரசர் இல்லாக் குடிகளாகிய எங்களால் முடியவில்லை. இப்படிப்பட்ட சமயத்தில் முருகக் கடவுளே அனுப்பி வைத்ததுபோல், சோழர் குலக்கொழுந்தான தாங்கள் எங்களைத் தேடி வந்திருக்கிறீர்கள்... எங்களுடைய பாக்கியந்தான்.''

கரிகாலச் சோழனைப் பற்றி அந்தப் பெரியவர் பிரஸ்தாபித்தவுடனே விக்கிரமன் மிகவும் சிரத்தையுடன் கேட்கத் தொடங்கினான். அவனுக்கிருந்த சந்தேகம், அவநம்பிக்கை எல்லாம் போய் விட்டது. சித்தார்த்தரின் குரல், முகத் தோற்றம் ஆகியவற்றிலிருந்து, அவர் சொல்வதெல்லாம் சத்தியம் என்னும் நம்பிக்கையும் விக்கிரமனுக்கு உண்டாயிற்று. 'நமது தந்தை பார்த்திப மகாராஜா எந்தக் கரிகால் வளவனைப் பற்றி அடிக்கடி பெருமையுடன் பேசி வந்தாரோ, அந்தச் சோழர் குல முதல்வன் காலத்திலே தமிழர்கள் வந்து குடியேறிய நாடு



இது என்ன ஆச்சரியமான விதி வசத்தினாலோ இப்படிப் பட்ட நாட்டுக்கு நாம் வந்து சேர்ந்திருக்கிறோம்!' என்பதை நினைத்தபோது விக்கிரமனுக்கு மயிர்க்கூச் செறிந்தது, கண்ணில் நீர் துளிர்த்தது.

''ஐயா! உம்மை நான் பரிபூரணமாக நம்புகிறேன். எல்லா விஷயங்களையும் விவரமாக அப்புறம் கேட்டுக்கொள் கிறேன். இப்போதைக்கு ஒன்று மட்டும் சொல்லி விடுகிறேன். என்னை நீங்கள் உங்களுடைய அரசனாய்க் கொள்வதாயிருந் தால், இன்னொரு ராஜாவுக்கோ, சக்கர வர்த்திக்கோ கப்பம் செலுத்த முடியாது. சுதந்திர நாட்டுக்குத்தான் நான் அரசனா யிருப்பேன்; இல்லாவிட்டால் உயிரை விடுவேன். நீங்களும் இந்நாட்டின் சுதந்திரத்தைக் காப்பதற்காக உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருக்க வேண்டும். எதிரிகள் துஷ்டர்களாயிருந்தாலும், நல்ல வர்களாக இருந்தாலும் யாராயிருந்தாலும் பணிந்து போகிறது என்ற பேச்சே உதவாது. இதற்குச் சம்மதமாயிருந்தால் சொல்லுங் கள்'' என்றான் விக்கிரமன்.

''மகாராஜா, தங்களுடைய தந்தை பார்த்திப மகாராஜா போர்க்களத்தில் அடைந்த வீர மரணத்தின் புகழ் எங்கள் காதுக்கும் எட்டியிருக்கிறது. எங்களு டைய உடம்பில் ஓடுவதும் சோழ நாட்டின் வீர இரத்தந் தான். இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் உடல், பொருள், ஆவியைக் கொடுத்துத் தங்கள் சுதந்திரத்தைக் காப் பாற்றிக்கொள்ள ஆயத்த மாயிருக்கிறார்கள். வீரத் தலைவன் ஒருவன்தான் எங்களுக்கு வேண்டி யிருந்தது. தாங்கள் வந்து விட்டீர்கள். இனி என்ன குறை...?''

அச்சமயம் கோயில் சேமக்கலசத்தின் ஓசை கேட்டது.

சித்தார்த்தர், ''மகாராஜா! தாங்கள் ஸ்நான பானங்களை முடித்துக்கொண்டு சிறிது இளைப்பாறுங்கள். சாயங்காலம் முருகவேள் ஆலயத்துக்குப் போய்த் தரிச னம் செய்ய வேண்டும். கூடிய சீக்கிரத்தில் முடிசூட்டு விழா நடத்துவது பற்றியும் யோசனை செய்ய வேண்டும்'' என்றார்.

17. குந்தவியின் சபதம்

காஞ்சி நகர் அரண்மனையின் உப் பரிகை நிலா மாடத்தில் சக்கரவர்த்தியும் குந்தவி தேவியும், அமர்ந்திருந்தார்கள். கிருஷ்ண பட்சத்து முன்னிரவு. வானத்தில் விண்மீன்கள் சுடர்விட்டு ஒளிர்ந்தன. கிழக்கே வெகு தூரத்தில் மாமல்லபுரத்துக் கலங்கரை விளக்கம் நட்சத்திரங்களுடன் போட்டியிட்டுப் பிரகாசித்துக் கொண்டி ருந்தது.

காஞ்சி நகரின் பற்பல சிவாலயங்கள், விஷ்ணு ஆலயங்களிலிருந்தும் பேரிகைச் சப்தம், ஆலாட்ச மணி ஓசை, யாழின் இன்னிசையுடன் கலந்து பாடும் பக்தர் களின் குரலொலி - எல்லாம் கலந்து வந்து கொண்டிருந்தன. அரண்மனைப் பூந்தோட் டத்திலிருந்து செண்பகம், பன்னீர், பாரி ஜாதம் ஆகிய மலர்களின் சுகந்தம் குளிர் காற்றுடன் கலந்து இலே சாக வந்துகொண்டிருந்தது.

''குழந்தாய்! ஏன் இப்படி ஒரு மாதிரியிருக்கிறாய்? உடம்பு நன்றாகயில் லையா?'' என்று சக்கர வர்த்தி கேட்டார்.

''எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை, அப்பா! மனந்தான் நன்றா யில்லை.''

''மனம் இருக்கிறதே, அம்மா! ரொம்பப் பொல்லாதது, 'மத்தகஜத் தைப் போன்றது' என்று பெரியவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். அதைப் புத்தி என்கிற அங்குசத்

''அந்த வேஷதாரி சிவனடியாரை சக்கரவர்த்தி முன்னால் நிறுத்தாவிட்டால் என் பெயர் குந்தவி அல்ல!''



தால் அடக்கி ஆள வேண்டும்...''

''அப்பா...!''

''ஏன் குழந்தாய்!''

''நான் சமண முனிவரைப் பார்த்துவிட்டு வந்தது தங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''என் மகள் என்ன செய்கிறாள் என்பது எனக்குத் தெரியாமல் போனால், இந்தப் பெரிய பல்லவ சாம்ராஜ்யத்தை நான் எப்படி அம்மா கட்டி ஆள முடியும்?''

''அப்பா! நான் சமண சமயத்தையோ, பௌத்த சமயத்தையோ சார்ந்துவிடப் போகிறேன்.''

''ஏன் அம்மா, அப்படி? நமது சைவ-வைஷ்ணவ சமயங்கள் என்ன அவ்வளவு துர்பாக்கியத்தைச் செய்துவிட்டன?''

''வாழ்க்கையில் எனக்கு வெறுப்பு உண்டாகிவிட்டது. இந்த உலகத்தில் ஏன் பிறந்தோமென்று இருக்கிறது!''

''அடடா! அவ்வளவுக்கு வந்துவிட்டதா? அப்பர் பெருமானைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தாயே? அவர் மனிதப் பிறவியின் மகிமையைப் பற்றி உனக்கு ஒன்றும் சொல்லவில்லையா? தில்லை அம்பலத்தில் ஆனந்த நடனமிடும் பெருமானைத் தரிசிப்பதற்காகவே...''

''நிறுத்துங்கள் அப்பா! வயதாக ஆக, அந்தப் பெரியவர் ஒரே பக்திப் பைத்தியமாகிவிட்டார். ஆனந்தமாம்! நடனமாம்! இந்த அழகான உலகத்தைப் படைத்த கடவுளுக்கு ஆனந்தம் வேறு, நடனம் வேறு வேண்டிக் கிடந்ததாக்கும்?''

இதைக் கேட்ட சக்கரவர்த்தி கலகலவென்று சிரித்தார். குந்தவி வெறுப்புடன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

''நான் ஏன் சிரித்தேன் என்று தெரியுமா, குந்தவி?''

''அதுதான் நானும் யோசித்துக் கொண்டிருந்தேன். தங்களுக்கு ஒருவேளை பைத்தியம் கியித்தியம்...''

''இல்லை, குழந்தாய்! இல்லை; பைத்தியம் எனக்குப் பிடிக்கவில்லை! நான் சிரித்த காரணம் வேறு. உன் மாதிரியே எனக்கும் ஒரு காலத்தில் இந்த உலகம் பிடிக்காமலிருந்தது. வாழ்க்கை வேப்பங்காயாகி விட்டது! அதன் காரணம் என்ன தெரியுமா?''

''நான் உங்களுக்குப் பெண்ணாய்ப் பிறந்ததுதானோ என்னவோ?''

சக்கரவர்த்தி புன்சிரிப்புடன், ''இல்லை அம்மா, இல்லை! நீ பிறந்த பிறகு எனக்கு மறுபடியும் உலகம் பிடிக்க ஆரம்பித்துவிட்டது. அதற்கு முன்னாலேதான் சில காலம் எனக்கு உலக வாழ்க்கையின் மேல் ரொம்பவும் வெறுப்பாயிருந்தது. அதற்குக் காரணம்... என் தந்தையின் மீது எனக்கு ரொம்பக் கோபமாயிருந்ததுதான்!'' என்றார்.

குந்தவியின் முகத்தில் அவளை அறியாமலே புன்னகை தோன்றியது. இதைப் பார்த்த நரசிம்மவர்மர், ''உனக்கு இப்போது

வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகியிருப்பதற்கும் அதுதானே காரணம்? என் மேல் உனக்கு இப்போது சொல்ல முடியாத கோபம்; இல்லையா?'' என்றார்.

''குந்தவி, அருள்மொழி உன்னைப் பார்க்க சம்மதிக்க வேண்டுமே'' என்றார் நரசிம்மச் சக்கரவர்த்தி!

குந்தவி கண்களில் துளிர்த்த நீர்த் துளியைத் துடைத்துக் கொண்டாள். தலை குனிந்தபடி, ''அப்பா! உங்கள் பேரில் எனக்கு என்ன கோபம்? உங்களுடைய தர்மராஜ்யத்தில் இப்படிப்பட்ட அநீதி நடந்துவிட்டதே என்றுதான் வருத்தமாயிருக்கிறது'' என்றாள்.

''இதுதானா பிரமாதம், குந்தவி? இதற்கு ஏன் இவ்வளவு கவலை? அநியாயத்தைச் செய்வதற்கு எனக்குச் சக்தி உண்டு என்றால், அதை நிவர்த்திப்பதற்கும் சக்தி உண்டல்லவா? உண்மையில் அநீதி நடந்து விட்டதாக எனக்குத் தெரிந்தால், உடனே அதற்குப் பரிகாரம் செய்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்'' என்றார் சக்கரவர்த்தி.

''நிஜந்தானே, அப்பா...! சோழ ராஜகுமாரனுடைய செயலுக்கு அவன் பொறுப்பாளி இல்லையென்று தெரிந்தால் தண்டனையை மாற்றிவிடுவீர்கள் அல்லவா?''

''நிச்சயமாய், அம்மா!''

அப்போது குந்தவி தன் மனத்துக்குள், 'அந்த வேஷதாரி சிவனடியாரை எப்படியாவது கண்டுபிடித்து, அவருடைய தாடியைப் பற்றி இழுத்துக்கொண்டு வந்து, சக்கரவர்த்தியின் முன்னிலையில் நிறுத்தாவிட்டால் என் பெயர் குந்தவி அல்ல!' என்று சபதம் செய்துகொண்டாள்.

''குந்தவி! என்ன யோசனையில் ஆழ்ந்து விட்டாய்? இன்னும் இரண்டு நாளில் நான் உறையூருக்குப் போகப் போகிறேன். நீயும் வருவாயல்லவா?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

''வருகிறேன், அப்பா! அங்கே எனக்கும் ஒரு காரியம் இருக்கிறது; அதற்கு நீங்கள் குறுக்கே ஒன்றும் சொல்லக்கூடாது.''

''என்ன காரியம் என்று எனக்குச் சொல்லலாமோ, அதுவும் இரகசியமோ?''

''இரகசியம் ஒன்றுமில்லை, அப்பா! அருள்மொழிராணியை நான் பார்க்கப் போகிறேன்.''

''சரிதான்; ஆனால், அருள்மொழிராணி உன்னைப் பார்க்கச் சம்மதிக்க வேண்டுமே!''

''அவர் என்னைப் பார்ப்பதற்கு என்ன தடை? எதற்காக மறுக்கிறார்?''

''அவளுடைய பிள்ளையைத் தேசப் பிரஷ்டம் செய்தவன் மகள் ஆயிற்றே, நீ? உன் மேல் கோபம் இல்லாமல் இருக்குமா?

''என் மேல் எதற்காகக் கோபிக்க வேண்டும்? ரொம்ப அழகுதான்! நானா இவருடைய பிள்ளைக்குத் துர்போதனை செய்து, சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்யும்படி தூண்டினேன்? என்மேல் கோபித்துக் கொண்டு என்ன பிரயோஜனம்?'' என்றாள் குந்தவி.



இதைக் கேட்ட சக்கரவர்த்தி தம் மனத்துக்குள், 'பெண்ணாய்ப் பிறந்தவர்களிடம் தர்க்க நீதியை எதிர்பார்ப்பதிலேயும் பிரயோஜனமில்லைதான்!' என்று எண்ணிக் கொண்டார்.

(தொடரும்)



வீட்டு விஷயங்களை அலுவலகத்தில் பேசாதீர்கள்!

''ஒருபுறம் கொட்டிக் கிடக்கும் வேலைவாய்ப்புகள். மறுபுறம் அதனை அடைந்த பின்பு ஏற்படும் பிரச்னைகள். இந்த இரண்டுக்கும் நடுவில் ஓர் இடைவெளி இருக்கிறது. அதைத்தான் நாங்கள் நிரப்புகிறோம்'' என்கிறார் 'RIPE' என்கிற ஆளுமைத் திறனை மேம்படுத்தும் நிறுவனத்தின் இயக்குநர் ஸ்ரீராம்.

''வேலைக்குச் சேர்ந்த புதிதிலேயே உயர்ந்த பதவியை அடைய வேண்டும் என்று சிலர் நினைக்கின்றனர். சில அடிப்படையான விஷயங்களைப் பின்பற்றினாலே உயர்ந்த பதவி நம்மைத் தேடி வரும்.

வேலையில் சேர்ந்ததுமே முதலில் அடுத்த படிநிலைக்கு நாம் தயாராகிவிட்டோம் என்ற மனநிலைக்கு வர வேண்டும். ஏனென்றால், படிக்கும்போது நம்மிடம் இருக்கும் சுதந்திரப் போக்கு வேலை பார்க்கும் இடங்களில் இருந்தால், அது சிக்கலை உண்டாக்கும். 'நம்மை நம்பி பொறுப்புகள் இருக்கின்றன. இதைச் செய்வதற்காக நாம் நியமிக்கப்பட்டுள்ளோம்' என்று அடிக்கடி மனத்துக்குள் 'நினைத்துக்கொண்டாலே போதும். நம்மை அறியாமல், சரியாக வேலையைச் செய்ய வேண்டும்' என்கிற உந்துதல் வந்துவிடும்.

புதிய சூழ்நிலை, உணவு முறையில் மாற்றம், வேலையில் அழுத்தம் இன்னும் பிற காரணங்களால் பலர் தங்கள் வேலையை விட்டுவிடுகின்றனர். அதிகச் சம்பளத்தோடு இன்னொரு நிறுவனம் அழைத்தால் அதற்கான பொறுப்பும் அதிகமாக இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மற்றவர்களோடு பழகுவது, தொடர்பு கொள்வதுகூட ஒரு கலைதான். அலுவலகத்தில் பணிபுரியும் அனைவரிடமும் சிரித்த முகத்துடனும் பணிவுடனும் பேசினால், புதிய சூழ்நிலை மாறி சகஜ நிலைக்கு வந்துவிட



லாம். நாம் செய்யும் வேலையைக் காட்டிலும் மற்ற வர்கள் நம்மை அங்கீகரிப்பது நம் நடத்தையைத் தான்.

உயர்ந்த பதவியில் இருக்கும் பலர் தவறாது கடை பிடிக்க வேண்டியது சரியான உணவுப் பழக்கத் தைத்தான். நமது மன அழுத்தத்தைப் பாதியாகக் குறைந்துவிடும் தன்மை உணவுக்கு உண்டு. 'வேலை நேரத்தில் சாப்பிட நேரமிருப்பதில்லை' என்பது பலருடைய குற்றச்சாட்டாக இருக்கிறது. ஒரு நாளுக்கு வேண்டிய முழு சக்தியை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் உணவுக்கு இருப்பதால் அதற்காக நேரம் ஒதுக்கத்தான் வேண்டும்.

அதிக வேலைப் பளு என்பது இன்றைய சூழலில் அனைவருக்குமே சகஜமாகிவிட்டது. குறித்த நேரத்தில் வேலையைச் செய்வது, சரியான முறை யில் கையாள்வது இந்த இரண்டு விஷயங்களும் வேலைப் பளுவைக் குறைக்கும்.

வெற்றி பெற்றவர்கள் வாழ்க்கையைக் கவனித் துப் பார்த்தால் அவர்களின் பொதுவான குணமாக ஒன்று இருக்கும். அது 'டைம் மேனேஜ்மெண்ட்'தான். தங்கள் வேலை நேரத்தை அநாவசியமான வேறெந்த செயலுக்கும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.

எந்த ஒரு சிக்கலான விஷயத்தையும் நாம் கையாள்வதில்தான் இருக்கிறது. உதாரணத்துக்கு அலுவலகம் செல்லும்போது தாமதமாகிவிட் டது எனில் காரணத்தை ஆராய்வதை விட்டு விட்டு, அடுத்து செய்ய வேண்டியதை நிதானமாக யோசிக்க வேண்டும். நம்முடைய தாமதத்துக்கான காரணத்தையும், வந்துகொண் டிருப்பதையும் அலுவலகத்துக் குத் தெரியபடுத்தலாம். இதனால் பதற்றம் சற்றுக் குறையும். அலுவலகம் நுழையும் முன் மனத்தை நிதானப்படுத்திக் கொண்டு செல்ல வேண்டும். பதற்றம் என்பது மோசமான தொற்று நோய்.

வீட்டு விஷயங்களை அலு வலகத்தில் பேசுவதைத் தவிர்ப் பது நல்லது. ஏனென்றால், அது



✱ ஸ்ரீராம்

நம் மீது மற்றவர்களுக்கு கேலி யுணர்வையே ஏற்படுத்தும். அந் தரங்க விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளும் இடமாக ஒருபோதும் அலுவலகத்தைப் பயன்படுத்தக் கூடாது. எல்லாவற்றுக்கும் மேலாக மூன்று முக்கிய விஷயங்களைப் பின்பற்றினாலே வெற்றியை கைதட்டிக் கூப்பிட லாம். அவை... பொறுமை, கற் றுக்கொள்வது, கற்றதைப் பிழை யில்லாமல் செய்வது.

இதுதான் வெற்றியின் ரகசிய மாக நாங்கள் சந்திப்பவர்களிடம் கூறுகிறோம்'' என்கிறார் ஸ்ரீராம்.

– ஜெ.தீபா

உங்கள் குழந்தையின் வளமான எதிர்காலம் - சி.எஸ்.தேவநாதன், குட்புக்ஸ் பப்ளிகேஷன்ஸ், ஏஏ-96, அண்ணா நகர், சென்னை - 40

சிறந்த குழந்தையை உருவாக்க, பல நல்ல வழிமுறைகளை விவரிக்கும் நூல். அன்பு, அக்கறை, ஆதரவு, ஊக்குவிப்பு போன்ற உணர்வுகளைப் பெற்றோர் வெளிப்படுத்துவதன் மூலம், குழந்தையின் நடத்தை, ஆளுமை, வெற்றியை மேம்படுத்த முடியும் என்பதை விரிவாக எடுத்துரைக்கிறார் சி.எஸ்.தேவநாதன்.



• புத்தக விமர்சனம்

உலகம் இப்படித்தான்! ரா.கி.ரங்கராஜன், விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை - 02

அனைத்துத் துறைகளைச் சார்ந்த செய்திகள் மட்டுமல்லாது, உலக வாழ்வில் நாம் அறிந்திராத பல தகவல்களையும் செய்தித் துணுக்குகளாக, சுவாரஸ்யமாக வழங்கியுள்ளார் ரா.கி.ரங்கராஜன். ஆங்காங்கே அள்ளித் தெளித்திருக்கும் நகைச்சுவைத் துணுக்குகளும் கூடுதல் சுவை. அறிவுப் பசியுடன் அலையும் வாசகர்களுக்குத் தலைவாழை விருந்து இந்நூல்!

தலைவாழை விருந்து!



அறிவுறுத்தலும் ஆற்றுப்படுத்தலும்-இரா.பசுமைக்குமார், ஆர்.ராஜமோகன், சாந்தா பதிப்பகம், முத்துவிழா இல்லம், 13(5), ஸ்ரீபுரம் 2ஆவது தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14

அறிவுறுத்தலும் ஆற்றுப்படுத்தலும் எவ்வளவு முக்கியமானது, அவசியமானது என்பதுதெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மிகவும் பயனுள்ள நூல். அறிவுறுத்தலின் கோட்பாடுகள், அறிவுறுத்தல் திட்டத்தின் பல்வேறு சேவைப் பிரிவுகள், நல்ல ஆற்றுப்படுத்துநருக்குத் தேவையான நற்பண்புகள் என்று பல பயனுள்ள விவரங்கள் புரியும்படியாக எழுதப்பட்டுள்ளன.



அதிர்ஷ்டக் காற்று - இந்திரா சௌந்தர்ராஜன், திருவரசு புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 17

மானுட பலம், அமானுஷ்யம் என்ற இரு கருக்களைக் கொண்டு, 'அதிர்ஷ்டக் காற்று', 'திட்டி வாசல் மர்மம்' எனும் இரு நாவல்களை எளிய நடையில் அளித்துள்ளார் ஆசிரியர். விறுவிறுப்புக்குக் குறையில்லாது இருப்பினும் அடுத்து நடக்கப் போவது முன்பே யூகிக்க முடிவதைத் தவிர்த்திருக்கலாம்.

– மித்ரா





கதவு வைத்தால்...

இராமநாதபுர மாவட்டம், கமுதி அருகே இருக்கிறது பாப்பணம் கிராமம். இந்தக் கிராமத்திலுள்ள அனைத்து வீடுகளிலும் கடந்த மூன்று தலைமுறையாகக் கதவுகளே கிடையாது. ஏனென்று கேட்டால், 'சாமிக் குத்தம்' என்கிறார்கள். விவரம் அறிய களத்தில் இறங்கினோம்.

''மூணு நாலு தலைமுறையா நாங்க இந்த ஊர்லதான் இருந்து வர்றோம். அதுக்கு முன்னாடி நரிக்குடி பக்கத்துல விடத்தகுளம்தான் எங்க பூர்வீகம். அந்த ஊர்ல தீண்டாமைக் கொடுமை தாங்க முடியாம, எங்க ஆளுங்க அங்கேயிருந்து இங்க வர்றப்ப, கூடவே முனியப்பசாமி சிலையையும் தூக்கிக்கிட்டு வந்துட்டாங்க. ஊரு எல்லையில காவல் தெய்வமான முனியப்பசாமிக்கு ஒரு கோயிலும் கட்டினாங்க. அந்தக் கோயில்லயும் வாசல் நிலைப்படியோ, கதவோ ஏதும் வைக்கலை. தாயைக் காத்த தனயன் படத்துல சரோஜா தேவி பாடுவாங்கலே 'காட்டு ராணிக் கோட்டையிலே கதவுகள் இல்லை... இங்கு காவல் காக்க கடவுளையன்றி ஒருவருமில்லை!'னு... அது போல ஊர் எல்லையில இருக்கற முனியப்பசாமிதான் எங்க ஊர்ல களவு ஏதும் போகாம காவல் காத்து வர்றாரு!'' என்கிறார் விவசாயி மூக்கன்.

ஊரில் உள்ள எல்லா வீடுகளையும் ஒரு ரவுண்டு பார்த்துவிட்டு வருவதற்கு முன்பாக, ''வாங்க... எங்க ஊரு காவல் தெய்வமான முனியப்பசாமி கோயிலுக்குப் போயிட்டு வந்திடுவோம்!'' எனக் கூறி நம்மைக் கோயிலுக்கு அழைத்துப் போகிறார்கள் ஊர் மக்கள். இரண்டு ஏக்கர் பரப்பளவில் சுற்றுச்சுவருடன் அமைந்திருக்கிறது முனியப்பசாமி கோயில்.





சாமிக் குத்தம்!

அத்தனை வாசல்களும் கதவுகளின்றி திறந்தே இருக்கின்றன.

"எங்க ஊர்ல யாரும் வாசல் நிலைப்படி வைச்சோ, கதவு வைச்சோ வீடு கட்ட மாட்டாங்க. அப்படியும் மீறிப் போயி கட்டினா சாமி குத்தம் ஆகிப் போயிடும். இருபவது வருஷத்துக்கு முன்னாடி முத்துமாரின்னு ஒருத்தர் கதவு வெச்சு வீடுகட்டினாரு. ஒரு நாள் திடீர்னு இடி விழுந்து அவரோட மாடுங்க ரெண்டு செத்துப் போச்சு. வீட்ல எல்லாருமா வெளியூர் போகணும்னா வாசலுக்கு மேலே ஒரு சணல் நூலைக் கட்டி, அதுல சேலைத் துணிய மறைப்பா தொங்கவிட்டு, காத்துல தூக்காம இருக்கறதுக்காக வரிசையா நாலைஞ்சு செங்கல்லைத் தூக்கி வெச்சிட்டுப் போயிடுவோம். நாயி, கோழின்னு எதுவும் உள்ளே போகாம இருக்கணும்னுதான் இந்த ஏற்பாடு!" எனக் கூறுகிறார் முனியசாமி.



* பூமிநாதன்



* மூக்கன்



* முனியசாமி

"முதுகலை தமிழ் இலக்கியம் மற்றும் ஆசிரியர் பயிற்சி முடித்தவன் நான். மானாமதுரை அருகே துவக்கப் பள்ளி ஒன்றில் உதவி ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். நாங்கள் வசித்து வரும் இந்த வீடு, மூன்று தலைமுறைக்கு முற்பட்டது. என் தாத்தா மொட்டையன் 1952ல் முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றவர். அவர் வசித்தபோது மண் சுவர், கீற்றுக் குடிசை. என் அம்மா முத்துப்பிள்ளை 2001ல் பாப்பணம் ஊராட்சி மன்றத் தலைவியாகப் பணியாற்றியவர். அவர் காலத்தில் காலத்தில் பனை ஓலைக் குடிசையாக மாறியது. நானும், என் மனைவியும் பள்ளி ஆசிரியர்கள். தற்போதுதான் கெட்டிச் சுவர் ஓட்டு வீடாக மாற்றம் வந்தது. மேற்கண்ட இந்த மூன்று தலைமுறைகளிலும் வீட்டின் வடிவம் மட்டுமே மாறி வந்துள்ளதே தவிர, இந்த வீட்டுக்கு வாசல் நிலையோ, கதவோ பொருத்தப்படவில்லை. அப்படி மீறி கதவு அமைத்துவிட்டால், சாமிக்குற்றம் வந்து எங்கள் மக்கள் பாதிக்கப்பட்டு விடுவார்கள் என்று முழுமையாக நம்புகிறோம். பகல் நேரத்திலும் சரி, இரவு நேரத்திலும் சரி, எங்கள் கிராமத்தில் இதுவரை எந்தவொரு பொருளும் களவு போனது இல்லை!" என்கிறார் பூமிநாதன்.

அபிராமம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்டது பாப்பணம் கிராமம். காவல் நிலையத்தில் விசாரித்தால், "நீங்கள் குறிப்பிடும் பாப்பணம் கிராமத்திலிருந்து எதுவும் திருட்டுப் போனதாக இதுவரை புகார் மனு ஒன்றுகூட எங்கள் காவல் நிலையத்துக்கு வந்தது கிடையாது!" எனக்கூறி வியக்க வைக்கிறார் காவல் நிலைய உதவி ஆய்வாளர்.

- திருவரசு

▪ யுகபாரதி

ஒசழ்ப் பிழ்ச்செல்வம்

பொய் சொன்னால்
கிடைக்கிறது போஜனம்
கல்லிலும் உரிக்கலாம் நாரை
காசிருந்தால்

ஜென்மத்துப் பாவங்களின்
கூட்டுத்தொகையே
வசதியும் வாய்ப்புகளும்

அனுபவம் ஏதுமின்றி
ஆகலாம் பிரபலமாக
உண்மை விற்கிறது
ஊடக யுகத்தில்

ரொக்கமிருந்தால்
நொறுக்குத் தீனிபோல
கொறிக்கலாம் யாரையும்

அடாத நெருக்கடியில்
விடாது கேடு செய்தால்
கிட்டும் அதிகாரம்
கிட்டவரும் புகழ்மாலை

ஆள்பிடித்து வாங்கலாம்
எதையும்
அனுசரித்தால் பதவி
என்னவும் செய்து கட்டலாம்
எட்டடுக்கு மாளிகை

உழைக்கிறவன் தைக்கிறான்
ஒட்டுத்துணியை
ஓரமிருப்பவனுக்கோ
உப்பரிகைத் தாலாட்டு

என்றும்
கொல்வதில்லை தெய்வம்
நின்று கொல்கிறோம் மெய்யை
நீயும் நானும்





"உலகத்திலேயே மிகப்பெரிய தீட்டு கடன்தான்!"

கடன்

அருள்வாக்கு

கடன் கொடுத்தவன் எப்படியெல்லாம் கடின சித்தனாகிக் கொடுமை செய்கிறான் என்பது எனக்குத் தெரியும். அநியாய வட்டி வாங்குவது, எவ்வளவு திருப்பிக் கொடுத்தாலும் அசலில் கழித்துக்கொள்ளாமல், வட்டியிலேயே கழித்துக் கொள்வது என்று அவர்கள் அனேக அக்கிரமங்களைச் செய்கிறார்கள்.

கடன் வாங்குவது என்ற தப்பை ஒருவன் செய்வதால்தான், இப்படிக் கடன் கொடுத்தவன் பாவம் செய்பவனாக ஆகிறான். கடைசியில் அரசு அவனுக்கு நாமம் போடுகிறபோது அவனும் கஷ்டப்படுகிறான்.

ஆதலால், ஆரம்பம் முதலே எவனானாலும் கடன் என்றே போகாமல், தன் வருவாயில் காலம் தள்ளுவது என்று ஆக்கிக்கொள்ள வேண்டும்.

கடன்பட்டவர்களால்தான் அனேகர் திருடர்களாவது; போலி சந்நியாசிகளாகி ஊரை ஏமாற்றுவது; மானஸ்தர்களில் பலர் குடும்பத்தோடு தற்கொலை பண்ணிக் கொள்வதாகவும் அவ்வப்போது செய்தி பார்க்கும்போது மனசு வேதனைப்படுகிறது.

முன்பு சொன்ன மாதிரி கடன் கொடுத்தவன், கடன்பட்டவன் என்ற இரண்டு பேர் மட்டுமில்லாமல் ஊரார் எல்லோருமே ஒருவனைக் கடனாளி என்றால், 'அவன் எங்கே நம்மை உபத்ரவம் செய்ய வருவானோ?' என்று ஓடும்படியிருக்கிறது.

கடன் பழக்கத்தினால் உலகம் முழுக்கச் சிரமங்கள் ஏற்படுவதால், இந்த உலகத்திலேயே கடன்தான் பெரிய தீட்டு.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

பரிசு மேல் பரிசு; பாராட்டு மேல் பாராட்டு. திடீரென்று கம்யூனிஸத்தை உதறித் தள்ளினார் டோரிஸ்!



டோரிஸ் லெஸ்ஸிங், காய்கறி மார்க்கெட்டுக்குப் போயிருந்த சமயம் பார்த்து, நோபல் கமிட்டி அந்த அறிவிப்பை வெளியிட்டது. இந்த ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு அவருக்குத்தான். வாழ்த்துகள் டோரிஸ். திருதிருவென்று விழித்திருக்கிறார் அவர். விஷயத்தைச் சொன்ன போதும்கூட அவரிடம் பெரிதாக எந்த மாற்றமும் இல்லை. ஓ... ஐ டோண்ட் கேர்!

காய்கறிக் கடையிலிருந்து வாங்கி வந்த பொருள்களைவிட, அதிக எண்ணிக்கையில் பரிசுகள் வாங்கியவர் டோரிஸ் லெஸ்ஸிங். 'எனக்கு இப்போது வயது எண்பத்தெட்டு ஆகிறது. இன்னும் எத்தனை நாளைக்குத் தாக்குப் பிடிப்பேன் என்று தெரியாது. அதனால்தான் இப்போதே இதையும் கொடுத்திருக்கிறார்கள்.' ஒரு சிறிய புன்னகையைக்கூட அவர் முகத்தில் பார்க்க முடியவில்லை. மெலிதாக ஒரு புன்முறுவல் மட்டும்தான்.

பிரிட்டன் தேசத்துக்காரரான இவர், பிறந்தது பெர்ஷியாவில் (இப்போதைய இரான்). பதினான்கு வயதில் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு அடுக்கடுக்காகப் பல வேலைகள் செய்ய ஆரம்பித்தார். 'வீட்டு உதவியாளர்', 'ஸ்டெனோ', 'பத்திரிகையாளர்' பிறகு எழுத்தாளர்.

ஆப்பிரிக்காவில் நிலவும் காலனி ஆதிக்கம் (ஜிம்பாவேயில் இருபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார்), உறவுமுறைகளுக்குள் நடக்கும் சிக்கல்கள் (இருமுறை திருமணம் செய்து கொண்டு இருமுறை விவாகரத்துப் பெற்றவர்) மன அழுத்தம், உலக அமைதி... இப்படியாக வாசகர்களை இவர் அழைத்துச் சென்று காட்டிய இடங்கள் அநேகம். இதுவரை மொத்தம் ஐம்பது புத்தகங்கள் எழுதியிருக்கிறார் டோரிஸ். 'தி கோல்டன் நோட்புக்' அவற்றுள் குறிப்பிடத்தக்கது. ஆண் - பெண் உறவுகள், அவர்களுக்கு இடையிலான பிரச்னைகள், தீர்வுகள் என்று பெண்ணியப் பார்வையில் ஆழமாக, அகலமாக விவாதிக்கும் நூல் இது. நோபல் கமிட்டி மிகவும் சிலாகித்த புத்தகமும் கூட. ஆனால், ஏனோ டோரிஸுக்கு இந்தப் புத்தகம் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. காரணம், அந்தப் புத்தகம் எழுதிய பிறகு பெண்ணியம்

ஐ டோண்ட் கேர்!

உள்ளும் புறமும்

மருதன்

தொடர்பான தனது கருத்துகளை அவர் மாற்றிக்கொண்டது தான்.

பிரச்னையே இங்குதான் ஆரம்பமாகிறது. டோரிஸ் லெஸ்ஸிங்கின் ஆளுமையை விவரிக்க இந்த மூன்று வார்த்தைகள் போதும். 'ஐ டோண்ட் கேர்'. ஆரம்பத்தில் கம்யூனிஸத்தைப் பற்றிக்கொண்டார். உலகத்தை, அதன் பிரச்னைகளைப் புரிந்துகொள்ள கம்யூனிஸம் போதும் என்றார். 1950 மத்தியில் லண்டனில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். அதுவரை புதினங்கள் மட்டுமே எழுதி வந்த டோரிஸ்; அரசியல் பேச ஆரம்பித்தார், வெளிப்படையாக விவாதிக்கவும் ஆரம்பித்தார்.

பரிசு மேல் பரிசு; பாராட்டு மேல் பாராட்டு. திடீரென்று கம்யூனிஸத்தை உதறித் தள்ளினார். ஐ டோண்ட் கேர். அவர் பாதை மாறிப்போனது. இது நடந்தது 1979-ம் ஆண்டு. ஷிகாஸ்தா (Shkasta) வெளியானது அப்போதுதான். டோரிஸ் லெஸ்ஸிங்கா இதை எழுதினது என்று வாசித்த அத்தனை பேரும் புருவங்களை உயர்த்தினார்கள். பிறகு, அடுக்கடுக்காகச் சில புத்தகங்கள் வெளிவந்தன. Canopus in Argos: Archives என்று ஒரு நூல். பிறகு இதே வரிசையில் ஐந்தாவது புத்தகத்தை இப்போது எழுதி முடித்திருக்கிறார்.

மேலே குறிப்பிட்ட அத்தனை புத்தகங்களும் மாய மந்திர உலகத்தை மையமாகக் கொண்டவை. ஷிகாஸ்தா என்பது ஏதோ ஒரு கிரகத்தில் உள்ள ஒரு வகை பூமி. அங்கே நடக்கும் பிரச்னைகள் பற்றிய கதைகள். ஆர்வத்துடன் வாசித்த பலர் சோகத்துடன் முகம் சுளித்திருக்கிறார்கள். 'சகிக்க முடியாத அளவுக்கும் டோரிஸால் எழுத முடியும் என்பதைக் கண்டுகொண்டேன். என்னத்துக்கு அவருக்கு இந்த வேண்டாத வேலை?' நண்பர்கள், விமர்சகர்கள் அனைவருக்கும் கிட்டத்தட்ட இதே ரீதியில் புலம்ப ஆரம்பித்திருக்கிறார்கள்.

'ஐ டோண்ட் கேர்' என்றார் டோரிஸ். 'முழுக்க முழுக்க வேற்று கிரகத்தில் நடைபெற்றாலும், நம்மை பாதிக்கும் பிரச்னைகளைத்தான் நான் அங்கே விவாதிக்கிறேன்' என்றார் அவர். ஆனால், வாசகர்களால் இந்த வாதத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இதையெல்லாம் எழுத டோரிஸ் லெஸ்ஸிங் வேண்டுமா? எவ்வளவு காட்டமாக எழுதிக் கொண்டிருந்தார்! என்ன ஒரு வீச்சு! ஆ, அந்தக் காலம் திரும்பவும் வராதா? வராது என்று முடிவு செய்துகொண்டு 'தி கோல்டன் நோட்புக்'கை எடுத்து வைத்துக்கொண்டு மீண்டும் படித்துக்கொண்டிருக்கிறார்கள்.

டோரிஸ் தற்சமயம் காதல் வயப்பட்டிருப்பது சூஃபிஸம் (Sufism) மீது. மீண்டும் ஒரு பார்வை மாற்றம். அன்பர்களே, உண்மையில் உள்ளும் புறமும் ஒன்றுதான். உள்ளுக்குள் இருக்கும் அமைதியே அல்லது வெறுமையே அல்லது குழப்பமே வெளியிலும் பிரதிபலிக்கிறது. கண்களை மூடிக் கொள்ளுங்கள். உங்கள் அறையில் உள்ள ஏதாவது ஒரு சிறிய பொருளைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். பிறகு உங்கள் மனத்தைப் பெரிதாக்கி உங்கள் அறை, உங்கள் ஊர், உங்கள் உலகம் என்று விரிந்து சென்று பரிபூரண அமைதியை...

ஐ டோண்ட் கேர்! அலறுகிறார்கள் வாசகர்கள். அவர்களை வசீகரித்தவர் பழைய டோரிஸ் மட்டுமே.

இதற்கு, டோரிஸ் லெஸ்ஸிங்கின் பதில் இதுதான்: ''ஐ டோண்ட் கேர்!''

கிரேஸியைக் கேளுங்கள்



மனிதன் எப்போது

• என்.பாலகிருஷ்ணன், மதுரை

ராமர் பாலம் கட்டினாரா?

தந்தைக்கும் மகனுக்கும் இடையே தலைமுறை இடைவெளி இல்லாமலிருக்க, 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்னும் 'இணைப்பு பாலம்' கட்டினார். முன்பின் தெரியாத குகனின் நட்பில் நெகிழ்ந்து, அவனைக் கட்டித் தழுவி, 'தோள் கொடுப்பான் தோழன்' என்னும் 'அணைப்புப் பாலம்' கட்டினார். கணவன் - மனைவி இருவர் மட்டுமே செல்லக் கூடிய, 'ஒருவனுக்கு ஒருத்தி' என்னும் 'ஒற்றையடிப் பாலம்' கட்டினார். சபரி அளித்த எச்சிற் கனியை உண்டு, 'தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம் பாப்பா' என்னும் 'சமத்துவப் பாலம்' கட்டினார். நிராயுதபாணியாக நின்ற இராவணனுக்கு 'இன்று போய் நாளை வா' என தப்பிக்க வாய்ப்பளித்து 'பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே' என்னும் தாற்காலிக 'தொங்கு பாலம்' கட்டினார். அவதாரமாக வந்து வாழ்ந்து காட்டி, 'மனிதன் என்பவன் தெய்வமாகலாம்' என்னும் 'Fly-over பாலம்' கட்டினார்.



• சுஜாதா

• எஸ்.கே.வாலி, திருச்சி

மாதா, பிதா, குரு, தெய்வம்... இவர்களுக்குப் பிறகு?

இவர்களுக்குப் பிறகுதான் சார் எல்லாமே; எதுவுமே; எவருமே! மாதா, பிதா, குரு, தெய்வத்துக்குப் பிறகு மீண்டும் மாதா, பிதா, குரு, தெய்வம்தான். நீங்கள் நினைப்பதுபோல இது வரிசை அல்ல; வட்டம். நம்மைச் சுற்றிச்சுற்றி வந்து கண்காணித்துக் காக்கும் சுற்றம்.

• ஜே.வி.ஜே.கண்ணன், திருச்சி

நெற்றிப் பரப்பு அகலமாக உள்ளவர்கள், சிந்திப்பவர்களாக இருப்பார்களாமே?

என் உறவினர் ஒருவர் இருக்கிறார். அவர் நெற்றியில் நாமம், விபூதி, குங்குமம், சந்தனம் இப்படி எல்லாவற்றையும் இட்டுக்கொண்டு, அது போக மீதி உள்ள இடத்தைக் காலியாக விட்டு, தன்னை ஒரு நாத்திகன் என்றுகூட கூறிக் கொள்ளலாம். நமக்கெல்லாம் விதியை பிரம்மா நெற்றியில் நுணுக்கி நுணுக்கி எழுதினால், இவரது விதியை நெற்றியில் வால் போஸ்டராக ஒட்டியேவிடலாம். 'முன் பக்க முதுகோ?' என்று பிரமிக்கும் அளவுக்குப் பிரம்மாண்டமான நெற்றி. என்ன பிரயோஜனம், எனக்குத் தெரிந்து இவர் ஜலதோஷம் வந்தால்கூட, மூக்கைச் 'சிந்திக்க' மாட்டார்...

• அ.யாழினி பர்வதம், சென்னை

லக்ஷ்மியும் சரஸ்வதியும் சமமாக அருள்பாலிக்க என்ன செய்ய வேண்டும்...?

காளிதாஸனாக வேண்டும்.

• மீனா ரங்கநாதன், மேற்கு மாம்பலம்

சுஜாதாவுக்கு வயது ஏறாதது போல், அவரது பாத்திரங்களும் (கணேஷ் - வஸந்த்) வயது ஏறாமல், இளமையாக இருக்கிறார்களே எப்படி?

அர்ச்சுனனுக்கு 'ஸவ்யசாசி' என்று வேறு ஒரு பெயர்

தெய்வமாகிறான்?

உண்டு. 'ஸவ்யசாசி' என்றால், இரண்டு கைகளினாலும் வில்லைவிடும் தேர்ச்சி பெற்றவன் என்று பொருள். எழுத்தாளர்களில் சுஜாதா ஒரு 'ஸவ்யசாசி'. ஒரு கையால் முதிர்ச்சியான 'இலக்கியமும்' படைப்பார். இன்னொரு கையால் இளமைத் துடிப்போடு 'கலக்கியமும்' செய்து காட்டுவார். உதாரணம்: இந்தியன், அந்நியன், சிவாஜி பட வசனங்கள். இந்தக் கேள்வியைச் சாக்காக வைத்து, 'கப், சுஜாதா ஸாஹேப் கோ, சாஹித்ய அகாடமி அவார்ட், தேங்கே...?' என்று தமிழ்கூறும் நல்லுலகம் சார்பாக, நான் குரல் கொடுக்க விரும்புகிறேன். இதை நீங்களும் என்னோடு சேர்ந்து, வீட்டு மொட்டை மாடிக்குச் சென்று, டெல்லிக்குக் கேட்கும் அளவுக்கு உரத்த குரலில் படிக்கும்படி, பணிவன்போடு உங்களைப் பலவந்தப்படுத்துகிறேன்.

● **'குலசை' நதீன், காயல்பட்டினம்**

மனிதன் எப்போது தெய்வமாகிறான்?

தலை வணங்கும்போது.

● **அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி**

'சீதைக்கு ராமன் சித்தப்பா'' என்கிற சொல் வழக்கு எப்படி வந்தது?


எப்போதும் சீதையின் சித்தத்தில் இருக்கும் அப்பன் 'ராமன். எனவே, சீதைக்கு ராமன் சித்தப்பன். மேலும் ஞான மார்க்கத்தில் பரம்பொருளை 'சித்' என்பார்கள். பக்தி மார்க்கத்தில் 'அப்பனே' என்று ஆசையாக அழைப்பார்கள். எனவே, சீதைக்கு மட்டுமல்ல, நம் எல்லோருக்குமே ராமன் தான் சித்தப்பன்.

குறிப்பு: இந்த வாரம் 'ராமர் கட்டிய பாலத்தில்' ஆரம்பித்து 'ராமர் கட்டிய சீதையில்' முடிகிறது.



படம்: பொள்ளாச்சி சுந்தரம்

2004ஆம் ஆண்டு இந்திய கிரிக்கெட் அணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சமயத்தில், பான் சிங் தனது மகனை உச்சி முகர்ந்து, சொன்ன வார்த்தைகள் : ''மகனே! நீ செல்ல வேண்டிய பாதை நீளமானது! அதில் பயணம்செய்து புதிய சிகரங்களைத் தொடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!'' என்றார். ஆனால், அந்த நீண்ட பாதையை மூன்றே ஆண்டுகளில் கடந்து, 20-20 உலகக் கோப்பையை வெல்வதற்குக்



காரணமாய் இருந்திருக்கிறார் தோனி. ராஞ்க்சி டி.ஏ.வி. பள்ளியில் ஐந்தாம் வகுப்பு மாணவனாக இருந்தபோது, தோனிதான் கால்பந்தாட்டத்தின் விக்கெட் கீப்பர். அவரது அணியின் பயிற்சியாளர் கேசவ் ரஞ்சன் பானர்ஜி தோனியினுடைய ஆட்டத் திறமையையும், கோல் கீப்பர் என்ற முறையில் பந்தை வாங்குகிற லாகவத்தையும் பார்த்து, அடையாளம் கண்டு பாதையை மாற்றினார்.

20 - 20 உலகக் கோப்பை போட்டியில் பங்கேற்கும் இந்திய அணிக்குத் தலைமை பொறுப்பை தோனி ஏற்றுக் கொண்டவுடன், வெளிப்படுத்திய தலைமைப் பண்புகள், அவரை ஒரு நல்ல தலைவராக நிரூபணம் செய்துவிட்டன. இந்தியாவில் திறமையான கிரிக்கெட்டர்கள் இருக்கிறார்கள். ஆனால், திறமையான கிரிக்கெட் அணிதான் இல்லை என்ற சில விமர்சனத்துக்குத் தக்க பதிலடி கொடுக்கும் வண்ணம் வியூகம் வகுத்து, வெற்றி பெற்றிருக்கிறார் தோனி.

ஒரு ஸ்பீடு ஸ்டோரி!

அணியின் கேப்டனுக்கும் மற்ற ஆட்டக்காரர்களுக்கும் இடைவெளி துளியும் ஏற்படாமல் கவனமாக இருந்தார் தோனி. குறிப்பாக, ஆட்டத்தில் அவருக்கு சீனியரான யுவராஜ் சிங்கை அவர் கையாண்ட விதம், தோனி ஒரு தலை சிறந்த குழு நிர்வாகி என்பதை நிரூபித்தது. தனது ஜூனியர்களான ஜோகிந்தர் ஷர்மா, யூசுப், பதான் ஆகியோரிடம் அவர் ஏற்படுத்திக்கொண்ட நட்புறவு குளிப்பிடத் தக்கது. அணியினருடன் பேசிக் கொண்டிருந்தபோது, யுவராஜைக் காட்டி ''இவரு நம்ம ஆளு. உங்களுக்கு ஃபீல்டிங் குறித்து என்ன சந்தேகமானாலும், இவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளத் தயங்க வேண்டாம்'' என்றபோது, ஒவ்வோர் ஆட்டக்காரரது மனத்திலும், 'இந்திய அணிக்கு அவர் முக்கியம்; அதன் வெற்றிக்கு அவரது பங்களிப்பு அவசியம்' என்று உணர்த்த தோனி தவறவில்லை.

''முழுமையான ஈடுபாட்டுடன், ஆட்டத்தை ரசித்து ஆடுங்கள்; முடிவு என்ன என்பதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நீங்கள் நீங்களாகவே இருந்து, உங்கள் வழக்கமான ஆட்டத்தை ஆடுங்கள். அதை மாற்ற முயற்சிகள் செய்ய வேண்டாம்'' இதுதான் தோனி, தன் அணியின் ஆட்டக்காரர்களை முதல் தடவையாகச் சந்தித்தபோது சொன்ன மெசேஜ்.



''கிரிக்கெட் அணியினர் பயணம் செய்யும் பஸ்ஸில், டிரைவருக்குப் பக்கத்து சீட்டில் அணியின் கேப்டன் அமர்ந்துகொள்வதுதான்

வழக்கம். ஆனால், அந்த பந்தாவுக்கு தோனி அடிமையாகாமல், மற்ற ஆட்டக்காரர்களுடன் ஒன்றாக அமர்ந்துகொண்டு, அரட்டை அடித்துக்கொண்டும், பாட்டுப் பாடிக்கொண்டும் சென்றார்'' என்று சக கிரிக்கெட்டர்கள் சந்தோஷ நினைவுகளைப் பகிர்ந்துகொள்கிறார்கள். ஆட்டம் பற்றி, அணியினர் ஒவ்வொருவரிடமும் கருத்து கேட்க அவர் தவறவில்லை.

தோனி : சில தெரியாத தகவல்கள்

★ தோனியின் பெற்றோருக்குச் சொந்த ஊர் உத்தராஞ்சல் மாநிலத்தில் உள்ள அல்மோரா.

★ மோட்டர் பைக் பிரியரான தோனியிடம், விதம்விதமாக சுமார் அரை டஜன் மோட்டார் பைக்குகள் இருக்கின்றன. ராஞ்சி நகர ரோடுகளில் தன் பைக்கில் நண்பர்களுடன் வலம்வருவதை இப்போதும் காணலாம்.

★ பால் என்றால் தோனிக்கு மிகவும் பிடிக்கும். தினமும் மில்க் ஷேக் காகவோ, ஹாட் சாக்லேட் சேர்த்தோ ஒரு லிட்டர் பால் குடித்துவிடுவார்.

★ கம்ப்யூட்டர் முன்னால் உட்கார்ந்துவிட்டால், நேரம் போவது தெரியாமல் கேம்ஸ் ஆடிக்கொண்டிருப்பார்.

★ ஜாலியாக நண்பர்களுடன் கால்பந்தும், பேட்மிண்டனும் ஆடுவதும் உண்டு.

★ தன்னை மிகவும் வியக்க வைத்தவர்கள் என தோனி குறிப்பிடும் நபர்கள் : ஆடம் கில்கிறிஸ்ட், சச்சின் டெண்டுல்கர், அமிதாப்பச்சன், லதா மங்கேஷ்கர்.

– **கௌதம்ராம்**



பூக்காலம்!

ஜி.ஆர்.சுரேந்தர்நாத்

சூட்கேஸில் ஆடைகளை அடுக்கிக் கொண்டிருந்த கடைசி மகன் ஆனந்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். இரவு இரண்டு மணிக்குப் புறப்படும் லுஃப்தான்ஸா விமானத்தில் ஃப்ராங்க்பர்ட் சென்று, அங்கிருந்து கனெக்டிங் ஃப்ளைட்டைப் பிடித்து சான்ஃப்ரான்ஸிஸ்கோ செல்கிறான்.

''என்னம்மா பாக்குற?'' என்றான் ஆனந்த்.

''ஒண்ணுமில்லடா, நீ அடுக்கிட்டிரு. இதோ வந்துடுறேன்.''

அந்த மொட்டை மாடி அறையைவிட்டு வெளியே வந்த நான், புடைவை முந்தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டேன்.

மாடிப் படியேறி மேலே வந்த என் கணவர், ''என்ன பத்மா, உன் கடைசி மகன் கிளம்பிட்டானா?'' என்றார்.

''கிளம்பிட்டிருக்கான்.''

''அழுதியா?'' என்றார் என் முகத்தை உற்று நோக்கியபடி.

''மொத ரெண்டு புள்ளையும்தான் அமெரிக்கா போயிடுச்சு. இவன் ஒருத்தன் தான் கூட இருந்தான். ப்ச்... இப்ப இவனும் போறானே.''

''பத்மா, காலம் மாறிடுச்சு... இங்க இருந்தாலும் கல்யாணமாகி ரெண்டு மாசத்துல தனிக்குடித்தனம் போயிடுவாங்க...''

''போனாலும் ஒரு நாளு, கிழமைன்னா எட்டிப் பாப்பாங்க; ஒரு காய்ச்சல், தலைவலின்னா ஓடி வருவாங்க.''

''வருவாங்கங்கற?'' என்றார் இலேசாகச் சிரித்தபடி.

''அப்படி ஒண்ணும் நான் என் புள்ளங்கள வளர்க்கல.''

''வந்தா சந்தோஷம்தான்.''

''அதுக்குக்கூடத்தான் கொடுப்பினை இல்லாமப் போச்சே... இந்த கம்ப்யூட்டர் வந்தாலும் வந்துச்சு. எல்லாப் பிள்ளைங்களையும் முழுங்கி ஏப்பம் விட்டுடுது.''

''ஏண்டி... யாரு வீட்டுப் பிள்ளைங்களாச்சும் அமெரிக்கா போயிட்டா ஊரே அந்த வீட்டைப் பாத்துப் பொறாமைப்படுது. நீ என்னன்னா குறையா சொல்ற.''

''ம்... பொறாமை. இத்தனை வருஷம் வளர்த்த பிள்ளைங்கள, நினைச்ச நேரத்துல பார்க்க முடியாது; பேரப் பிள்ளைங்களைக் கொஞ்சிக்கிட்டு, கடைசி காலத்தை சந்தோஷமா ஓட்ட முடியாது; ஒரு உடம்பு முடியலைன்னா... பாத்துக்க நாதி இல்லை. கடைசி காலத்துல மனுஷாளுங்க இல்லாம வெறும் காச வெச்சுக்கிட்டு என்ன பண்றது? நியாயமா எல்லாரும் நம்மள பார்த்து அனுதாபப்படணும்; பொறாமைப் படக் கூடாது.''

''அப்படிப் போடு... சரி, நேரமாயிடுச்சு. ஒரு முக்கியமான வேலை இருக்கு. நான் கடைக்குக் கிளம்புறேன். எத்தனை மணிக்கு ஃப்ளைட்?''

''ராத்திரி ரெண்டு மணிக்கு. பத்து மணிக்கு வீட்டைவிட்டுக் கிளம்பணும்.''

''சரி... நான் ஒன்பது மணிக்கு வந்துடுறேன்'' என்று கூறிவிட்டு அவர் படியிறங்கிச் செல்ல... மனசில் மீண்டும் வெறுமை.

முப்பத்தி மூன்று வருடங்களுக்கு முன்பு, நான் இவரைத் திருமணம் செய்து கொண்டு சென்னை வந்தபோது, வீட்டுக்கு முன்புறம் இருக்கும் இந்தத் தென்னை மரங்கள் அப்போது இல்லை. பக்கத்து வீட்டு கோமதி அக்காவின் ஆலோசனைப்படிதான்,

பசங்கள் பிறந்தபோதெல்லாம் தென்னங் கன்று நட்டேன். பையன்கள் வளர வளர தென்னங்கன்றுகளும் வளர்ந்து மரங் களாயின.

அவர், கடைத் தெருவில் சொந்தமாகக் கடை வைத்திருந்தார். அரிசி ஹோல்சேல் பிஸினஸ். காலையில் ஒன்பது மணிக்குப் போனால், இரவு வீடு திரும்பப் பதினோரு மணி ஆகிவிடும். பிள்ளைகள் வளர்ந்து, வெளிநாடுகளுக்குச் சென்ற பிறகுதான், கணவராவது உடனிருந்து பேச மாட்டாரா என்று மனம் ஏங்குகிறது.

எதற்கும் அவர் என்னுடன் வெளியே வந்தது கிடையாது. கடைத்தெரு, உறவினர் வீட்டு விசேஷங்கள், சினிமா தியேட்டர்... என்று எல்லா இடத்துக்கும் நான்தான் மகன்களுடன் செல்வேன்.

அதுவும் பையன்களுடன் 'பாசமலர்' பார்த்த கதையை, இன்றைக்குக்கூட கோமதி அக்கா சொல்லிச் சொல்லி சிரிப்பார்கள்.

அப்போது காமதேனு தியேட்டரில்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில்
பிரசுரத்துக்குத் தேர்வான கதை

'பாசமலர்' சினிமாவை இரண்டாவது தடவையாகப் போட்டிருந்தார்கள். ஏற்கெனவே பார்த்த படம்தான். இருப்பினும், பசங்களோடும் கோமதி அக்காவோடும் மறுபடியும் பார்க்கச் சென்றிருந்தேன்.

க்ளைமாக்ஸ் காட்சி. 'கை வீசம்மா கை வீச' என்று சாவித்திரியைக் கட்டி அணைத்தபடி சிவாஜி உருக்கமாக அழ... நானும் அழ ஆரம்பித்துவிட்டேன். பெரியவன்தான் முதலில் கவனித்தான். அப்போது அவனுக்கு ஏழு வயதிருக்கும்.

''ஏம்மா அழுவுற?'' என்றான்.

''டேய், அம்மா அழுவுறாங்கடா'' என்று தம்பிகளிடம் இலேசான அழுகையுடன் பெரியவன் கூற... உடனே சிறியவன், ''ஏம்மா அழுவுற, அழாதம்மா...'' என்றபடி என் கழுத்தைக் கட்டிக்கொண்டு சத்தமாக அழ ஆரம்பித்துவிட்டான். அருகிலிருந்தவர்கள் திரும்பிப் பார்த்தனர்.

தொடர்ந்து அழ... வேறு வழியின்றி பசங்களை அழைத்துக்கொண்டு வெளியே வந்துவிட்டேன்.

அன்று நான் சினிமா பார்த்துவிட்டு அழுததைப் பொறுத்துக்கொள்ளாத மகன்கள், இன்று என் கண்ணீரை அறியாது, தூர தேசங்களில் டாலர் வேட்டையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பெரியவன் மகேந்திரன், சிறு வயது முதலே நன்றாகப் படிப்பான். மாலை சரியாக ஆறு மணியானவுடன், படிக்கத் துவங்கிவிடுவான். தான் மட்டும் படிக்காமல், தம்பிகளும் படிக்க வேண்டும் என்று வற்புறுத்துவான். அவர்கள் சாமானியமாகப் படிக்க உட்கார மாட்டார்கள்.

உடனே மகேந்திரன் என்னிடம் வந்து, ''அம்மா... பரணியும், ஆனந்தும் இன்னும் படிக்க ஆரம்பிக்கல...'' என்று புகார் செய்வான்.

''அவனுங்க வர்றப்ப வரட்டும். நீ போய்ப் படிடா...'' என்பேன்.

''நீதானம்மா சொன்ன... நல்லா படிச்சா தான் பின்னாடி கஷ்டப்படாம நல்லா இருப்போம்னு... இப்ப சரியாப் படிக்கலன்னா, பின்னாடி தம்பிங்க கஷ்டப்படுவாங்கள்ல... அதுக்குத்தாம்மா படிக்கச் சொல்றேன்'' என்று கூறிவிட்டு அழ ஆரம்பித்து விடுவான்.

இரண்டாவது மகன் பரணி, சிறு வயதில், நீண்ட காலம் வரை மொட்டை அடிக்காமல், பெரிய குடுமி வைத்திருப்பான். கோமதி அக்கா வீட்டில் எல்லோரும் அவனை ''சிண்டு... சிண்டு...'' என்றுதான் கூப்பிடுவார்கள்.

குழந்தைங்கள் வளர வளர... குறிப்பிட்ட காலம் வரை சண்டை அதிகமாக இருக்கும். மகேந்திரனும் பரணியும் சேர்ந்துகொண்டு, கடைக்குட்டி ஆனந்தை அடிக்கடி அழ வைப்பார்கள்.

அப்போது ஆனந்துக்கு நான்கைந்து வயது இருக்கும். சிறிய பையன் என்பதால், அவனுக்கு மட்டும்தான் பிஸ்கெட் வாங்கித் தருவோம். அண்ணன்களுக்கு ஒரு சின்ன துண்டைக்கூடத் தராமல் அப்படியே சாப்பிடுவான். அதற்காக பெரிய பயல்கள் ரெண்டு பேரும் சின்னவனிடம், ''நீதான் முதலாளியாம். நாங்க ரெண்டு பேரும் உன் வீட்டு நாய்களாம். நீ ரெண்டு நாய்களுக்கும் இப்ப பிஸ்கெட் போடுவியாம்'' என்று கூறுவார்கள். அவனும் முதலாளிபோல், சேரில் கால் மேல் கால் போட்டுக்கொண்டு, ஒவ்வொரு பிஸ்கெட்டாக ஸ்டைலாக வீசி எறிய... இவர்கள் நாய்போல் தாவித்தாவி பிஸ்கெட்டுகளைக் கவ்விக்கொள்வார்கள். மொத்த பிஸ்கெட்டும் தீர்ந்த பிறகுதான், சின்ன

விஞ்ஞானி

தாமஸ் ஆல்வா எடிசனிடம் அவரது நண்பர், ''உங்களுடைய அறிவின் ரகசியம் என்ன?'' என்று கேட்டார்.

அதற்கு எடிசன், ''அதில் ரகசியம் ஒன்றுமில்லை.எனக்குத் தெரியாததைப் பிறரிடம் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன் அவ்வளவுதான்'' என்றார்.



- மு.சாந்தி, தேனி

ரீடர்ஸ் கார்னர்

வனுக்கு உறைக்கும். அவ்வளவு தான்...''என் பிஸ்கெட்...'' என்று வீடே அதிருமாறு அலற ஆரம்பிப்பான்.

முதலில் பெரியவன்தான் படிப்பை முடித்துவிட்டு, அமெரிக்கா சென்றான். அவர்கள் இருந்த மாடியறையில் கொஞ்சம் சத்தம் குறைந்தது. அடுத்து பரணியும் சென்றவுடன், எப்போதாவது டேப்ரிக் கார்டரில் ஆனந்த் பாட்டுக் கேட்கும் சத்தம் மட்டும்தான் கேட்கும். இதோ... இவனும் போகப் போகிறான். இனி அந்தச் சத்தமும் கேட்காது.

''அம்மா...'' என்றபடி ஆனந்த் அறையை விட்டு வெளியே வந்தான்.

''என்ன ஆனந்த்?''

''கொஞ்சம் ஜெராக்ஸ் எடுக்குற வேலை யிருக்கு, போய்ட்டு வந்துடுறேன்'' என்று கூறிவிட்டுக் கீழே இறங்கினான்.

நான் அறையினுள் சென்றேன். புதிதாகப் பார்ப்பதுபோல் அறையை உற்றுப் பார்த்தேன். மூன்று மகன்களும் அங்கு வாழ்ந்த தற்கான அடையாளங்கள் இன்னும் மிச்சம் இருந்தன.

பெரியவன் மகேந்திரன், நூற்றுக்கணக் கான கேஸட்டுகளில் பழைய இளையராஜா பாடல்களாக வைத்திப்பான். அந்த கேஸட்டு கள் தூசியடைந்துபோய் அலமாரியில் கிடந்தன. பரணி சுவற்றில் ஒட்டியிருந்த அவனுக்குப் பிடித்த பானுப்ரியாவின் போஸ் டர், மூலைகளில் கிழிந்து சுவற்றில் தொங்கிக்கொண்டிருந்தது. சின்னவனின் அடையாளங்கள்தான் இன்னும் நிறைய இருக்கின்றன. அதுவும் இன்று சாயங் காலத்தோடு தொலைய ஆரம்பித்துவிடும்.

மகேந்திரன் அடிக்கடி ஒரு காரியம் செய்வான். கேஸட்டுகளின் ஒவ்வொரு பக்கத்திலும், கடைசியில் ஒன்றிரண்டு நிமி டங்கள் இடம் மிச்சமிருக்கும் பகுதியில், யாருக்கும் தெரியாமல் நாங்கள் பேசிக் கொண்டிருப்பதையோ, சண்டை போட்டுக் கொண்டிருப்பதையோ பதிவு செய்துவிடு வான். பிறகு அதை எங்களுக்குப் போட்டுக் காட்டி கலாட்டா செய்வான். யாருமில்லாத சமயங்களில் நானும் அதைப் போட்டுக் கேட்பேன்.

'முதல் மரியாதை' பாட்டு கேஸட்டில், பரணிக்கும் ஆனந்துக்கும் நடுவே சிறு வயதில் நடந்த சண்டையைப் பதிவுசெய்து வைத்திருப்பான். கேட்பதற்கு மிகவும் நன்றாக இருக்கும்.

பொறுமையாகத் தேடி, 'முதல் மரி யாதை' கேஸட்டை எடுத்தேன். 'ஏ' பக்கத் தைக் கடைசி வரை ஓடவிட்டுக் கேட்டேன்.

ஆனந்துதான் முதலில் கத்துகிறான். ''அம்மா... அம்மா... பரணி அடிக்கிறான்...''

நான் மாடியேறி வந்து அறையினுள் நுழைகிறேன். ''என்னடா இங்க சத்தம்...'' என்கிறேன்.

''அம்மா... பரணி என் முதுகுல கள்ளுன்னு அடிச்சுட்டான்'' என்கிறான் ஆனந்த்.

''அவனுங்க ரெண்டு பேரும் பெரிய



''தலைவர் எதையுமே 'ஆணி'த் தரமாத்தான் பேசுவார்!''

''ஏன்''

''எதிர்க்கட்சிக்காரங்க 'சுத்தி' வளைச்சிப் பேசிடக் கூடாது இல் லையா!''

- எஸ்.கோபாலன்



'மதுரை பொண்ணு சென்னை பையன்' படத்தின் சில நிகழ்வுகளை நம்மோடு பகிர்ந்து கொண்டார் இயக்குநர் ராஜசேகரன்.

"பழம்பெரும் நடிகர் எஸ்.எஸ்.ஆரின் பேரன் பங்கஜ் குமார்தான் படத்தின் நாயகன். தேஜாமை நாயகியாக அறிமுகமாகிறார். சென்னை பல்லாவரம் குளமொன்றில் ஹீரோ, ஹீரோயின் உடம்பில் பட்ட இரத்தக் கறையைக் கழுவுவது போன்ற காட்சியைப் படமாக்கும்போது, குளத்தில் தவறி விழுந்து விட்டார் நாயகி. அவ்வளவுதான்... அவரை கேமராமேனும் நானும் குளத்தில் குதித்துக் காப்பாற்றினோம். அதிர்ச்சியிலிருந்து தேஜாமை மீள நீண்ட நேரமானது. அதேபோல், ஆந்திராவின் அடர்ந்த காட்டுப் பகுதியில் ஒரு பாடல் காட்சி எடுத்தோம். பாறையில் அமர்ந்திருக்கும் நாயகியை, நாயகன் தேற்றுவதுபோல் சீன். தேஜாமை திடீரென்று பேலன்ஸ் தடுமாற, அருகிலிருந்த வேரைப் பிடித்துக்கொண்டார். அடுத்த நிமிடமே அலறிப்போய் ஓடினார். காரணம் வேரென்று நினைத்து அவர் பிடித்தது மலைப்பாம்பை."

- உஷா

பசங்க. மேல போகாதன்னா கேட்குறியா நீ..."

"ஆனந்த்தாம்மா முதல்ல அடிச்சான்..." என்கிறான் பரணி.

"ஏண்டா இப்படி என் உயிர எடுக்குறீங்க... எங்கயாச்சும் போய்த் தொலைங்களேன்"

போய்த் தொலைந்துவிட்டார்கள். ஆனால், என்னால்தான் நிம்மதியாக இருக்க முடியவில்லை. என்னை அறியாமல் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

சென்னை விமான நிலையம். விஸிட்டர் காலரியிலிருந்து ரன்வேயைப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனந்த் செல்லும் விமானம் மெல்ல ஓடி... திடீரென்று வேகமெடுத்து சர்ரென்று மேலே ஏறியதும், எனக்குத் தொண்டையை அடைத்தது.

"போலாமா பத்மா?" என்றார் அவர்.

"ம்..." என்றபடி மேலே சிறிதாகத் தெரிந்த விமானத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"பத்மா... போலாம்மா..." என்று அவர் மீண்டும் கூற, திரும்பி நடந்தேன். படிக்கட்டுகளில் இறங்கிக் கீழே வந்தோம்.

வெளியே வந்து காரில் ஏறிக்கொண்டோம். கார் மெயின் ரோட்டுக்கு வந்து வேகம் எடுத்தவுடன், "பத்மா... ஒரு விஷயம் சொல்லணும்" என்றார் அவர்.

நான் ஒன்றும் சொல்லாமல் அவர் முகத்தைப் பார்த்தேன்.

"எண்ணெய் மண்டி கோபால்கிட்ட நம்ம கடையை அறுபது லட்ச ரூபாய்க்கு வித்துட்டேன்" என்றவரை அதிர்ச்சியுடன் நோக்கினேன்.

"என்னங்க சொல்றீங்க?" என்றேன் வேகமாக.

"போதும் பத்மா சம்பாரிச்சது... ஒரு வாரமா உன்னைக் கவனிச்சுட்டுத்தான் வர்றேன். உள்ளூர்ல இருந்த ஒரே பையனும் அமெரிக்கா போறான்னவுடனே, நீ அப்படியே உடைஞ்சு போயிட்ட... இந்த முப்பத்து மூணு வருஷத்துல, பிள்ளைங்களையும் பணத்தையும் தவிர வேற எந்தச் சுகத்தையும் நான் உனக்குத் தரல... இருந்தாலும் அந்தக் குறை தெரியாம, பிள்ளைங்க பாத்துக்கிட்டாங்க. அவங்கதான் உன் உலகம்னு நீயும் இருந்துட்ட. இப்ப எல்லோரும் போனவுடனே, இனிமேல் யாருமே இல்லங்கற மாதிரி உனக்கு ஒரு ஃபீலிங். அதான் கடையை வித்துட்டேன். இனிமே சம்பாரிக்க என்ன பண்ணப் போறோம்..." என்ற என் கணவரை ஐம்பத்தைந்து வயதில் காதல் பொங்கப் பார்த்தேன்.

இனி வாழ்வில் மீண்டும் பூக்கள் பூக்கும் காலம். ●



பிறகு

டைட்டில் என்னவோ நல்லாத்தான் இருக்கு. ஆனா, கதைதான் அட்ரஸ் இல்லாம சென்னை வந்து இறங்கின கிராமத்து ஆளு மாதிரி நம்மை திருதிருன்னு முழிக்க வெக்குது. சினிமா ஆசையோடு ஊரைவிட்டு ஓடி வந்த ஹீரோவோட சாகஸங்கள்தான் 'பிறகு'. ரவிச்சந்திரன் மகன் அம்சவர்த்தன், 'நல்லாத்தானே இருந்தார்; என்னாச்சு இவருக்கு'ன்னு கேக்கும்படியா நடிச்சிருக்கார். இன்னும் உழைக்கணும்ங்கறதை மனசுல வெச்சுக்கங்க அப்பு. ஹீரோயின் கீர்த்தி சாவ்லா ஒப்பனிங்ல என்டராகி, கரெக்டா ஃபினிஷிங்ல வந்து ஜாயின் பண்ணிக்குறாங்க. பெருசா ஒண்ணும் சொல்றதுக்கில்ல. சுனிதா வர்மாவும் இருக்காங்க. கீர்த்திக்கு இவங்க எவ்ளோ தேவல. வடிவேலு வெடிவேலு. ஆறுதல் தர்றதுக்காக ஒய்யாரமா மாலை போடலாம். ஸ்ரீகாந்த் தேவா பின்னணில பின்னல. பாட்டுங்க சுமாரா பேர் சொல்லுது. காசி விஸ்வாவோட ஒளிப்பதிவு கனிவு தரல. டைரக்ஷன் ஜீவா. முதல் படம். கதை, திரைக்கதை இரண்டுலயும் அழுத்தம் இல்ல. தமிழ் சினிமாவுல கொடிநாட்ட இன்னும் சரக்கு வேணுமுங்கோ!

– லயா

காதலோட மகத்துவத்தைச் சொல்ல வந்திருக்குற இன்னொரு படம். சாதாரண கிராமத்துக் காதலர்களுக்குள்ள நிலவுற சுக-துக்கத்தைப் பதிவு பண்ணியிருக்குற இயக்குநர், க்ளைமாக்ஸை நெகிழ வைக்கும் விதமா சொல்லியிருக்கார்.

பாண்டியராஜனோட பையன் பிருத்விக்கு இது ரெண்டாவது படம். துறுதுறுனு இருக்கார். காதல்ல பொளந்து கட்றவர், சென்ட்டிமென்ட் சீன்ல கொஞ்சம் பின்தங்கிடுறார். கதாநாயகி கார்த்திகா நடிப்புல குறைவெக்கல. முக்கிய திருப்பமா வர்ற ரோகிணியும் வேலுபிரபாகரனும் கொஞ்சமே வந்தாலும் நெஞ்சை நிறையறாங்க. லிவிங்ஸ்டன் சோடை போகாத நடிப்பைத் தந்திருக்கார். காமெடி போர்ஷனை சுவை குன்றாம தந்ததுல கோவை குணா வெடி வெடிக்கறார்.

ஸ்ரீகாந்த் தேவாவோட மாறுதலான இசை படத்துக்குப் பலம். தினேஷ்ராஜ் ஒளிப்பதிவு குளுமை. இயக்கம் மூர்த்தி கண்ணன். தூக்கிச் சாப்பிடுற நடிப்பு இருந்தும், எல்லா காட்சிகளுமே வழக்கமானதா இருக்கறது பலவீனம். திரைக்கதையில இன்னும் வலு இருந்திருந்தா நல்லாருந்திருக்கும். க்ளைமேக்ஸ் பவர்ஃபுல்லா இருந்தாலும் ட்ரீட்மென்ட் பழகன்றதால பின்தங்கிடுது படம்.

– உமா



நாளைய பொழுதும் உன்னோடு

பாய்ச்சல் எடுக்கும் பங்குச் சந்தை!

மும்பை பங்குச் சந்தை சென்செக்ஸ் அக்டோபர் 15ஆம் தேதி 19,000 புள்ளிகளைத் தொட்டது. தேசிய பங்குச் சந்தை 5600 புள்ளிகளைத் தொட்டது. இந்தக் கட்டுரையை நீங்கள் படிக்கும்போது, 20,000 புள்ளிகளை மும்பைப் பங்குச் சந்தை தொட்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனெனில், 18,000 புள்ளிகளில் இருந்து 19,000 புள்ளிகளை எட்ட நான்கே நான்கு தினங்கள்தான் எடுத்துக் கொள்ளப் பட்டன.

செப்டம்பர் 19ஆம் தேதி 16,000 புள்ளிகளைத் தொட்ட சென்செக்ஸ், அடுத்த ஒரு மாதம் முடிவதற்குள் 3000 புள்ளிகள் உயர்ந்திருக்கிறது.



சென்செக்ஸ் அடுத்து, 20,000 புள்ளிகள், 25,000 புள்ளிகள் என்று கடகடவென உயர்ந்துகொண்டே போவது உறுதி என்று கருதுபவர்கள், தங்கள் வாதமாக வைப்பது, இந்தியத் தொழில்துறையின் அபரிமிதமான வளர்ச்சியைத்தான். அதைவிட முக்கியமான ஒன்று, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீடு.

இன்றைக்கு சென்செக்ஸில் உள்ள நிறுவனங்களின் 27% பங்குகளை இந்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள்தான் வைத்திருக்கிறார்கள். கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக அவர்கள் தான் கோடிக் கணக்கில் பணத்தை, இந்தியப் பங்குச் சந்தைகளில் கொட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அமெரிக்க பெடரல் ரிசர்வ் வங்கி, வட்டி விகிதத்தைக் குறைத்தவுடன், இந்தியா போன்ற வளரும் நாடுகளில், முதலீடுகள் பெருகத் தொடங்கிவிட்டன. இந்தியப் பங்குச் சந்தையில் குறுகிய காலத்தில் குறைந்தபட்சம் பதினைந்து சதவிகித வருவாயாவது பெற்றுவிட முடியும் என்பது வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்களின் கணக்கு.



அடுத்த பத்தாண்டுகளில், நாம் பார்க்கப் போகும் இந்தியா இன்றைக்கு இருப்பது போல் இருக்காது. சாலைகள் பளபள வென்று மின்னும், ஊர்களை எல்லாம் மேம்பாலங்கள் வழியாகவே கடந்துவிட லாம். மின்சாரம், தொழில்வளம் எல்லாம் ஜெகஜ்ஜோதியாக வளர்ந்து நிற்கும். அப்படி ஒரு வளர்ச்சி ஏற்பட்டபின்பு, இங்கே வந்து முதலீடு செய்வதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. வளரும் காலத் தில் வளர்ச்சிப் பணிகளில் முதலீடு செய்தால்தான், போட்ட முதல் குட்டிகள் போடும்; கொழுத்து வளரும் என்பதை இந்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நன்கு உணர்ந்துகொண்டு உள்ளனர். அவர் கள் இந்தியாவின் நீண்ட கால வளர்ச்சியை மனத்தில் வைத்தே இந்த முதலீடுகளைச் செய்கிறார்கள் என்று சொல்பவர்கள் முன் வைக்கும் வாதங்கள் மேலே சொன்னவை.

நீண்ட கால அடிப்படையில் பார்க்கும் போது, இந்த 19,000 புள்ளிகளோ, 20,000 புள்ளிகளோ ஒன்றுமே இல்லை. நமது வளர்ச்சி அவ்வளவு பலம் மிக்கது என்பது இவர்கள் தரும் நம்பிக்கை.

நம்பிக்கை ஒரு பக்கம் பத்திரமாக இருக் கட்டும். ஆனால், அண்மை நிஜம் என்று ஒன்று உண்டு. அது என்ன?

★ வெளிநாட்டு முதலீட்டாளர்கள், நமது இந்தியாவின் எதிர்காலத்தை நம்பி முதலீடு செய்கிறார்கள் என்பது கொஞ்சம் பெரிய கப்சா. அவர்கள் பார்வையில் பத்து முதல் பதினைந்து சதவிகித வளர்ச்சி வந் தால் போதும். மெல்ல, தங்கள் முதலீடு களை குறைத்துக் கொண்டு, போட்ட பணத்தை எடுக்கத் தொடங்கிவிடுவார்கள்.

★ இந்தியாவைவிட வேறொரு வள ரும் நாடு கூடுதலான வருவாயை உருவாக் கித் தரும் என்ற நிலை வந்தால், உடனடி யாக, தங்கள் முதலீடுகளைக் குறைத்துக் கொண்டு, அல்லது வாபஸ் பெற்று, புதிய நாட்டை நோக்கிப் போய்விடுவார்கள்.

மேலே சொன்ன இரண்டும் இதற்கு முன் பலமுறை நடந்துள்ளன. ஆனால், இம்முறை கூடுதலாக வேறோர் விஷயம் நம் கவனத்தைக் கவர்கிறது. பொதுவாக ஒவ்வொரு ஆயிரம் புள்ளிகள் உயரும் போதும் ஒருவிதக் கொண்டாட்டம் சந்தை யெங்கும் வியாபிக்கும். இந்த 3000 புள்ளி கள் ஒட்டத்தில் சுத்தமாக இந்தக் கொண்டாட்டம் மிஸ்ஸிங்!

கொஞ்சம் கூர்ந்து பார்த்தால், இன் னொரு விஷயம் புரியும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பணத்தைக் கொண்டு வந்து கொட்டும்போது, கடகடவென சென்செக்ஸ் ஏறும்; நிஃப்டி உயரும். உட னடியாக உள்நாட்டுச் சிறு முதலீட்டாளர் களும் தங்களிடம் இருக்கும் பணத்தை முதலீடு செய்து, எண்கள் மேலே உயரும் சுகத்தை ரசித்துக்கொண்டு இருப்பார்கள். என்றைக்காவது ஒரு நாள், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்கள் பணத்தை விறு விறுவெனத் திரும்ப எடுக்கத் தொடங்கும் போது, இந்த உ.சி. முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுவார்கள். உஷாராயிருந்தாலே தவிர! பலர் பாவம், பங்குகளை வாங்கிய விலையை மீண்டும் அடையவே முடியாத சூழல் ஏற்பட்டு, நஷ்டத்தில் விற்க நேரிடுவதும் உண்டு.

இம்முறை 3000 புள்ளிகள் உயர்வை, சிறு முதலீட்டாளர்கள், பயந்துகொண்டே பார்ப்பதால், அவர்கள் எல்லோரும் ஓரம் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். பங்குகளின் அடிப்படைகளை ஒட்டி அல்லாமல், முற்றி லும் வெள்ளமெனப் பாயும் வெளிநாட்டுப் பணத்தின் வேகத்தில் ஏறும் பங்கு விலை களை, சிறுமுதலீட்டாளர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை என்றே சொல்ல வேண்டும்.

– ஆர்.வெங்கடேஷ்

நேர்மை... உண்மை... பொறுமை..!

''அம்பாசிடர்னா எனக்கு அம்மா மாதிரி சார்'' என்று எடுத்தவுடனேயே சென்டிமென்ட்டாகப் பேசுகிறார் மதி. சினிமா வட்டாரத்தில் 'டிரைவர் மதி' என்றால், சற்று யோசித்துவிட்டு 'அவரா? தெரியுமே... ரொம்ப சின்சியர்' என்று சர்டிஃபிகேட் தருகிறார்கள். இருபது வருடங்களுக்கு மேலாக கவிதாலயாவுக்காக கார் ஓட்டியவர். ரஜினி, கமல் தொடங்கி பல ஹீரோக்களின் கார் சாரதியாகச் செயல்பட்டவர்.

''பிளான் பண்ணியெல்லாம் நான் சினிமாவுக்கு வரலீங்க. நாகப்பட்டினத்துலேர்ந்து சென்னை வந்து தங்கியிருந்தப்ப, பக்கத்து வீட்டு நண்பர் ஷூட்டிங் பார்க்கக் கூட்டிட்டுப் போனார். திடீர்னு அங்க டிரைவர் தேவைப்பட, அப்ப ஓட்ட ஆரம்பிச்சு அப்புறம் அதுவே வாழ்க்கையா மாறிடுச்சு.

சினிமால தனிப்பட்ட ஆட்களுக்கும் டிரைவரா இருக்கலாம்; கம்பெனிகளுக்கும் டிரைவரா இருக்கலாம். நான் கம்பெனி டிரைவராத்தான் இன்னமும் இருக்கேன். காலைல நாலு மணிக்கெல்லாம் எழுந்துக்கணும், ஆர்ட்டிஸ்ட்டுகள பிக்கப் பண்ணிட்டு ஷூட்டிங் ஸ்பாட்டுக்குப் போகணும். அப்புறம் அங்க போறது, இங்க வர்றதுன்னு மத்த வேலைகளையும் செய்யணும். பேக்கப் ஆனதும் மறுபடி ஆர்ட்டிஸ்ட் ட்ராப். இதுதான் தினப்படி நடக்கும். செக்கு மாடு மாதிரி ஒரே வேலையைத்தான் திரும்பத் திரும்பச் செய்யணும். ஆனாலும் இதுல உள்ள சுவாரஸ்யம் வேற எங்கயும் கிடைக்காது. நான் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துக்கும் கார் ஓட்டியிருக்கேன். ஜூனியர் ஆர்ட்டிஸ்டுகளுக்கும் கார் ஓட்டியிருக்கேன். மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தை நான் கத்துக்கிட்டது இங்கதான்.

ரஜினி சார் வித்தியாசமானவர். தன்கிட்ட பல கார் இருந்தும் ஆபீஸ் கார்லதான் ஷூட்டிங்குக்கு வருவார். எளிமையை உயிரா மதிப்பார். ஏழை-பணக்காரன்னு வித்தியாசமில்லாமப் பழகுவார். வேகம் எப்பவும் பிடிக்காது. மிதமா ஓட்டச் சொல்லுவார். ஒரு முறை மூணாறுக்கு ஷூட்டிங் போனப்போ, வழியில இருக்கற ஸ்டார் ஓட்டல் எல்லாத்தையும் விட்டுட்டு சின்னச்



சின்ன ரோட்டோரக் கடைகள்ல ஏதாச்சும் வாங்கிட்டு வரச் சொல்லிச் சாப்பிட்டார். 'ஏன் சார் இப்படி?'ன்னு கேட்டா, 'இதுதான் நிரந்தரம்'பார்.

ஒரு முறை ரஜினி சார் தன் குடும்பத்தோடு ஃப்போர் ஃப்ரேம்ஸ் தியேட்டர்ல படம் பார்க்க வந்தார். யாரையோ பிக்கப் பண்ண நானும் அங்க போயிருந்தேன். படம் முடிஞ்சு வெளிய வந்த ரஜினி சாரைச் சுத்தி அவர் பேசணும்னு பலர் காத்திருக்கும்போதே, ஓரமா நின்னுட்டிருந்த என்னைப் பார்த்து 'என்ன மதி, நல்லாருக்கியா?'ன்னு விசாரிச்சுட்டுப் போனார். பலருக்கும் ஷாக். ஆனா, எனக்கு அவரைப் பத்தித் தெரியும். அதுதான் ரஜினி!

யூனியன் கார்டு எடுக்காம சினிமால வண்டி ஓட்ட முடியாது. கால்ஷீட் பிரகாரம் தான் எங்களுக்கு ட்யூட்டி. பேட்டா, சாப்பாடு எல்லாம் உண்டு. இங்க வேலை செஞ்சுக்கிட்டேகூட நீங்க வெளிலயும் வேலை செஞ்சுக்கலாம். டிராவல்ஸ்லகூட ஓட்டலாம்; அனுமதி உண்டு. கால்ஷீட் படியும் சம்பளம் வாங்கிக்கலாம்; மாதச் சம்பளமாக் கேட்டாலும் தருவாங்க. எனக்கு அமைஞ்ச முதலாளி தங்கமான பாலசந்தர் சார். அவரோட பர்ஸனல் ரூம் வரைக்கும் நுழையற தகுதியுடைய வேலைக்காரனா, அவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவனா பல வருஷம் வேலை செஞ்சிருக்கேன். அவரோட பல படங்கள்ல என்னை நடிக்க வெச்சிருக்கார். 'உன்னால் முடியும் தம்பி'ல கார் டிரைவராவே வருவேன். நான் வேலைய விட்டு



ரீடர்ஸ் கார்னர்



தமிழ்த் திரையுலகில் நகைச்சுவை நடிகர்களில் சந்திரபாபுவுக்குத் ஒரு தனி இடம் இருந்தது. சொந்தக் குரலில் பாடிவந்த சந்திரபாபு, ரசிகர்கள் எல்லோரையும் கவர்ந்ததில் வியப்பேதுமில்லை. இவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்த சமயம், "நான் கர்மவீரர் காமராஜரைக் கண்டு பேச வேண்டும்" என்றார். இந்தத் தகவல் காமராஜருக்குத் தெரியவந்ததும் மருத்துவமனைக்கு விரைந்தார். "உனக்கு ஒன்னும் ஆகாதுன்னே" என்று ஆறுதல் கூறிவிட்டு வந்த சில நாட்களிலேயே சந்திரபாபு மரணமடைந்தார். காமராஜரிடம் பேசியதில்தான் சந்திரபாபுவின் ஆன்மா சாந்தியடைந்தது என்று பின்னர் பலரும் பேசிக் கொண்டனர்.

– கே.என்.பாலகிருஷ்ணன்

நிக்கும்போது, இதுவரைக்கும் யாருக்கும் செய்யாத ஒரு விஷயத்தை செய்தார். என் வேலைக்கு சர்ட்டிபிகேட் கொடுத்து அனுப்பினார்.

ஜெமினி கணேசனுக்கும் கொஞ்ச நாள் வண்டி ஓட்டினேன். இவருக்கு எப்பவும் வேகம்தான் பிடிக்கும். அடிக்கடி கொடைக்கானல் போவார். தாம்பரம் தாண்டினதும் என்னை நகரச் சொல்லிட்டு ஜாலியா தானே டிரைவ் பண்ணுவார்.

நேர்மை, உண்மை, பொறுமை - இது மூணும் ஒரு டிரைவருக்கு வேணும். இதை நான் என் உயிர்மூச்சா கடைப்பிடிக்கிறேன். இதெல்லாம் இருந்தாலும்கூட தடுக்கிவிட சினிமால ஆயிரம் விஷயங்கள் இருக்குது. அதையெல்லாம்கூட கவனமாத் தாண்டி வந்தாத்தான் ஒருத்தனால இங்க ஜெயிக்க முடியும்.

டிரைவர் வேலைல இந்நாள் வரைக்கும் மோசமான எந்த அனுபவங்களும் எனக்கு ஏற்படல. ஏன்னா எனக்குக் கிடைச்ச முதலாளிங்க அப்படி. ஆனா எல்லோருக்கும் இப்படி அமையும்னு சொல்லிட முடியாது. பொதுவா எனக்குத் தெரிஞ்ச எல்லா நடிகர்களுமே ரொம்ப சாஃப்டானவங்கதான். நாமளா எந்தப் பிரச்னையும் பண்ணாத வரைக்கும் அவங்களும் எதுவும் நம்மள செய்யப் போறதில்ல. லேட்டா வந்தா, ஏதாச்சும் ஆக்ஸிடெண்ட் பண்ணாத்தான் நம்ம மேல கோபம் வரும். இதுவரை ஒரு ஆக்ஸிடெண்ட்கூட நான் பண்ணினதில்ல. இதனாலேயே எல்லோருக்குமே என்னை ரொம்

என்னைப் பார்த்து யாராவது டிரைவர் வேலைதானேன்னு சொன்னா கோபம் பொத்துகிட்டு வந்துடும்!



பப் பிடிக்கும். டிரைவரை நம்பி, பின் சீட்ல தூங்கிட்டு வர்ற முதலாளியோட நம்பிக்கையை நாம காப்பாத்தணும் இல்லையா!

விடிகாலைல எழுந்து வேலைக்கு வந்து, நடுராத்திரில திரும்பறதால குடும்பத்தைச் சரியா கவனிக்க முடியாது. சினிமாவுக்கு எப்ப வந்தேனோ அப்பவே குடும்பம் ரெண்டாம் பட்சமாயிடுச்சு. ஆரம்பத்துல பொண்டாட்டிக்கு இதுல கொஞ்சம் வருத்தம்தான். அப்புறம் அவளுக்குப் பழகிடுச்சு. இப்ப குழந்தைங்களுக்கு உறுத்துது. அவங்களை ரொம்பவே மிஸ் பண்ணுவேன். எப்படா ஞாயிற்றுக்கிழமை வரும்னு காத்திருப்பேன். அன்னிக்கு முழுக்கக் குடும்பத்தோடு கொண்டாட்டம்தான். வருமானத்துக்கு எப்பவும் குறை இருந்ததில்ல. நாகப்பட்டினத்துல வறுமைல வாழ்ந்தவங்க நாங்க. இந்த டிரைவர் வேலை செஞ்சுதான் இப்ப ஊர்ல சொந்த வீடு கட்டி, கூடப் பிறந்தவங்களுக்குக் கல்யாணம் செஞ்சு வச்சு, நானும் கல்யாணம் கட்டிக்கிட்டேன். அது மட்டுமா? கம்பெனி காரை ஓட்டிட்டிருந்தவன் இப்ப சொந்தமா அம்பாசிடர் வச்சிருக்கேன். டிரைவர் வேலைதானேன்னு யாராவது என்னைச் சொன்னா, கோபம் பொத்துக்கிட்டு வந்துடும். கேவலமாப் பார்த்தவங்களை கண்ணாலயே எரிச்சிடுவேன். பின்னே என்னங்க, என் குடும்பத்தை வாழ வைக்கிற தெய்வத்தைப் பத்தி மட்டமாப் பேசினா பொங்க மாட்டேனா?'' - ஆக்ரோஷமாய் பேசிய மதியின் ஆவேசம் அடங்குவதற்குள் 'மேகலா' சீரியல் ஷூட்டிங் முடிந்து வடிவுக்கரசி வர, சட்டென்று இயல்பானவர், 'வேலைக்கு முன் எதுவும் எனக்கு முக்கியமில்லை' என்னும் விதமாய் ''அம்மாவ ட்ராப் பண்ணிட்டு வரேன். பிறகு பேசுவோம்'' என்றபடி காரை நோக்கிப் பறந்தோடுகிறார். ம்... அதுதான் மதி!

சந்திப்பு: **மு.மாறன்**

படங்கள்: **பொள்ளாச்சி சுந்தரம்**



"கொண்ட கொள்கையில் உறுதி காட்டுவோம்; தேவையெனில் கொள்கை சிதையாமல் உத்தியை மாற்றுவோம். இந்த அடிப்படையில்தான் மாவட்ட மாநில அமைப்புகளைக் கலைக்க தீர்மானம் கொண்டு வந்தேன்!"

ஒரு பக்கம் நிர்வாகிகளைப் பதவியிலிருந்து ஒட்டுமொத்தமாக நீக்கியதால் கட்சிக்குள் சர்ச்சை; மற்றொரு பக்கம் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டதாக கட்சியின் பிரமுகர் வன்னியரசு கைது. நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர் திருமாவளவனைச் சந்தித்தோம்...

அனைத்துப் பிரிவு மக்களையும் அரவணைத்து அரசியல் வெற்றியடைந்த மாயாவதியின் வழியைத்தான், நீங்கள் பின்பற்றுவதாக உங்களின் சமீபத்திய நடவடிக்கைகள் சொல்கின்றன. தமிழக அரசியலில் இது சாத்தியம்தானா?

''தலித்துகளுக்கான இயக்கங்களைப் பொறுத்தமட்டில் பகுஜன் சமாஜ் கட்சிக்குப் பிறகு, மிகப் பெரிய இயக்கம் விடுதலைச் சிறுத்தைகள்தான். தலித் உரிமைகளுக்காக எங்கள் இயக்கம் முன்னுரிமை கொடுத்துப் போராடிவரும் அதே சமயத்தில், ஜாதி-மதம் கடந்த நிலையில் உழைக்கும் மக்களிடையே ஒற்றுமையேற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் சில உத்திகளைக் கையாளுகிறோம். தலித் மக்களுக்கும் மற்ற சமூகத்தினருக்கும் இடையில் இருக்கும் உரசலைத் தொடர விரும்புவது, நாகரிகமாகாது. உரிமைகளை விட்டுக்கொடுக்காமல், சமூக நல்லிணக்கம் பேணுவதில் எந்தத் தவறும் இல்லையே. அந்த அடிப்படையில்தான் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நூற்றாண்டு பிறந்த நாள் ஜெயந்தியை, கோயில் நுழைவு தினமாக அரசு அறிவிக்க வேண்டும் என்று எங்கள் மாநாட்டில் தீர்மானம் போட்டோம். இதற்கெல்லாம் சமூக நல்லிணக்கம்தான் நோக்கமே தவிர வேறெந்த உள்நோக்கமும் இல்லை.''

சமீபத்தில், அதிரடியாக உங்கள் மாவட்ட, மாநில நிர்வாகிகளைப் பதவி நீக்கம் செய்ததன் மூலம், பெரிய சர்ச்சை உருவாகியிருக்கிறதே...?

''கொண்ட கொள்கையில் உறுதி காட்டுவோம்; தேவையெனில், கொள்கை சிதையாமல் உத்தியை மாற்றுவோம். இந்த அடிப்படையிலும், கட்சியின் கட்டமைப்பை மேன்மேலும் வலுப்படுத்தக் கூடிய வகையிலும் மறுசீராய்வு மற்றும் மறுகட்டுமானத்துக்கு, எங்களை நாங்களே உட்படுத்திக்கொண்டிருக்கிறோம். எனவேதான் சென்ற வருடம் எங்கள் இயக்கம் ஓர் அரசியல் கட்சியாகத் தேர்தல் கமிஷனில் பதிவு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் மாவட்ட மாநில அமைப்புகளைக் கலைக்க, நான் மையக்

குழுவில் தீர்மானம் கொண்டுவந்த போது, நூற்றுக்கு நூறு ஆதரவு கிடைத்தது. சட்ட மன்ற உறுப்பினர் செல்வம் இந்த உத்தியை வரவேற்றுப் பேசினார். மற்றபடி இது குறித்த பேச்சுக்கள் வெறும் வதந்தியே.''

'விஜய்காந்த், சரத்குமார் இருவருடனும் இணைந்து செயல்படத் தயார்,' என்று சொல்லி பரபரப்பை உண்டாக்கி விட்டீர்களே?

''தலித் முதல்வர் என்பது தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு பகல் கனவாகவே தொடர்கிறது. எனவேதான், '2011-ல் தலித் ஒருவர் முதல்வராக, எந்த இயக்கம் ஆதரவு கொடுக்கிறதோ அதனுடன் இணைந்தும் செயல்படுவோம்' என்று சொன்னேன். விஜய்காந்த், சரத்குமாருக்கு மட்டுமல்ல; தி.மு.க., பா.ம.க.வுக்கும் மற்றும் இதர கட்சிகளுக்கும் இது பொருந்தும்.''



கலைஞர் அரசுக்கு நெருக்கடி தரவே இந்தக் கைது!

திருமாவளவன் குற்றச்சாட்டு!

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆயுதக் கடத்தலில் உங்கள் கட்சியின் வன்னியரசு ஈடுபட்டிருக்கிறாரே?

''நார்வேயிலிருந்து வன்னியரசுவின் முகவரிக்குப் பார்சல் வந்திருக்கிறது. அதைப் பெற்றுக்கொள்ள அவரே நேரடியாகச் சென்றிருக்கிறார். ஆயுதம் கடத்த நினைத்திருந்தால், இந்த அளவுக்கு வெளிப்படையாக ஒருவர் செயல்படுவாரா? அந்தப் பார்சலில் அதிவேக சக்தியுடைய மோட்டார் என்ஜின்கள் இருந்ததாகப் போலீஸ் சொல்கிறது. ஆனால், இதுவரை பார்சலை வன்னியரசுவிடம் காட்டவே இல்லை. இப்படியெல்லாம் எங்கள் மீது திட்டமிட்டுப் பழிசுமத்துகிறார்கள். அப்படியென்றால், ஆயுதக் கடத்தல்



"என்னைச் சங்கடப்படுத்துவதன் மூலம் கலைஞர் அரசுக்கு, மத்திய உளவுத்துறை அதிகாரிகள் நெருக்கடி தர நினைக்கிறார்கள்!"



என்று வழக்குப் பதிவு செய்வதை விட்டுவிட்டு தடை செய்யப்பட்ட இயக்கத்தோடு தொடர்பு, தவறான தகவல் சொல்லி பாஸ்போர்ட் வாங்கியது என்றுதானே வழக்குப் போட்டிருக்கிறார்கள். என்னைப் பழிவாங்க வேண்டும் என்று மத்திய அரசின் சில உளவுத்துறை அதிகாரிகள் செயல்படுகிறார்கள்.''

எதற்காக உங்களைப் பழிவாங்க வேண்டும்? அப்படியானால், மத்திய அரசு உங்களுக்கெதிராகச் செயல்படுகிறது என்கிறீர்களா?

''ராமர் பால விவகாரத்தில் நான் மிகத் தீவிரமாகச் செயல்படுவதால் மத்திய அரசிலுள்ள மதச்சார்புடைய அதிகாரிகள் செய்யும் வேலைதான் இது. ஒன்று மட்டும் தெரிந்துகொள்ளுங்கள். தடை செய்யப்பட்ட இயக்கங்கள் ஆயுதக் கடத்தலுக்கு, மக்களோடு நெருக்கமாக இருக்கும் இயக்கங்களையோ அல்லது பிரமுகர்களையோ பயன்படுத்த மாட்டார்கள். கலைஞருடன் நாங்கள் இப்போது நெருக்கமாக உறவு கொண்டிருக்கிறோம். என்னைச் சங்கடப்படுத்துவதன் மூலம் கலைஞர் அரசுக்கு அந்த அதிகாரிகள், நெருக்கடி தர நினைக்கிறார்கள். இது குறித்து முதல்வரிடம் முழு விவரங்களையும் தெரிவித்திருக்கிறோம்.''

ஜெயிலில் இருந்தபோது விடுதலைப் புலிகளோடு தனக்குத் தொடர்பு இருந்ததாகவும், மூன்று முறை இலங்கை போய் வந்ததாகவும் வன்னியரசு ஒப்புக் கொண்டிருக்கிறாரே?

''1997-ல் அவர் சிறையில் இருந்தார். பல ஈழப் போராளிகள் காலப் போக்கில் வெளிநாட்டில் வேலை கிடைத்து வாழ்க்கையில் செட்டில் ஆகிவிடுகிறார்கள். மேலும், மலையகத் தமிழர்களைப் பற்றிய குறும் படம் எடுக்கவே வன்னியரசு ஒன்றிரண்டு முறை இலங்கை சென்று வந்தார். விடுதலைப் புலிகளுக்கு உதவும் நோக்கத்தில் அவர் செல்லவில்லை. மற்றபடி எந்தக் குற்றச்சாட்டாக இருந்தாலும் நீதி மன்றத்தில் சந்திப்போம்.''

நீங்கள் இப்படிச் சொன்னாலும், இந்த நிகழ்வின் மூலம் உங்கள் இயக்கத்துக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டிருக்கிறதுதானே..?

''பொது வாழ்க்கையில் இருப்பவர்கள், பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும். எனவே, சட்டப்படி இதையும் சந்திப்போம். விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் ஒருபோதும் சட்ட விரோதச் செயலில் இறங்காது.

- ப்ரியன்

படங்கள்: ஸ்ரீஹரி

ஜாலி ஸ்டேஜ்

நாட்டாமை-II

குசும்புராஜ்

சிம்புவின் வீட்டில் நிருபர்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது. தான் புதிதாக நடிக்கப் போகும் நாட்டாமை-II படம் குறித்துப் பேசுகிறார் சிம்பு.

நிருபர் 1 : படத்துக்கு நாட்டாமை-IIன்னு பேர் வெச்சது ஏன்?

சிம்பு : அது என் இஷ்டம்! அப்படித்தான் வைப்பேன். ஏன், எதுக்குன்னு கேட்காம நான் சொல்றதை மட்டும் குறிச்சுக்கங்க.

நிருபர் 2 : சரி, சொல்லுங்க.

சிம்பு : இவர்தான் இந்தப் படத்தோட டைரக்டர் இளிச்சராஜ்! ஆனா, ஷூட்டிங் நடக்கறப்ப ஸ்டார்ட், ஆக்ஷன், கட், பேக்கப் எல்லாம் நான்தான் சொல்வேன். படத்துல மொத்தம் ஆறு பாட்டு. ஆறு கவிஞர்கள் எழுதறாங்க. ஆனா, முதல் வரி எது, முடிவு வரி எது, பல்லவி, சரணம் எங்கே வரணும்னு நான்தான் சொல்வேன். 'தனல்' தருமன் ஃபைட் மாஸ்டர். பட், காலை யார் தூக்கணும், கையை யார் மடக்கணும்னு நான்தான் முடிவு பண்ணுவேன். படத்துல மூணு ஹீரோயின்ஸ். அவங்க என்ன டிரெஸ் போடணும், என்ன சாப்பிடணும்ங்கறதை நான்தான் தீர்மானிப்பேன்.

நிருபர் 3 : படத்தோட தயாரிப்பாளர் யாருங்க?

சிம்பு : இதோ இந்த ஹரிலால்தான் தயாரிப்பாளர்.

நிருபர் 3 : ஆனா, பணத்தை நீங்கதானே தருவீங்க?

சிம்பு : இல்லை... இல்லை! அதை மட்டும் அவரே தருவார். பட்ஜெட்டை நான் போடுவேன். என் அப்பா இந்தப் படத்துல எனக்கு அப்பாவா கௌரவ வேடத்துல நடிக்கிறார்.

நிருபர் 1 : கதை என்னன்னு....?

சிம்பு : தாராளமா சொல்றேன்! ஒரு கிராமம். அங்கே நான் வெச்சதுதான் சட்டம். எண்பது வயசுக் கிழவனும் என்னைப் பார்த்தா கால்ல விழுந்து கும்பிடுவான். அங்கே வருஷாவருஷம் திருவிழா நடக்கும். அந்தத் திருவிழாவுல நாலு குரூப் 'ரிக்கார்டு டான்ஸ்' ஆடுவாங்க. அவங்கள்ல



யாரு நல்லா ஆடினாங்கன்னு தீர்ப்பு சொல்வேன். அப்படித்தான் அந்த வருஷமும் தீர்ப்பு சொல்றேன். ஆனா, டான்ஸ் ஆடினவங்கள்ல ஒருத்தன், என் தீர்ப்பை ஏத்துக்க முடியாதுங்கறான். உடனே நான் கோவிச்சுட்டு இமயமலைக்குப் போயிடறேன்.

ஜாலி ஸ்டோர்ஸ்

நிருபர் 2 : படம் முடிஞ்சுடுதா...

சிம்பு : இல்லே, அங்கேதான் இடைவேளை. அப்புறம் ஊர் ஜனங்க திரண்டு வந்து, 'தம்பி, நீங்க மறுபடியும் ஊருக்கு வரணும்'னு கதறி அழறாங்க. சும்மா ஒரு வார்த்தைச் சொன்னதுக்கே இப்படி வந்துட்டீங்களே. உங்க அப்பா, எப்படித் தீர்ப்பு சொல்வார் தெரியுமான்னு ஒருத்தர் சொல்றார். அங்கே ஃப்ளாஷ்பேக்!

நிருபர் 3 : உங்க அப்பா வர்றாரா?

சிம்பு : ஆமா! அவர் 'சத்த மன்றம்'னு ஊருக்குள்ள நடக்கற நிகழ்ச்சியில தீர்ப்பு சொல்வார். அதுல பேசறவங்க எல்லோரும் ஸ்பீக்கரை முழுங்கின மாதிரி கத்துவாங்க. எங்கப்பா இலேசுபட்ட ஆளா? அவர் டி.டி.எஸ். பொருத்தின ஸ்பீக்கரை முழுங்கினா மாதிரி கத்தித் தீர்ப்பைச் சொல்வார். ஒருமுறை வில்லன் ரகுவரனுக்கு எதிரா தீர்ப்பைச் சொல்லிடுவார். ரகுவரன் டென்ஷனாகி, மைக்கை எடுத்து அப்பா மண்டையில் அடிச்சுடுவார். அப்பா சாகும்போது நான் பெரியவனானதும் நாட்டாமையா இருந்து ஊரை நடத்தணும்னு ஜனங்ககிட்டே சத்தியம் வாங்கிப்பார்.



நிருபர் 1 : அப்புறம்?

சிம்பு : 'அதனாலதான் தம்பி, நீ எவ்வளவு கேனத்தனமா தீர்ப்பைச் சொன்னாலும் நாங்க பேசாம இருக்கோம். அவன் அசலூர்க்காரன். விஷயம் புரியாமப் பேசிட்டான். திரும்பி வாங்க'ன்னு சொல்லிப் ப்ளாஷ்ஃபேக்கை முடிக்கிறார் கிழவர்.

நிருபர் 2 : படம் முடியுதா, இல்லையா?

சிம்பு : அது எப்படி? நான் மறுபடியும் கிராமத்துக்கு வர்றேன். என் தீர்ப்பால கோபமான அந்த டான்ஸ் பார்ட்டி, என்னை அடிக்க வர்றான். நான் டான்ஸ் ஆடிக்கிட்டே, ஃபைட் பண்ணி அவனை ஓட ஓட விரட்டுறேன். கடைசியில் அந்த 'டான்ஸ் நம்பர் ஒன்' பரிசு எனக்கே கிடைக்குது; படமும் முடியுது.

நிருபர் 3 : அப்பாடா!

சிம்பு : கடைசியா ஒரு விஷயம். படம் முடிஞ்சதும் ஜனங்க போகக்கூடாது. நான் எப்ப போகச் சொல்றேனோ அப்பத்தான் போகணும். அது மட்டுமில்ல, இடைவேளையில பாப்கார்ன் சாப்பிடலாமா, ஐஸ்கிரீம் சாப்பிடலாமான்னு நான்தான் சொல்வேன். காதலி, பொண்டாட்டியோடு வந்திருந்தா, தோள்மேல கை போடலாமாங்கறதையும் நான்தான் சொல்வேன்.

நிருபர் : அய்யய்யோ நீங்க, இப்ப சொன்னதையெல்லாம் பத்திரிகையில போடலாமா..?

சிம்பு : அதையும் நான்தான் சொல்வேன். ●

நீங்கள் கேட்டவை

● ஆர்.பிரகாஷ், திருச்சி - 4

? விடுதலைச் சிறுத்தைகள் பிரமுகர் வன்னியரசு மீது ஆயுதக் கடத்தல் குற்றம் சாட்டி, சாதாரண வழக்குப் பதிவு செய்துள்ளதே தமிழக அரசு?

! புலிகள் அனுதாப அரசிடம் நாம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

● கே.கணபதி, சென்னை - 11 ★

? மும்பை பங்குச் சந்தை பதினெட்டாயிரம் புள்ளிகளை எட்டியிருப்பது நல்ல விஷயமா?

! தற்போது 19,000 கடந்துவிட்டது! படிப்படியான வளர்ச்சி ஆரோக்கியம். அதீதமான வளர்ச்சி நோயையே சுட்டிக்காட்டும். டாக்டர் சிதம்பரம், அலட்சியம் செய்யாமல் பரிசோதிப்பது நல்லது.



* டாப் எழுத்தாளர்!

பழைய பாடல்களின் ரீ - மிக்ஸ் எப்படி?



* அட்டென்ஷன் டாக்டர்!

● கோமளா ரங்கநாதன், சென்னை - 17 ❒

? அஜ்மீர் குண்டுவெடிப்பு...?

! ஒரு குண்டுவெடிப்புச் செய்தி பத்திரிகையில் அச்சாகி அந்த மை காய்வதற்குள் இன்னொரு குண்டுவெடிப்பு நிகழ்கிறது. நமது தலைவர்களோ, அர்த்தமற்ற சர்ச்சைகளிலேயே அதிக கவனம் செலுத்துகிறார்கள். பயங்கரவாதத்துக்கு எதிராக எல்லோரும் ஒன்றுபடுவது மட்டுமே இன்று அதி முக்கிய தேசியப் பணி.

● மல்லிகா அன்பழகன், சென்னை - 78

? கல்கியில் சிறுதீர

தராசு

கம் பற்றிய தொடர் எழுதிய டாக்டர், மோசடி வழக்கில் கைதானது 'யாரைத்தான் நம்புவதோ!' என எனக்கு அதிர்ச்சி அளித்தது. உங்களுக்கு...?

! அதிர்ச்சி தரும் செய்தி என்ற போதிலும் எந்த முடிவுக்கும் வராமல் விசாரணை முடிகிற வரை காத்திருப்பதே நியாயம்.

● ஆர்.ராமசுப்பிரமணியன், திருவாரூர்

? பழைய பாடல்களின் ரீ-மிக்ஸிங் கேட்கச் சகிக்கிறதா?

! சில பாடல்கள் காதால் கேட்டு ரசிக்கத்தக்கவை. கண்களால் காணத்தான் சகிக்கவே முடியவில்லை.

● எஸ்.சரவணன், வேலூர்

? 'தமிழ் எம்.ஏ.' படம் எப்படி..? ஏதோ ஈரானியப் படம் பார்க்கும் உணர்வை ஏற்படுத்துகிறதே...? வெற்றி பெறுமா தராசு?

! எவ்வளவு சோகமான படமாக இருந்தாலும் அதில் ஒரு குத்துப் பாட்டை எதிர்பார்க்கும் சராசரி ரசிகனிடம் வெற்றி பெறுவது சந்தேகமே. மற்றபடி வித்தியாசமான படம்; தைரியமான முயற்சி.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? மக்களிடையே வளர்ந்து வரும் ஆன்மிக உணர்வுகள் பா.ஜ.க.வை மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் அமர வைக்க எந்த அளவுக்கு உதவும் என்று கருதுகிறீர்கள்?

! ஆன்மிக உணர்வு என்பது ஹிந்துக்களிடம் மட்டுமல்ல; எல்லா மதத்தினரிடமும் உண்டு என்பதை பா.ஜ.க.வும் ஹிந்துத்வா அமைப்புகளும் உணரும்போது, மக்களிடையே வளர்ந்து வரும் ஆன்மிக உணர்வு அவர்களுக்கு நிச்சயம் உதவும்.

● பழ.யோகநாதன், கிழக்கு தாம்பரம்

? அரசியல்வாதிகள் எங்கெல்லாம் தங்கள் மனசாட்சியைக் கழற்றி விட்டுச் செல்கிறார்கள்?

! அப்படி ஒன்று அவர்களுக்கு இருந்தால் தானே...? இருப்பதாகத் தெரியவில்லை. எனவே கழற்றி வைக்கும் சிரமமெல்லாம் இல்லை!

● ஜி.ஜெயராமன், கூந்தலூர்

? இந்தியாவிலேயே சிறந்த மாநகராட்சியாக சென்னை மாநகராட்சியைத் தேர்வு செய்துள்ளார்களே... மகிழ்ச்சி தானே?

! 'கூரையிலே ஏறி கொள்ளி வைக்கிறானே, அவன்தான் என் பிள்ளைகளிலேயே நல்லவன்' என்று ஒரு தகப்பன் கூறினானாம்! சென்னை மாநகராட்சியே சிறந்ததாகத் தேர்வாகியிருக்கிறது என்றால், பிற மாநகராட்சிகளை நினைத்துப் பார்க்கவே பயமாயிருக்கிறது!

● என்.வி.ரமணி, சென்னை - 92

? வந்தியத்தேவன், நந்தினி போன்ற அழுத்தமான கதாபாத்திரங்களை உருவாக்கி ஏன் தற்போது நாவலாசிரியர்கள் எழுதுவதில்லை?

! கல்கி அவர்களைப்போல இன்னொருவர் எழுதிவிட முடியும் என்றால் 'கல்கி' அவர்களுக்குப் பெருமை இல்லை. இதே போல் இதர துறைகளிலும் சிகரங்களை அடைந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பின்பற்ற முயற்சி செய்யலாம். ஆனால், அவர்கள் நிலைக்கு உயரவில்லையே என்று குறைபடுவதில் அர்த்தமில்லை. ஒவ்வொருவரிடமும் உள்ள சிறப்புகளை உணர்ந்து ரசிக்கப் பழக வேண்டும்.

● ச.நாகரத்தினம், வாவிபாளையம் அஞ்சல்

? "வடக்கே இருந்து வந்து தமிழனான ராவணனைக் கொன்றான்



● 'பாம்ப்' ஆர்வலர்!

● சபாஷ், டைரக்டர்!



ராமன். அவன் கட்டிய பாலத்தைக் குண்டு வைத்துத் தகர்க்கவும் தயார்'' என்று சொல்லிவிட்டு, ''இப்படிப் பேசியதற்காக என்மீது கேஸ் போட்டுவிடாதீர்கள்'' என்றும் கூறுகிறாரே திருமாவளவன்...?

! அவரால் செயல்படுத்த முடியாத வளமான கற்பனை. பெரியார் முதல் கருணாநிதி வரை பலருடைய நாத்திக வாதங்களை குண்டு வைக்காமலே தகர்த்து விட்ட தமிழக மக்கள், திருமாவளவன் மீது கேஸ் போட்டு கோர்ட்டாரின் நேரத்தை வீணாக்கத் தயாராயில்லை.

● ரேவதிப்பிரியன், ஈரோடு

? டீ.வி. பாட்டுப் போட்டியில் தோற்றவர்கள் அழுது ரகளை செய்தது



✱ அழுகுணி...



✱ ... மாஸ்டர்கள்!

போல், இப்போது 'ஜோடி நம்பர் ஒன்' ஆட்டத்துக்கான போட்டியில் தோற்கும் ஜோடிகளும் அழுது ஆர்ப்பாட்டம் செய்கிறார்களே?

! இந்த நிகழ்ச்சியே நமது பண்பாட்டுக்கு விநோதமானது; ஆபாச எல்லைக்குள் அடிக்கடி நுழைகிறது. சிறுவர், சிறுமிகளையும் இதில் ஈடுபடுத்துவது கொடுமை. இதில் தோற்றதற்காக அழுவது என்பதெல்லாம் அபத்தத்தின் உச்சம். சம்பந்தப்பட்ட தொலைக்காட்சி, இந்நிகழ்ச்சியில் பங்கேற்கும் பிரமுகர்களை மோதவிட்டு வேடிக்கை காட்டுவது என்பது விபரீதம். சிம்புவும் ப்ருத்விராஜும் போட்ட சண்டை நாகரிகமாக இல்லை. இதில் எல்லாம் போய் நாம் மேலை நாடுகளைப் பார்த்துச் சூடு போட்டுக்கொள்வது நல்லதற்கல்ல.

● இரா.சக்கரபாணி, மதுரை

? இசைக் கலையை உலகறியச் செய்ய தமிழிசைப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என முதல்வர் கூறியுள்ளது பற்றி...?

! நல்ல முடிவு. ஆனால், கோடிக் கணக்கில் செலவழித்து, புதிதாகப் பல்கலைக்கழகம், அதற்கு நிலம், கட்டடம் என்று ஆரம்பிப்பதைக் காட்டிலும் ஏற்கெனவே இயங்கும் அரசு இசைக் கல்லூரிகள்; சில தரமான தனியார் இசைப் பயிற்சி அமைப்புகள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து, சிறந்த பாடத் திட்டமும் பயிற்சித் திட்டமும் வகுப்பது சிறப்பாக இருக்கும்.

● மு.பெரியசாமி, விட்டுக்கட்டி

❒ ரூ.100 பரிசு பெறுபவர் :
கோமளா ரங்கராஜன்,
சென்னை - 17

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
கே.கணபதி,
சென்னை - 11

? 'அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்கள் இந்தியாவின் எதிரிகள்' என்று சோனியா காந்தி கூறியிருப்பது பற்றி...?

! பாவம்! சொல்லி வாய் மூடுவதற்குள் 'எதிரி'களுக்குப் பணிந்து மேலாதிக்கத்தை ஏற்று, ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ளும் நிலைமை வந்துவிட்டதே!

● கி.துரைசாமி, ஈரோடு

? நம்பிக்கையுள்ளவன் உலகியல் நாட்டமுள்ள சாதாரண மனிதன். அவநம்பிக்கை உள்ளவன்தானே ஞானி? ('உலகம் மாயம் காண்; பாவை மாயம்... எதுவும் நிலையில்லை' என்பதுபோல் பேசி...)

! உலகியல் நாட்டமுள்ளவனின் நம்பிக்கை சலசலக்கும் ஆறு; ஞானியின் நம்பிக்கை சலனமற்ற ஆழ்கடல். இருவருமே நம்பிக்கை உள்ளவர்கள்தான். ●



யானை மறப்பதில்லை!

விலங்குகளைப் பற்றிய சில மூட நம்பிக்கைகள் நமக்கு உண்டு.

பாம்புகள் மகுடிக்கு ஆடும் என்பதை விஞ்ஞானபூர்வமாக ஏற்க முடியாது. அவற்றுக்குச் செவிப்புலன் கிடையாது. மகுடியின் அசைவே அவற்றை ஆட வைக்கிறது.

ஆனால், யானைகளுக்கு 'நினைவாற்றல்' அதிகம் என்பது விஞ்ஞானபூர்வமான உண்மை. கூட்டம் கூட்டமாக இடம்பெயரும் யானைகள், உணவு தேடி காட்டுப் பாதையில் ஒரே 'ரூட்'டைத்தான் கடக்கின்றன. திடீர் திடீரென்று அந்த ரூட்டில் கிராமங்களோ, குடியிருப்புகளோ, பண்ணைகளோ முளைத்துவிட்டால் அது யானைகளின் குற்றமில்லை! தங்கள் வாழ்விடத்தில் குறுக்கிடும் விஷயங்களை அவை 'உரிய முறையில்' அப்புறப்படுத்திவிட்டு நகர்ந்துகொண்டே இருக்கின்றன. ஏதேனும் ஓர் இடத்தில் மனிதர்களின் எதிர்ப்பையோ, தாக்குதலையோ சந்திக்க நேர்ந்தால் அதனையும் அவை மறப்பதில்லை. இன்னார் தாக்கினார் என்பதை அடையாளம் கொள்ளும் அளவுக்கு நுட்பமான அறிவு இல்லாவிட்டாலும், 'இந்தப் பகுதியில் மனிதர்களால் தாக்கப்பட்டோம்' என்கிற ஞாபகம் யானைகளுக்கு ஆயுளுக்கும் இருக்கும் என்கிறார்கள் விலங்கியல் வல்லுனர்கள். அப்பகுதிக்கு மீண்டும் வரக்கூடிய யானைகள் ஆக்ரோஷமும் கோபமும் மேலிடவே செயல்படும் என்கிறார்கள். இதனால்தான் கூர்க் மாவட்டத்து காப்பித் தோட்டங்களில் (வேறு பல இடங்களிலும் கூட) யானைகள் வருகை என்பது நிரந்தரப் பிரச்னையாகியிருக்கிறது. யானைகள் வழி மறித்து பேருந்துகளையும் லாரிகளையும் நிறுத்துகின்றன. பண்ணைகளை முற்றுகை யிடுகின்றன; பயிர்களை அழிக்கின்றன.

இயற்கையை முற்றிலுமாக வென்று கட்டுப்படுத்திவிட முடியாது என்பதற்கான கம்பீரமான சாட்சியங்கள் யானைகள். அங்குசத்தைக் கொண்டு அவற்றை அடக்கினாலும் மனிதனால் ஆற்றலில் அவற்றை ஜெயிக்க முடியாது; அவற்றின் நினைவாற்றலையும் அழிக்க முடியாது!

தெருவில் மண்டியிட்டுப் பிச்சை எடுக்கப் பழக்கப்படுத்தப்பட்ட யானைகளைப் பார்க்கிற போது குற்றஉணர்வு எழுகிறது. சர்க்கஸில் அவை தங்கள் உடலைக் குறுக்கிக்கொண்டு முக்காலி மேல் நிற்க வைக்கப்படுவதைக் காணும்போது, பச்சிளம் குழந்தையைத் தூக்கிச் சிறையில் வைத்துப் பூட்டியது போன்ற சொல்லொணா வேதனை ஏற்படுகிறது.

சமீபத்தில் நாளிதழ் ஒன்றில் பார்த்த யானைகள் புகைப்படமோ, வக்கிரத்தின் உச்சகட்டத்தை உணர்த்தியது. பிரசவ வேதனையில் ஒரு யானை எவ்வாறு துடித்து இறந்தது என்ற வர்ணனையுடன் இறந்து கிடக்கும் யானையின் படம்; அதனருகேயே, இறந்தே பிறந்த குட்டியின் இன்னொரு படம்...!

'உயிர்களிடத்தில் அன்பு வேணும்' என்று பாரதியார் சொன்னது விலங்குகளை மடியில் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்ச வேண்டும் என்பதற்காக அல்ல; அவற்றையும் மதித்து கௌரவமாக நடத்த வேண்டும் என்பதற்காக.

யானைகள் செய்தித்தாள் படிப்பதில்லை என்கிற துணிவில் நாம் அவற்றை அவமானப் படுத்துகிறோம். யானைகள் மறப்பதில்லை என்பதை மறந்து விடுகிறோம். ○

|ஆ|சி|ரி|ய|ர்|ப|க்|க|ம்|

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.